மிளிர்சிவயோகியர்மென்கரத்தினி
லொளிர்பொருட்டானமுழுவந்தளித்தவ
ரளிமிகுமைந்தரோடவனிவாழ்ந்துபின்
னெளிதின்வானுலகடைந்தின்பமெய்துவார். (௫௨)

தழைமுகிறவழ்முடிச்சையமால்வரை
யுழையினின்றிழிவதொள்ளொழுக்கஞ்சான்றது
குழைவுறீயிடரருங்குடையுரீரது
பிழையில்கோதாவரியென்னும்பேரது. (௫௩)

(மேற்படிவேறு).

ஆபவந்தியிலாவணித்திங்கள்பொன்
னேயகிங்கத்திருக்கின்றசெலீஇப்
பாயவன்பிற்படந்துகல்லோர்கொளத்
தூயதானமுங்கலசுந்தணிவினர். (௫௪)

பரவுகங்கையிற்பன்னிரண்டாண்டுகை
ஞரவின்மூழ்கியுறும்பயனெய்துவா
ரரவுசேர்சடையண்ணறிருவருள்
விரவுவாரவர்மேன்மைசொல்வாரெவர். (உஉ)

விண்ணவாஞ்சிகரம்பலமேவிய
வண்ணவான்சையகின்றும்வருவது
தண்ணமார்ந்ததரணிநடப்பது
கண்ணவேணியெனுமோர்கவினதி. (உகூ)

புகரிலீர்ந்திப்பூம்புனல்கொண்டய
னிகல்வலேக்கரஞதிபரின்னமு
கிகரிலிந்திரநீலப்பருப்பதத்
தகமிலங்கணற்காட்டுபுபூசிப்பார். (உசு)

பருவமங்கிமூழ்கிப்பயன்மிக
மருவுகேருபவாசமுஞ்செய்தன்பிற்
பொருவிலார்க்கொளிர்பொன்னுங்கொடுப்பவ
ரொருவுபாசத்தராயின்புறுவரால். (உஎ)

(கோச்சகக்கலிப்பா.)

திங்களுடனுரிஞுமுடித்தென்கயிலைவீற்றிருக்கு
மங்கணனெவ்வுயிருமெளிதரும்போகங்கியடையத்
தங்குமருளான்மாசிமகத்தமைத்ததடந்தீர்த்தம்
பொங்குசுவணங்கொழிக்கும்பொன்முகரியெனுங்குடிஞை. (உசூ)

ஆயிருநதியின்கணம்மாசிமகநாளின்
மாயிருஞாலத்துளபல்வகைத்தீர்த்தமெலாந்தம்பாற்
றோய்பவர்கள்கழித்ததடைத்ததொகுபாவந்தொலைத்திவரான்
பாய்தருமன்பொடிவந்துபடிந்துகளித்தேகுமால். (உஎ)

யாரேனுமந்நதியிலக்நாளிற்படிந்திதழித்
தாரேறுமுடியானைத்தவளநிறப்பொடியானைக்
காரேறுகளத்தானைக்கண்ணேறுகுளத்தானை
யேரேறுமொருமானையேத்தியவெமபெருமானை. (உஅ)

புனிதருளம்புகுஞானப்பூங்கோதைநாயகனைக்
கனிதருமம்பொழில்சூழ்காளத்திமாமணியை
யினிதகவன்பினிற்றுழ்வார்க்கெவ்வகைப்போகமுமுண்டா
முனிதரலில்பேரின்பமுத்தியுமெண்ணையினுறுமால். (உக)

காராருங்கந்தரத்தான்கடைக்கணருள்பெற்றுகெடும்
பாராரப்படைப்பவன்செய்பண்புறுபம்பாநதியி

லேராரந்கான்மூகனுமிலக்குமிவாழ்மார்பினனு
மாராவன்பினின்மூழ்கியாங்கரனேப்பூசித்தார். (கூ0)

திகழ்தருமத்தீர்த்தத்திற்செறிபருவங்கதிர்வார
மிகழ்வருமத்தம்பூரமித்தருநாள்களின்மூழ்கிப்
புகழ்மறையோர்க்கன்னம்விலாப்புடைவீங்கவூட்டிவே
ரகழ்தருபாவத்தினராயலங்குசுவர்க்கம்புகுவார். (கூக)

பையரவிற்கிடப்பானும்பங்கயத்திலிருப்பானும்
கையமர்வச்சிரத்தானுங்கருதுமற்றமரர்களும்
வையகமுமெங்காளும்வணங்கிவழிபடுகரச்
தையலொருபங்குடையதம்பிரான்றிருவதிகை. (கூஉ)

அணிமருவுமங்கரத்தருகுவிரையகிலுருட்டி
மணிகொழித்தமலர்பரப்பிவருங்குடிலாகதியொன்றும்
பிணிதவிரர்கதிக்குலேயிற்பெயர்வீரையெனுங்காளி
திணிதருமன்பாற்பரனேச்சிங்கமதிப்பூரணேயில். (கூங)

பாங்காகப்பதிட்டைசெய்துபன்னுளும்பூசித்தா
ணீங்காமலுயிர்க்குயிராய்நின்றருளுகம்பெருமா
னுங்கார்வத்தவட்கெதிர்தன்னருளுருவக்தோற்றினன்
பூங்கானக்குழல்வீரைபொங்குமகிழ்ச்சியிற்பணிந்து. (கூச)

ஐயனேநினேப்பதிட்டையான்புரியாவணித்திங்கட்
செய்யபூரணேகாளிச்செழுந்தீர்த்தப்புனல்படிந்துன்
மொய்யொளித்தாள்பணிவோர்கண்முழுப்போகதுகர்ந்தீற்றி
லெய்தருமுத்தியுமடையவினிதருள்கவரமென்றாள். (கூரி)

ஆதிநாயகனளித்தானத்தீர்த்தத்தங்காளி
னீதியின்மூழ்குபுதானகேர்ந்துநிமலற்பணிவோர்
மேதகுபோகங்களெலாமிகதுகர்ந்துவீடுறுவா
ரேதமிலந்காண்முடியாதேற்கதிர்வாரமுங்கூடும். (கூசு)

மாதேவனமைத்தருமணிமுத்தாகதிப்புனலிற்
றூதேயுமலர்க்கிழவன்சக்கராயுதக்குரிசில்
போதேயுங்கற்பகக்கோன்பொலியழல்கான்மதிகதிரோன்
றீதேயிலாவிசுவதேவர்வசுக்கண்முதலோர். (கூஎ)

சிலமதியாதிரைகாளிற்றிகழும்விதிப்படிமூழ்கி
மிலமதியச்சடையானேவிருத்தகிரியுடையானேக்
கொலைமலிசூற்படையானேக்குளிர்தருமவிடையானேக்
கலையதள்கொளிடையானேக்கழல்பணிந்துகரைந்தருகி. (கூஅ)

மறைமுடிக்குமெட்டாதமலரடிக்கெம்விண்ணப்ப
முறைதிகழித்தலத்தின்மணிமுத்தாற்றிலிக்காவிற்
பறையுமுயர்வினர்தாழ்ந்தேர்பாதகர்சண்டாளர்மூத
னிறையுமெவராயினுநன்னீராடிநீறணிந்து. (சுக)

அடியவருக்குதவியபொன்னுதியளித்துபவாசம்
படியறச்செய்துன்செழும்பொற்பாததாமரைதாழுவோர்
மூடிவறமுன்னியபோகமுனனியாங்கனுபவித்தின்
பொடிவறுமேலாங்கதியுமுறவருள்வாயென்றிரந்தார். (சூ0)

அறிவுருவப்பெருமானுமவ்வாறேயருள்புரிந்தா
னறியபுனலந்தியக்காட்படித்தவ்வாறியற்றிற்
செறிதருபோகங்களெலாந்தேவர்களுறுமொறுத்தியாம்
வறியமனுகர்ந்தீற்றின்மாண்கதிசார்வதுதெளிவே. (சூக)

(அநுசீராடியாசிரியவிருத்தம்.)

பாட்டிகையளிகண்மூசும்பைந்தழாய்ப்படலைமார்பன்
றீட்டியிலனையவுண்கட்செய்யமாமேனிவியோடுங்
கூட்டமற்றைபர்களோடுங்குடியிருந்தென்றும்போற்றுஞ்
சேட்டொளிசிறந்ததெய்வச்சிதம்பரதலத்தின்மாதோ. (சூஉ)

வடவரைவளைந்தாலன்னமாமதிலுடுத்தமஞ்சு
தடவருமுடிசேர்செம்பொற்றயங்குகோபுரங்கண்மல்கச்
சுடர்விடுமணிகால்யாத்ததூத்தசும்பனேகந்தாங்கி
யிடர்தவிர்ந்துலகமுய்யவிலங்குமாலயத்துள்ளாக. (சூங)

பொலிதருமலர்க்கொம்பன்னபுகழ்ச்சிவகாமித்தாய்க
ணெலிதருகளிப்பின்மூழ்கவுத்தமனடஞ்செய்செம்பொன்
மலிதருசிற்சபைக்குவடபாலுள்ளதுகண்டோர்க்கு
நலிதருபாவம்போக்குகாமவான்றீர்த்தமொன்று. (சூசு)

சிறக்குமத்தீர்த்தத்தின்பேர்சிவகங்கையென்பர்யாரு
மறக்குழவிடையான்றற்கொப்பதிகமின்ரெளரிருமாபோ
லுறக்குமத்தீர்த்தமூன்றற்கொப்புயர்வின்றியென்று
நறச்குருமலர்கண்மல்கநூற்றடவடிவாய்மன்னும். (சுஙி)

பங்கயத்திருக்கைவேண்டிற்பாம்பணைக்கிடக்கைவேண்டிற்
கொங்கலர்சற்பகப்பூங்கொழுநிழலமர்கைவேண்டிற்
பொங்குமற்றுள்ளபற்பல்போகமும்புணரவேண்டிற்
செங்கனகச்சேபானச்சிவகங்கைமூழ்கல்வேண்டும். (சுசு)

நினைதருங்கல்விவேண்டினெம்பொருட்செல்வம்வேண்டின்
மனைவளஞ்சிறக்கவேண்டின்மாண்புடைப்புதல்வர்வேண்டிற்

கணபுகழ்வீரம்வேண்டிற்காசினிபுரக்கவேண்டிற்
றனங்கரிலாதசீரத்தடம்புனல்படிதல்வேண்டும். (கூஎ)

படர்கொலைப்பழிகள்ளுண்டபாவம்பொற்களவிற்றீங்கு
தொடர்செய்பாதகங்கண்மற்றுந்தொலைத்திடுந்தொழுவேகுண்ம
கூடர்மூடக்கிடந்தீச்சூலைகொடுமைகாதரமுன்னெய்க
ளிடர்புரிபவநோயோடெரியுமத்தடந்தோய்வார்க்கே. (கூஅ)

விண்ணவரம்பைமாதர்விஞ்சையரியக்கர்சித்தர்
தண்ணமைகருடரேகாந்தருவர்தைத்தியர்மற்றுள்ள
வண்ணலங்கணத்தினோர்களனைவருமன்பினென்று
மண்ணவரொடும்விராவியவங்குநீராடலோவார். (கூக)

மறவியிற்படிந்தோருக்கும்வயங்குபல்போகமீத்துப்
பெறலரும்பேரானந்தப்பேறுநண்குசவத்தீர்த்த
பிறலிலதாகியென்றுபிரிருக்கவுமென்னைபாவம்
பிறவியுமொழிபார்செல்வப்பெருக்கமுமுரூர்கில்லோரே. (கூ0)

மலர்தலையுலகிற்றோற்றமன்னியமாந்தர்யாரு
மிலகவங்கெய்திழுஞ்காரெனிற்பயனென்னேகாண்பர்
சூலவுகாவிலர்தருக்கால்கூட்டிச்சென்றுடல்வேண்டும்
வலமிலபங்குள்ளார்நீசர்மனத்துறநினைத்தல்வேண்டும். (கூக)

மன்னுசிற்றம்பலத்துமாணிக்கக்கூத்தனம்பொற்
சின்னகுமளகபாரச்சிவகாமிப்பிராட்டியோடும்
பொன்னவிர்கிறத்தன்வேதன்புத்தேளிர்மற்றோர்சூழப்
பன்னுமாகத்துமாகம்படிந்தருள்வானதீர்த்தம். (கூஉ)

அத்தருமாகவாய்க்காலத்தீர்த்தம்படிந்தானை
முத்தமர்க்குதவியையனுண்மையார்கடனம்போற்றி
முத்தர்சொன்மூலட்டானமுன்னும்வந்தனைசெய்தேத்தும்
வித்தகர்பெறுபேறெம்மால்விளம்பலாந்தரத்ததன்றால். (கூங)

கோச்சகக்கலிப்பா.

ஏத்திசையும்புகழ்தில்லைக்கீசானப்பெருந்திசையிற்
கத்துமறிதிரைப்புணரிக்கரைக்கணெர்யோசனைநீள
மொத்தவகலமுமுடைத்தாயும்பர்தொழப்படுவதாய்ச்
சித்தமலமகற்றுகுய்யதீர்த்தமெனவொன்றுளதால். (கூச)

பவமறுக்குமத்தீர்த்தப்பண்புரைப்பாரெவர்மூன்னட்
டவமறுக்குமடமையினற்சலபதியாகியவருணன்
சிவமறுக்கிலாதமறைதேர்ந்தவொருவனைச்செருத்தவ்
வவமறுக்கவவனியெலாமலர்த்துமுமையின்வருத்தி. (கூசு)

பத்தியுருவாயபுலிப்பாதமுனிசரணடையா
வுத்தமனேயென்பாவமொழியவருளென்றிரந்தான்
சித்தகலமுனிவனுமத்தீர்த்தமான்மியம்விளம்பி
கத்தமுறும்பழியகலநன்னூலின்விதிப்படியே. (நிசு)

மாகம்வருகொடுநாகநாள்வளர்குய்யதீர்த்தந்தோய்ந்
தேகநாயகற்றொழுதியிரிதருநின்பழியென்ற
லேகைமிகவருணனுஞ்சென்றுரைத்தபடியங்காளிற்
போகியசீரத்தீர்த்தப்புனல்படிந்துநீறணிந்து. (நிஎ)

வம்பலருநறுங்கடுக்கைமாலைதயேழுளானை
யும்பலதள்போர்த்தானையுமையொருகூறுடையானைச்
செம்பவளமுண்டகத்தான்றிருமாலுமறிவரிய
வம்பலத்தெம்பெருமானேயடிவணங்கித்துதித்தனனால். (நிஅ)

பற்றியபாதகத்தோபவநோயுமொழிந்துய்ந்தான்
செற்றவிடைப்பெருமானுந்திருக்காட்சிகொடுத்தருளப்
பெற்றமகிழ்வினிற்பணிந்துபிறங்குமிருகைகூப்பி
யுற்றடியேன்மூழ்கியகாலொண்குய்யதீர்த்தத்தில். (நிக)

படிந்துநினைப்பணிபவர்கள்பவந்தொறுஞ்செய்வினையாவுங்
கடிந்தமலராகினகழல்களுறவருளென்றுன்
பொடிந்துகமுப்புரமெரித்தான்புரிந்தருளினுன்சன்மந்
தடிந்துயர்ந்தாரந்நாளத்தடந்தீர்த்தந்தோய்ந்துபலர். (சுo)

பெரும்புகழாற்றிசைபோயபிரமபுரமெனுந்தலத்தி
லரும்புமரைமலர்க்கிழவனமைத்தருளுமொருதீர்த்த
மிரும்புவியேத்திடும்பிரமதீர்த்தமெனவிலகுமதில்
விரும்பியுரோமசன்மூழ்கிமெய்த்தவஞ்செய்கின்றனால். (சுக)

வண்டிசைக்குநறுங்கமலமாலைதயேட்பிரமன்
பண்டொருகற்பாதியிலப்பகரருந்தீர்த்தம்படிந்து
விண்டவர்தம்புரமெரித்தவிமலனடிப்பூசைபுரிந்
தண்டமனைத்தையும்படைக்குமதிகாரம்பெற்றனனால். (சுஉ)

மதிகதிரையராவிழுங்கவருகாலங்கதிர்வாரம்
பொதிதருபுண்ணியவிவேகாலமிந்நாள்களிற்பொலிமற்
றதின்முழுகிப்பிரமபுரத்தமர்ந்தபிரானடிபோற்றிற்
கதியடைவாரென்பதற்கோர்கட்டுரையும்வேண்டுமோ. (சுக)

இயல்பிரமனுதியர்தம்மிடங்களழிகாலுலே
பெயருதல்சற்றறியாவப்பிரமபுரமேல்பாங்கர்த்
துயர்தவிர்த்தெவ்வுயிர்க்குமருள்சூரியபுட்கரணியென
வுயர்வுபெறுபெருந்தீர்த்தமொன்றுளதுதிப்பியமாய். (சுச)

அத்தகுதீர்த்தத்தின்முனமறைந்தநாள்களின்சூழ்கி
முத்தழலுக்குடையபிரான்முக்கணனென்றறிந்துமல
சித்தமிகையாற்றக்கன்செய்தமகத்திழந்தவெண்பற்
கொத்துமுளைத்திடப்பெற்றுன்குணக்குதயமெழுங்கதிரோன். (கூருி)

இலங்கையிராவணன்மைந்தனிந்திரசித்தெனும்பெயரான்
வலங்கைவடிவாளவலியான்மருவுலகசயங்கொண்டே
யலங்குமணிச்செழும்பொற்றேராகாயவழிகடவி
லிலங்கியமரர்கணடுங்கவிரைந்துசெலுமக்காலை. (கூகூ)

புவிபுகழுஞ்செங்கதிரோன்புட்கரணித்தென்குலேநேர்
கவின்மிகுசெம்மணிப்பொற்றேர்காலூன்றிநின்றதா
லவனுடையதந்தைவிடுமவிரொளிவிமானந்தா
னவவடிவன்கயிலைமேனடவாதுநின்றதுபோல். (கூஎ)

இந்திரசித்ததுகண்டானென்னுமற்றிதுவென்றே
மந்திரத்துந்தந்திரத்தும்வலிந்தாடத்தவநடவா
தந்தரத்துநிற்பதுணர்ந்தகமெலிந்துமண்ணிழிந்து
சுந்தரத்தாங்குறக்கண்டான்சூரியபுட்கரணியையே, (கூஅ)

செம்மலர்செயித்தீர்த்தந்திப்பியமாயிருப்பதனு
ணம்மிரதமிதன்மேனேர்நடவாதுநின்றதென
விம்மிதமிக்குறவுணர்ந்துவிரும்பியதிற்படிந்தெழுந்து
பொம்மன்முலையொருபாகபுண்ணியனைப்புராதனனை. (கூக)

பேராரும்பிரமபுரப்பெருந்தகையையடிவணங்கி
யேராருமிரதமொதுக்குபுடைத்தியேகினரு
லாராதகாதலினத்தடம்படிந்துபொன்னெரிப்போர்
தீராதபாவமெலாந்தீர்ந்துசிவகதிசேர்வார். (எ0)

கிடந்தவரைகளேப்புரட்டிக்கிளரகில்குங்குமந்திமில்சந்
திடந்தவயிரமுமணியுமிருகரையும்வீசிவருந்
தடந்திரைநீர்க்காவேரிசாகரசங்கமம்படிவோர்
கடந்துவினையனைத்துமுயர்கதிக்கரையராயுயர்வார். (எக)

கண்காட்டுநுதலாளர்கங்காளகாபாலர்
புண்காட்டுந்திரிசூலப்புண்ணியருனிதமரும்
வெண்காட்டுமுக்குளநீர்விழைந்துபடிந்தவர்பெறும்பே
றெண்காட்டியுரைப்பவர்யாரிந்நிலத்துமெந்நிலத்தும். (எஉ)

இடைமருதாமிரதீர்த்தமியைதிருத்தானமறக்
கடையறுமங்களவமிசகந்திரிகோடிக்காவிந்
நடையுயர்தானங்களினற்காவிரியிற்கதிர்வார
மடைபருவமூழ்கியரனடிப்பூசையாற்றுனர்கள். (எங)

பவந்தாறுமீட்டியகொடுமாபாதகங்கள்பறந்தொழியத்
தவந்தழைந்துகதியடைவார்சாற்றியவித்தானங்க
ணிவந்தவறமிலரேனுநெட்டிடறப்பால்விடுத்தோர்
சிவந்தழையுஞ்சிறந்தகதிச்செலவுய்க்குமுய்க்குமே. (எசு)

விடமூக்கஞ்சிதைத்தொழியமிளிர்கண்டத்தமைத்தபிரான்
குடமூக்கின்மாமகிர்குடைந்தோருங்கூற்றைவெலத்
திடமூக்கஞ்செயும்பொன்னித்திருத்துறையிற்படிந்தோரு
கடமூக்கமுறச்செயுமந்நாதனருட்கிலக்காவார். (எஞ)

மலர்தலையெவ்வுலகமுஞ்சொல்வன்மீகசைத்திரத்துக்
குலவுபுகழ்பெறுங்கிரகுண்டமெனவொருதீர்த்தம்
வலனுயர்மாலயனதிவானவருந்தொழப்பட்டு
நிலவுபெருஞ்சுவர்க்கத்தினின்றுமவண்வந்ததால். (எசு)

மீனமதியுத்திரநாள்விதிபாதநாள்விழைந்து
நானம்விதிப்படிசெய்துதல்லோர்கொண்மாரியல்பொற்
றூனமுமீந்தொளிராழித்தடந்தேர்வித்தகற்போற்றி
லீனமறுபெருமுத்தியெளிதினடைகுவர்மன்னோ. (எஎ)

வேணுருமத்தீர்த்தமேல்பாலுண்டொருதீர்த்தஞ்
சேணுர்கடொழுந்தேவதீர்த்தமெனச்சிறந்ததது
னேணுரமொருமகவானேன்தெழினல்லயிராணி
பூணுரந்தாங்குமுலைப்போகமுதலியவெறுத்து. (எஅ)

பருவங்கடோறும்விதிப்படிமூழ்கிவன்மீக
மருவங்கணனிதமும்வலஞ்செய்துவழிபட்டன்
புருவங்கொடகையோணியாராண்டுகழிந்ததற்பின்
றிருவங்கொள்பேரின்பச்சிவகதிசென்றடைந்தனனே. (எகூ)

மிக்ககதிர்வாரமேவிளங்கிடும்யாழேகண்ண
பக்கமேயட்டமியேபங்குனியுத்திரகாளே
தக்கவிக்காள்களினத்தடந்தீர்த்தம்படிந்தாடி
யெக்கலியுமுணர்ந்தோருக்கினியதானமுமீந்து. (அ0)

பூங்கோயிற்கற்பகத்தைப்புற்றிடங்கொண்மாமணிலையப்
பாங்காகினவருட்பரந்தொளிர்தூண்டாவிளக்கை
நீங்காமலுயிர்க்குயிராய்நின்றருளும்பரம்பொருளை
யாங்கார்வத்தொடும்பணிவோரடைவரருங்கதியெளிதின். (அக)

(கலிநிலைத்துறை.)

சீலர்போற்றியஞ்சேதுவிலொருமகாதீர்த்தஞ்
சாலமற்றதன்பெருமையார்சாற்றிடுந்தரத்தார்
மாலைதாழ்முடிமன்னவன்றசரதன்மைந்தன்
வேலைநீர்ப்புவியேத்துமேதகும்புகழிராமன். (அஉ)

இராவணுதியர்தமைச்செகுத்திட்டவெம்பாவம்
விராவலான்மதிமயங்கினன்முனிவரைவிலுவிக்
குராநறுங்குழற்கொடுநுதற்கொடியிடைச்சனகி
மராமரம்புரைதோள்வலியிலக்குவன்மற்றை. (அக)

அடர்க்கும்வானரப்படையொடுஞ்சேதுவையடைந்தான்
சுடர்த்தொடித்திருவொடுமன்பிற்றீர்த்தநீர்தோய்ந்தான்
மடற்கருங்குழலுமையொடும்வரதர்வீற்றிருக்கு
மிடத்தடைந்துறுப்பெட்டினுமாறினும்பணிந்தான். (அச)

தெய்வநாயகன்முடிமிசைச்செழும்புனலாட்டி
யையிராவியமலர்முதல்கொண்டருச்சித்தான்
மொய்விராவுபாதகமொழிதரவருண்முகந்தான்
சைவனுகியவெறுழ்வலித்தடஞ்சிலையிராமன். (அடு)

மாயனுன்முகன்வருந்தியுங்காணருமணியே
பாயநான்மறையந்தத்துவிளங்குபொற்பத்தாய்
சேயனுமெளியேனுநின்றிருவடிக்கன்பு
தோயநின்னருட்குறியருச்சித்தனன்றுணிந்து. (அசு)

அடியர்வேண்டியவேண்டியாங்களிக்குமாரமுதே
படியில்யானருச்சித்தவிவ்விலிங்கமும்பைம்பொற்
கொடிகொள்கோயிலுநகரமுமென்பெயர்கொண்டே
கடிதலின்றிகாடொறும்விளங்கிடக்கடைக்கணிப்பை. (அஎ)

அரியநின்றிருவடிக்கென்றுமன்புறவருள்வை
பெரியவாவெனவிரந்தனனளித்தனன்பெருமான்
றுரிகில்சேயுயர்தம்பியுஞ்சீதையுந்தொடரத்
தரியலார்முரணவிமதிலையோத்தியைச்சார்ந்தான். (அஅ)

பகருமேன்மையத்தீர்த்தமாதிரைவிபாதந்
திகழுமாதிவாரங்கதிர்மதியராத்தீண்டும்
புகரிலுள்புகர்வாரமிர்திரவியிற்புருநா
மெகளில்பூரணமுதன்மற்றைவிசேடநாட்டோய்ந்து. (அகூ)

நலம்விராவுவேதியர்க்கொளிர்பொன்முதனல்கித்
திலகவாணுதன்மலைவளர்காதலித்தேவை
நிலவுலாஞ்சடைநின்மலக்கொழுந்தினைநினைவோர்
மலமசற்றிராமீசனைவழிபடுவார்க்கு. (கூ0)

தீர்விலாதபாதகமெலாந்தீர்ந்திடுஞ்சிறக்கு
மார்வமாமகப்பேறுமுற்பேறெலாமடைவார்
கார்விராவியகந்தரக்கடவுடன்கழல்சேர்
சீர்வுலாதபேரானந்தவின்பத்துந்தோய்வார். (கூக)

இன்னுமோர்மதியப்புனன்மூழ்கியின்ரூன
மன்னுமாகொடுத்திராமலிங்கத்தையும்வணங்கி
லுன்னுமாறறிந்தியற்றுபொற்களவுகள்ளுண்ட
றுன்னுவெங்கோலப்பழிமுதற்பாவமுற்தொலையும். (கூஉ)

ஆதிர்த்தகானத்திலுன்முத்தியையடைந்தோர்
ஆயவேண்டிடினளவிலர்வகுப்பவர்யாரே
காயமும்புகழ்தீர்த்தமின்னமுங்கணக்கின்ரூற்
காயம்வாட்டியதவத்தினீர்சொலிற்கடையுரூதால். (கூக)

உரைசெயித்தருதீர்த்தமான்மியமுவப்பூறப்
புரையிலாதவேதாகமம்புகலுமற்றிதனை
கரைவெள்ளேற்றுவண்கொடியுயர்த்தருளியகம்மான்
விரைகறுங்குழலுமைக்கினிதுறவிரித்துரைத்தான். (கூச)

அண்டம்யாவையுமீன்றசிற்றுதரத்தெம்மன்னை
விண்டலூர்முதறடிந்தவேல்விழித்தகற்குரைத்தாள்
வண்டலம்புபூங்கடம்பணிவவிமலிதோளான்
ரெண்டனுய்த்தொழுதேத்துகான்முகனுக்குச்சொன்னான். (கூரி)

எரியவிழ்ந்ததொத்திலங்குசெந்தாமரையிருப்போன்
கரிசிலாத்தவவாதராயணனுக்குக்கரைந்தான்
விரியுமெய்வழிபாடுகண்டெனக்கவன்வீளம்பப்
பெரியமாதவத்தீர்த்தமக்கின்றுபேசினன்யான். (கூசு)

நீவிருங்கண்மாணைக்கருக்கினிநிகழ்த்திடுமின்
ரூவிலாதவித்தீர்த்தமான்மியமெவன்றழுவி
யோவிலாதறப்படிப்பவனவன்முத்தியுறுவான்
மேவிரும்புனற்சிராத்தஞ்செய்காலத்துவிரும்பி. (கூள)

பளகிலாதபாராயணஞ்செய்பவன்படரும்
வளகிலாவியபோகமெலாம்பெற்றுவாழ்வா
னளவிலன்பினிற்சிரவணஞ்செய்துகொண்டமலன்
கிளரும்பொன்னடியருச்சிக்குங்கீர்த்தியினுர்க்கு. (கூஅ)

பொருந்துமுத்தொழின்மூவரும்பேரருள்புரிவார்
திருந்துதம்பிரான்றிருவருட்பேறுசிந்தித்துக்
கருந்தடங்கட்டேவகிமைந்தனுகியகண்ணன்
வருந்திலாதினும்பாராயணஞ்செய்வன்மற்றிதையே. (கூக)

சினமறக்கடிந்துயர்ந்தமாதவத்தினீர்தேர்மி
னெனவுரைத்தனனுங்குன்றெழுந்தனனிமையோர்
கனவிடத்துங்காணரியவன்பெரியவன்கங்கைப்
புனன்முடிப்பரன்கயிலையுற்றனன்புகழ்ச்சூதன். (கஅ)

கந-வது தீர்த்தமான்மியமுரைத்த
அத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் கந-க்குத் திருவிருத்தம் சகூச.
பாயிரமும் விநாயகர் துதியு முட்படத் திருவிருத்தம் நிசநி.

முதலாவது சிவமான்மியகாண்டம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் நிசநி.

சிவமயம்.

இரண்டாவது
ஞானயோககாண்டம்.

முதலாவது
ஞானயோகத்தை யுணர்ந்தவாறுரைத்த
வத்தியாயம்.

விநாயகர்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்).

பொருள்படுபிரணவத்தின்பொருளொருதானேயென்று
மருள்செறிமனத்தினுரும்வயங்குறவுணர்பாக்கம்பொற்
சுருள்விரிகடுக்கைவாசத்தொங்கல்செஞ்சடையிற்சூடி
மருள்பொழிமுக்கணுல்வாயைங்கரக்களிற்றையுள்வாம். (க)

(மேற்படிவேறு.)

பரன்.

மேலாயவறுசமையர்விளம்புபொருள்களுமாகிவேறுமாகிகாலா
யவாரணமாகமதவிலுங்குறிகடந்தகலத்ததாகிச், சேலாயதிருகெடுங்
கணன்னேயுமத்தனுமாகிச்செறிதேவாவாது, பாலாயவெவற்றுநிறைந்
தொளிருமொருபரம்பொருளேப்பற்றிவாழ்வாம். (உ)

பரை.

ஓங்குபராபரையாதிவிருப்பறிவுதொழிலாகியொப்பிலின்பம்,வீங்
குபரபோகமுதவுங்கருணையுருவாகிவிசுத்தாசுத்தத், தேங்குதனுமுத
லொருகான்குஞ்சுமப்பவுபாதானத்திரையமேவிப், பாங்குபெறுமொ
ருமுதலாய்நின்றருணின்மலசிவையைப்பாடியுய்வாம். (ங)

விநாயகர்.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

அண்டர்தம்பெருமான்சடைமுடிப்பிறையோடம்மை தன்குழ
ன்மணிப்பிணிறையத், தண்டையங்குறுத்தாள்பெயர்த்தருகணைந்து
தடங்கரத்தெடுத்துச்சேர்த்துக், கண்டவர்மூழுமாமதியெனவியப்
பக்கனிவினன்காட்டுசெய்கீற்றுப், புண்டரநுதற்குஞ்சரமுழக்கன்று
பொலிந்தெனத்தளங்குடிகொளுமே. (ச)

முருகர்.

தெண்டிரையுததிபுடையுதித்தோங்குஞ்சீர்வளருலகனன்கேத்து
மண்டர்தம்பிரானுமிடத்தில்வாழ்த்திலகு மம்மையுஞ்செவ்விழிகளி
ப்பத், தண்டையுஞ்சிலம்புமிணையடி யொலிப்பச்சார்த்துமற்றவர்நடு
வமரு, மண்டமுழல்கதுவுஞ்செய்ய வேற்கரத்துவரதனெனிரதமேத்தெடு
ப்பாம். (இ)

(கலிநிலைத்துறை.)

தாமரைக்கிழவன்றுளவணிதடம்புயத்தா
ணமவச்சிரப்படையினன்மற்றைவிண்ணவர்க்கு
மேமமிக்கபல்வரமெலாமினிதுவந்தளித்துக்
காமர்மூக்கணனிருப்பதுவெள்ளிவெண்கயிலை. (ஈ)

பாழிமாமலர்ப்பண்ணவனுறைதருபதமு
மாழியேத்தியகுடங்கையானமர்பெரும்பதமும்
வாழிமற்றைவானவர்பதங்களுமிறமருவு
மூழிதோறுமிக்கோக்கமுற்றெளிர்வதவ்வோங்கல். (உ)

ஆழிவண்குளப்புனன்முகிலுழவர்கால்யாப்ப
வாழிமன்னுயிர்ப்பயிர்தழைநிலச்செறுமலர்ந்த
பாழிவெண்மரைமலர்திருக்கயிலைநம்பரன்றேன்
வீழ்வண்டினமான்முதல்விண்ணவர்முனிவர். (ஊ)

ஆகில்பொன்வரைமுதலளவிலவிருக்கவும்வெண்
டேகிம்மால்வரையிடைப்பரன்விருப்புறச்செய்தல்
பூசுநீறணிமதிநதிபொலிவிடைக்கேற்ப
வீசுகன்னிறமிகவிளங்குதல்பற்றிப்போலும். (எ)

பற்பலுயிரில்கொளப்புரியுதவிபாரான்மால்
வெற்பிலுற்பலரொடுங்கலக்கினனிவன்விரும்பி
யெற்பணிந்திடவாவனென்றிரும்பயப்புணரி
பொற்புறத்திரண்டெர்ந்தூநிற்பதுபொரூஉமதுவே. (ஏ)

கடல்குழிந்திடப்புவனமுண்டெழுசெழுங்கருங்கார்ப்
படலமீமிசைப்படிதரப்பொலிந்தெனிரபான்மை
யடல்கொடன்னிடத்தமர்தருமண்ணல்போற்றுறு
முடலும்வெங்களிற்றுரியதள்போர்த்ததையொக்கும். (ஐ)

உவந்துவானவர்மங்கையரடியொழுகருவிக்
கவந்தமாடவன்றீர்மூலக்குங்குமங்கலந்து
சிவந்துகாட்டன்முன்னரக்கன்மெய்நெரிதலாற்செந்நீர்
நிவந்துமேலெழீஇச்சூழ்ந்திலுநிற்பதுநிகரும். (ஒ)

இயலுமெங்கிறமுந்தொழுமுதனிறவியல்புற்
றுயர்வுமொப்புமிலாதவனுமையொடுமுறையு
நயமுமோர்ந்துமெய்மகிழ்வினன்கானந்தக்கண்ணீர்
வியமுறப்பொழிவதுபொரூஉமருவியின்வீக்கம். (கஉ)

அடியினன்பொருஞ்ந்திமெமரர்களம்பொன்
முடியின்மாலைகள்சிந்திச்சூழ்முடங்குபுகிடப்பப்
படியிலெண்டிசைப்பணிகளும்பரன்புயப்பணியாங்
கடியியைந்திடச்சூழ்ந்தருந்தவஞ்செயல்கடிக்கும். (கச)

என்னமாதவஞ்செய்வவிப்பணிகளென்றுணர்வான்
பொன்னவாந்திருமேனியான்சடைப்புயங்கங்கண்
மன்னுபல்வழிக்கொடிவிரைந்திரங்குபுவரல்போற்
பன்னுமாமுடிநின்றருவிகள்பலவிறங்கும். (கரு)

நலந்தவாவடிவரைப்புனலாடிவிண்ணுட்டுப்
பொலந்தவாதமெய்நங்கைமார்வரங்கொளும்பொருட்டுக்
கலந்தவன்பொடிவிரித்தசெங்கரங்களுங்கவின
வலர்ந்தகாந்தளும்வேற்றுமைதோற்றிடாவாங்கண். (கசு)

அடிவணங்கியகருங்கியவமரர்மோலிகளிற்
பொடிவயங்குசாதனச்சயிலாதிதன்பொற்கைப்
படியில்வேத்திரந்தாக்கலிற்சிதர்மணிபரந்து
கடிகுலாவமணிவரையென்னவுங்கதிர்க்கும். (கஎ)

பருவமாமதிமுடிமிசைத்தவழ்தொறும்பணிக்கு
வெருவுறுமுருவேற்றுமையுணர்கிலாதென்றே
கருணையாளியச்சிலம்பிமங்கைரவார்க்கு
மொருவிலாதவெப்பகையும்விட்டொருவுதலுணரான். (கஅ)

புனிதனுரொடுசேவிக்கவந்தவான்பொழிந்த
வினியபால்சுனைபாய்ந்திடப்பிரமனூரெகினங்
கனிவினீர்பிரித்துண்டுவக்குங்கருதயிரு
மனியநீள்பெரும்போகத்திற்களித்திடன்மறந்து. (கக)

பொறியடக்கமும்போகுகாலின்மையும்பொருந்தி
நெறியின்வந்ததேயுண்டுகேந்தரன்தொறுநிலவுங்
குறிகொள்யோகியர்தங்கிகர்த்தாரெனக்குரித்துச்
செறியுமாமணிப்புறவிளக்கிடுஞ்செழும்பணிகள். (உ0)

சித்தர்கின்னரர்கருடர்காந்தருவர்கடேவர்
முத்தர்யோகியர்பன்னகர்சுருதிமாமுனிவர்

பத்தர்தானவர்பாரிடரின்னுமற்றுள்ள
சுத்தர்வாழ்த்திடுபேரொலிதூங்குரூதென்றும். (உக)

வினையமுற்றபன்னூலுணர்ந்துணர்வின்மிக்குரையாற்
புனையவல்லவரும்புறங்கொடுத்திடப்பொலியு
மினையபேரெழிற்கயிலையினிலங்குமோர்கோட்டி
னனையவார்பொழிலொன்றுநன்றுள்ளதுமாதோ. (உஉ)

(அருசீரடியாசிரியவிருத்தம்.)

இனிதுறமணந்துதண்ணெனிறிர்த்துவெப்படைந்துளார்க்குக்
கனிமகிழ்சிறப்பநல்கிக்கலப்பினின்றகலவொண்ணுப்
புனிதவின்பமுமளித்துப்புகழுறப்பொலியும்பொங்கர்
பனிமதிமுடித்தவேணிப்பகவனூரருளேமானும். (உக)

சுடர்செய்தண்மலர்கள்செற்றிச்சுவைமதுப்பிலிற்றியென்று
மிடரகல்குளிர்ச்சிகாலுமிப்பொழிலின்றேயாகிற்
படர்சடைப்பெருமானன்றுபாற்கடலுதித்ததீமை
யடர்விடமுண்டவெப்பமாற்றுதலரிதுபோலும். (உங)

நூக்குரூமானம்பொங்கநோண்டுநெய்வாக்கிமேன்மே
லாக்குபுமுனிவர்விட்டவுமகத்தழலெயண்ண
னீக்கிலான்குடங்கையேற்றுனினைத்திடுவார்க்கும்வெப்பம்
போக்கிடப்பொங்காற்றும்பூங்குளிருணர்ந்துபோலும். (உசு)

சலியுறத்தளிர்த்துப்பூத்ததடப்பெருங்கணிகளெல்லாம்
புவிபுகழ்வள்ளிக்குன்றப்புனத்திறவுளர்கோனீன்ற
குவிமுலைக்கொவ்வைச்செவ்வாய்க்கோற்றொடியுவகைபூப்பக்
கவினுறமுனைத்தசெய்வக்கணியையேயிகர்க்குமாதோ. (உஎ)

பற்பலவண்டமுற்றும்படிவத்தின்மருவாநிற்பப்
பொற்புறநிற்குமேலாம்புருடனேபுரையவெங்கும்
வற்புறுபைங்காய்மல்கவானமுங்கீண்டுமேல்போ
யற்புதம்பயப்பயார்க்குமதவுகணிற்குமன்னே. (உஏ)

கற்பினிற்சிறந்ததெய்வக்காரைக்காலம்மையார்தஞ்
சொற்பழுதுறுமன்முன்னர்ச்சுடர்மதிவேணியண்ணல்
வற்புறக்கொடுத்தநற்றேறமாங்கனிபாதவங்கள்
பற்பலசெறியச்சோலைப்பழுத்தமாங்கனியேபோலும். (உஐ)

தருமரத்துறையிற்பட்டுச்சரத்திற்சம்பந்தர்க்கைய
னருமணிச்சிவிகைகாளநற்குடைபந்தர்நல்கத்
தொருகதிர்மணியச்சோலைசூழ்வேயின்றனவேயுண்மை
மிருதியப்பரமன்பாற்போய்விளையுணர்ந்திடுதலம்மா. (உகூ)

தந்திமாமுகத்துவள்ளறடவரைகீண்டவேற்சேய்
வந்தியாகின்றுதந்தைமாண்மரக்கனியைக்கொள்வான்
முந்தியாதரவின்மேன்மேன்முயன்றனர்வலஞ்சூழ்ந்தார்வா
னுந்தியார்சினையப்பொங்கருட்புகுந்ததியார்போலும். (கo)

வெண்மலர்துவன்றிவண்டுவிரிசினைதோறுமொய்ப்ப
வுண்மலர்தேனுறைப்பவுங்குகின்றிடுமராக்க
டண்மலர்நீறுபூசித்தயங்குகண்மணிகள்பூண்டு
கண்மலருறைப்பநிற்குங்கரிகின்மெய்யன்பர்போன்ற. (கக)

தலைவிரிதாழைமீப்போய்த்தயங்கிடுங்காட்சிமற்றை
நிலையுடைத்தருக்கட்பாராகிகர்த்திடுரெம்மைநீயிர்
மலைமகள்கொழுநன்முக்கண்வாய்த்தவெஞ்சினையாங்காய்க
ளிலையுமக்கதனுல்யாமேயேற்றமென்றுவத்தல்போன்ற. (கஉ)

வளர்ச்சியொன்றன்றிச்சில்லோர்மருவினுழலியாத்
தளர்ச்சியிரெங்குங்காயாத்தரத்திரென்றெளிர்த்தல்போலக்
கிளர்ச்சிகொடென்னப்பாங்கர்க்கெழுநிழல்பலர்க்குமீத்து
விளர்ச்சியில்கனிவேர்முன்னுமிகக்கொடாசினிவிளங்கும். (கங)

இன்சுவைக்கனியாலொத்தீரெனினுமுட்குற்றமுண்டு
மின்செய்மங்கலத்தினம்போன்மிகுமுபகாரஞ்செய்யீ
ரென்செயனுமக்கென்றீரப்பலாக்களோடெதிர்ப்பவேபோல்
நன்குலக்கதலிபல்லரலந்தழைந்துயர்ந்துநிற்கும். (கச)

கருவுயிர்த்தொடுங்கிமாயுங்கழிதற்பறியார்யாரே
பருவமென்கதலிகாண்மென்பழக்குலபலவுயிர்த்து
மருவிலேமொடுக்கராளும்வயங்குமெனக்கர்ச்சூரம்
பொருவிறம்முயர்ச்சிகாட்டல்போற்பொலிந்தோங்கும்பல்ல. (கரு)

அறந்தழையுமைபாகன்கையணிகனியருளும்யாமே
சிறந்தனமென்றுள்ளோகைதேக்குதேந்தாடமங்க
ணிறந்தழைந்தினிமையார்ந்துநிழல்படப்பொதுளிநிற்கு
முறந்தபல்சமயத்துள்ளமுத்தமசைவமேபோல். (கசு)

இருள்படமலர்ந்தகாயாவினங்களாங்காங்குநிற்றன்
மருள்படுமனத்தோர்க்கெட்டாவளம்பொழிற்செல்வநோக்க
வருள்படுமாயரெண்ணிலாதவராங்குவந்து
தெருள்படநோக்கிச்சிந்தைதிகைத்துநிற்பதனேயேய்க்கும். (கஎ)

பொன்னிறம்புறங்கொடுப்பப்பூத்தணிநீழல்வாய்ந்து
நன்னர்மாமன்றல்வீசிநலங்கெழுகடுக்கைநிற்ற
லுன்னுசெந்நீறம்விளங்கவுயிர்க்கடிநீழல்செய்து
தென்னருண்மணப்பநிற்குஞ்சிவபிரான்பொருவுமாலோ. (கஅ)

பூத்தகிஞ்சுகத்தின் மூழ்கிப்பொற்றளிரசோகுநிற்றன்
மாத்தலைபறிக்குமூத்தைவாயருகர்த்கூடி
யேத்துரையொழித்திடும்பாக்கிருஞ்சிகைத்சழலுண்மூழ்கித்
தூத்தவம்புரியாநிற்குந்தோற்றமேயொத்ததம்மா. (நக)

கொடியிடையருப்புக்கொங்கைக்குலமலர்முகம்வாயங்கை
யடிநறுந்தளிர்மாமேனியமைப்புயப்பொங்கர்மங்கை
படியில்செம்பட்டுடுத்தபான்மைபோல்வேலிமுற்று
மடிவிலொண்செவ்வரத்தமலர்கள்பூத்தொளிருமாதோ. (சo)

இசைகொளவ்விடஞ்சார்ந்தின்பமெவ்வகையுயிருந்துய்த்து
வசையுறுமீறிலாமைவயங்குதலுணர்ந்தமென்னே
திசையெலாங்கமழப்பூத்தசெண்பகமூசாவண்ட
ரசைவிலாற்கண்பர்சாத்துமலரெனவறிந்துபோலும். (சக)

மருத்தகுகூந்தற்செவ்வாய்வாணுதற்பிராட்டியோடு
கருத்தபுமேனியண்ணல்களிப்பின்வந்துலவுங்காலைப்
பெருத்திடுமகிழ்ச்சிபூப்பப்பெரும்பொழினிலத்தேர்பல்ல
திருத்தகவணிந்தாலென்னச்செருந்திகளலர்ந்துநிற்கும். (சஉ)

பழியறுபொழிலெலாந்தன்படைக்கலச்சாலையாகக்
கழிமகிழ்சிறப்பக்கொள்ளுங்கருப்புவிற்சுருப்புகாணு
னெழில்செயப்பொழில்புக்குள்ளவிறும்பூதுகோக்கித்தாழ்ந்தாங்
கொழிவறமலர்ந்தகாஞ்சியொண்மையிற்குரங்குமோர்பால். (சங)

அடும்பழிபாவம்போக்கியறத்தாற்றிற்பொருளீயீட்டிக்
கடும்புழனெவர்க்கும்பாத்துக்களிப்பினுண்டுவக்குஞ்செய்யோன்
மடங்கலில்வழியேபோலமண்டிப்பற்பலகிளைத்துத்
தடங்கலிலாதுபைத்துத்தழையுமாதவிகளோர்சார். (சச)

கொவ்வைவாயெம்பிராட்டிகொங்கைபோலரும்புதோற்றிச்
செவ்வியபெருமான்மேனித்திருநிறமலர்ந்துபின்ன
ரவ்விருவரும்வைகற்காமனேயுறக்காய்க்குமென்னு
லொவ்வுமோகோங்குசெய்தவுத்தமதவத்திற்கொன்று. (சரு)

ஆயிடைத்தவஞ்செய்வோர்களடிக்கடிமூழ்கவைகும்
பாய்புகழ்த்தடப்புனற்குப்படர்மணமுண்டேயென்னக்
காய்கதிர்மணியெறிக்குங்கரைவளர்பாடலங்கள்
சாய்கினதையப்பூத்ததண்மலருருக்குமன்னே. (சசு)

வளம்படுகயத்துப்பூக்கண்மலர்ந்துபிற்கூம்புமென்று
விளம்புவர்வரையின்சால்பால்விளங்குமத்தடத்துள்வைகுந்
தளம்படுபதுமமாம்பறழையுமுற்பலங்கண்மற்றுங்
களம்படக்குவிதலின்றியலர்ச்சியேகாட்டுமென்றும். (சள)

மேவரக்குவிதல்பின்னர்விரிதலற்றொளிரப்பூக்கள்
கேவலசகலநித்தகிளர்ச்சியோர்தன்மைதேற்று
மாவயிற்பயிலனங்களளவிலாப்பிரமரூர்பொற்
றாவிபவனங்களெல்லாந்தொழுதெழக்களித்துவாழும். (கஅ)

பூமருவியகார்க்கூந்தற்புனையிழையெம்பிராட்டி
காமருசாயலேய்க்குங்கலவமாமயில்களோர்சார்
தேமருமொழிபோற்பேசுஞ்சிறைப்பசுங்கிளிகளோர்சார்
மாமருவுண்கணெனத்துவாவிடுமான்களோர்சார். (சக)

ஆளர்திடற்கரியபெம்மானவிர்முடிக்குரிமைமிக்க
வளர்தவத்தெரிக்குமாபோன்மற்றவனையனம்போலுந்
தளர்திடாச்சூலம்போலுந்தண்டளிர்பொதுளிநிற்குங்
களர்திடிமிச்சாஞானக்கிரியையாய்க்கெழுமுவில்வம். (கo)

தரைபுகழ்மலயக்குன்றச்சந்தனவிசாலன்பி
னுரைபெறுகயிலைக்குன்றத்தொளிருமப்பொழிற்சூளரும்
வரையறைசெய்தனுப்புமாணிறையென்னமென்பூ
விரைகமழ்குழவித்தென்றல்விருப்பின்வந்துலாவுமாலோ. (கக)

மூவருமுவழுத்தவைகுமுதல்வனுர்கயிலாயத்திற்
றேவருமணுகொணுதசெழும்பொழில்வளப்பம்வல்லோர்
யாவருமுடிவுபோகவியம்பிடமாட்டாரென்னிற்
றூவருமடமையேனுசாற்றிடுக்குதியுள்ளேன். (கஉ)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

இனையவார்பொழிலே யெய்தியோரிடத்திலின்பமார்தரு சுகாச னத்தில், வினையெலாங்கடியும்வெள்ளியகிறு மிளிருங்கண்மணியு மெய்வினங்கத், தனையொவ்வாப்பரன்றூளுன்னிகன் கிருந்தான்றவ மலிசூதனக்காலே, நனையகாண்மல ரொண்டளிர் கனிதுவன்றுகை மிசாரணியத்தினிருந்த. (கங)

விட்டிணுவிருத்தனல்விசாலாக்கன்வினங்கிவெச்சகுண்டினனே
முட்டிலன்புடைச்சாபாலனுருணியேமுயல்சமதக்கினிசடரன்
மட்டிலாத்தவச்சங்கமன்செயன்பக்கன்மகாக்கிரீபன்மகாகாயன்
கட்டுரைப்பாசதரன்மகோதரனேகருணன்பாரகன்மகாவாகு. (கச)

காலனுத்தாலகன்மகாசேனன்காணனுமலகப்பிரியனே
சிலமாசார்த்திரன்றிரிபாதன்றிகழ்தருமுக்கிரவீரன்
நூலமேத்தேதகபாதனேபதுமநாபனேநற்றுவிபாதன்
கோலவுத்தமானுத்தமன்மகாவீரன்கோதில்கைவல்லியன்மாதோ. ()

கங்கணன் காலாக்கினியுருத்திரன் கல்லாரனேகளாதரமுனி வன், மங்கலில்சுவேதாச் சுவதரன்சுவேத வாகுமா முனிவன் பற் றூரும், பங்கமிலிவர்மாணக்கருங்கூடிப் பாசத்தைநாசஞ் செய் பாக்குத், துங்கமார்கயிலை யடைந்தனர் தொழுதார் சோலையுட்புகுத் தனர்மாதோ. (நிசு)

செஞ்சடாடவியும் வெள்ளியதீறுந் திகழுருத்திராக்கமுந் தரி த்து, விஞ்சுமாமறையாகம புராணங்கள் விளங்குறு மருத்தமோரு ருக்கொண், டெஞ்சலின் றிருந்தாலனைய தூயவனை யிருந்தவத்தலை வனைக்கமையே, துஞ்சியமனத்தினருள் சுரப்பானைச் சூதமாமு னிவனைக் கண்டார். (நிஎ)

தண்டெனவீழ்ந்தா ரஞ்சலிகுவித்தார் தண்ணரு நிறைதரவு ண்ட, வண்டெனக்களித்தார் தோத்திரவின்சுர் வாருதிபருகிய மங்குல், விண்டெனக் கண்ணீர் பொழிந்தனர்சூத மெய்த்தவதிருவு ளத்தன்பு, கொண்டெமக்கினிய ஞானயோகமுங் கூறிடவேண்டு மென்றிரந்தார். (நிஅ)

சூதமாமுனிவன் றிருவுளமிரங்கிச் சுடர்முகமலர்ந்து முன்னி ன்ற, மாதவர்ப்பாரா விருக்கெனப்பணித்து மலைமகள் பாகத்தெம் மானை, வாதராயணனை யிதயதாமரையில் வைத்தனன் றியானித்த பின்னர்ப், போதமா முனிவீர் விருப்பொடு கேண்மின் புகலுவலென் றுவாய்மலர்ந்தான். (நிகூ)

மந்தணமான ஞானயோகத்தை வழிபடுமாண்டளப் பானுக், கந்தணன்கயிலை யண்ணன்முன்னுரைத்தா னுயவேலையி னுமையம் மை, சந்தமென்குறங்கினிருந்து மெய்ஞ்ஞானச் சண்முகவேளினி தூணர்ந்து, பந்தமுற்றகலத்தனைவழிபடு பண்புடை வசிட்டனுக்கி னிதுரைத்தான். (சுo)

அன்னவன்சத்தி முனிவனுக் குரைத்தானவன் பராசரற்கினி தூரைத்தான், மன்னமற்றவன்பால் வழிபடுதிக்கேட்டு வாதராய ணனுணர்ந்தனனம், முன்னவன்பால்யானன்கு கேட்டுணர்ந்தேன் மூதறிவுடைமையும் பெருமான், பொன்னடிக் கமலத்தன்புமிக்கு டைய புண்ணியம்பொலி பெருந்தவத்தீர். (சுக)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

எனக்கவனுரைத்தவாறே யியம்புவனுங்கட் கென்றான்
கனக்கயிலாயமேயகண்ணுதற்சாமியன்பன்
மனக்கினிதாகக்கேட்டமாண்புடைமுனிவரெங்கள்
சினக்கடவினைகள்யாவுந்தீர்ந்தவென்றுவகைபூத்தார். (சுஉ)

முதலாவது

ஞானயோகத்தை யுணர்ந்தவாறுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - சுஉ.

உ

இரண்டாவது

வருணச்சிரமநிலையோர் மேன்மையுரைத்த வத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மூப்புரம்பொடித்தமுன்னோன்முண்டகப்பதமுள்வைத்த
வொப்பின்மாதவத்தீர்ஞானயோகத்தையுணர்ந்தவா றுஞ்
செப்பினேமினித்தந்தம்மாச்சிரமத்தில்வழாதுநிற்குந்
திப்பியகுணத்தார்மேன்மைத்திறமுனன்குரைப்பாங்கேண்மின். (க)

முன்னமோர்பிரளயத்தமுடிவினிற்பரம்பொருட்குப்
பின்னமாமுலகமூழ்கப்பெற்றதுதமோமயத்தி
லன்னதன்பின்புராதனருளிற்சத்துவத்தினின்றும்
பன்னரிதாயமூலப்பகுதியுண்டாயிற்றாலோ. (உ)

எக்குணங்களுமில்லாதானிறப்பொடுபிறப்புமில்லா
னக்குணத்தவர்கொண்டாடுநம்பிரான்கூற்றினின்று
மூக்குணத்தினிலுண்டானுர்முத்தொழினடத்தமூவ
ரக்குணத்தவர்தம்மூர்த்திபேதங்களனேகமாமால். (ங)

புண்ணியனருளாற்பஞ்சபூதஞ்சத்தாதியைந்து
கண்ணியஞானகன்மேந்திரியங்கள்பஞ்சவாயு
வண்ணியகரணமின்னுமனேகவவ்வியத்தபேதம்
பண்ணிபயாவுங்காலபாகத்தினுதித்தவம்மா. (ச)

அலரணைக்கிழவனம்மானருளினுற்படைத்தானண்ட
மலருமவ்வண்டமெல்லாவுலகமும்வானநாடர்
பலருமானிடருமற்றைப்பயில்சராசரமுநாளும்
புலர்தராதுறையத்தன்னுட்பொருந்திடங்கொடுத்துவைகும். (ஞ)

உரைசெயிவ்வண்டத்துண்மண்ணுலகினருய்யநாதன்
வரைசெயாச்சிரமநான்குவகுத்தனனதனுற்றத்தம்
விரைசெயாச்சிரமநின்றும்விலகுறாவொழுக்கம்பூண்டு
புரைசெய்புன்பவத்தினீங்கிப்பொருட்கதியடைவானெண்ணி. (ட)

நித்தனேநிமலன்றன்னேநிருவிகாரனேயனாதி
முத்தனேமூவருக்குமுதல்வனேயெவ்வுயிர்க்கு
மத்தனேயமலபாகத்தற்புதப்பிரானேயென்றுஞ்
சுத்தனேஞானனந்தசோதியைப்பூசையாற்றி. (எ)

காரணமூலகிற்காகிக்காரணங்கடந்ததாகி
யாரணமுடிக்குமெட்டாவானந்தரூபமாகி
காரணன்பிரமன்றேடிஞானகாணப்பொருளுமாகிப்
பூரணமாகிநிற்கும்புண்ணியபுராணம்போற்றி. (அ)

தத்துவாதீதனுகித்தத்துவசொரூபனுயா
றத்துவாமூர்த்தியாகியாக்கல்காத்திடலழித்தல்
பொத்துவாதனேயுயிர்க்குப்புரிந்தருள்சுரப்போனுகி
முத்துவாணகையோர்பாகமுதல்வனுய்நின்றுய்போற்றி. (கூ)

பன்னிராசதசருக்கம்படலிராசதவுரூபற்
துன்னுவேதாவாயாக்கந்தொக்கசத்துவத்திற்கு
மன்னுதாமதவுரூபமாலாய்த்தாமதவழிப்புக்
குன்னுசத்துவவுரூபவுருத்திரனுனுய்போற்றி. (கo)

திடமுறுதவர்தியானஞ்செயப்படுமுதலேபோற்றி
யுடன்முதனுன்குரல்கியுயிர்க்குயிராஞய்போற்றி
படர்தமையிழற்றேசெய்தப்படுமொருபொருளேபோற்றி
நடலையிப்பவஞ்சவாழ்க்கைகரித்திடவருள்வாய்போற்றி. (கக)

வம்பலர்கடுக்கைமாலைவயங்குசெஞ்சடையாய்போற்றி
யும்பலினுரியாய்போற்றியோதனஞ்சுண்டாய்போற்றி
செம்பலமடியார்க்காக்குந்தீர்விலாச்செல்வம்போற்றி
யம்பலத்தாடிபோற்றியருட்டிருவுருவம்போற்றி. (கஉ)

எனத்துதியியம்புவாருக்கெம்பிரானருளினுலே
தனக்கிணையிலாதமேன்மைத்தத்துவஞானமுண்டா
மூனற்கருமந்தஞானமுதிக்கவஞ்ஞானநீங்கு
மினக்கருமத்தானீங்காதிருண்ஞானம்போகமுண்டாம். (கங)

மயல்செயஞ்ஞானநீங்கமறிந்திடும்பாசமும்பின்
னியல்பெறுமுத்தியெய்துமித்தகுதொழினின்றேரே
தயல்வளர்மேனியாளேத்தண்ணருவிதழியாளைப்
புயல்வளர்வேணியாளைப்போற்றுதற்குரியராவார். (கச)

தருணமாமதிமுடித்ததம்பிரானடிப்பூசைக்கு
வருணமாமொழுக்கினின்றும்வழுக்கிலுருரியராகா
சிருணமாக்கொண்டியாருமிந்நிலையொழுகல்வேண்டு
மருணமாச்சடையீர்வேதமறைவதுமிதுவேயாமால். (கஞ)

இரண்டாவது வருணச்சிரம நிலையோர்மேன்மையுரைத்த
வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் உ-க்குத் திருவிருத்தம் - எஎ.

உ

மூன்றவது

பிரமசரியவிதியுரைத்த வத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

பரமன்மலர்த்தாளுளத்திருத்திப்பாசவருக்கமோரைந்திஞ்
சரமமுறவென்றிடுத்தவத்தீர்தக்கவருணச்சிரமநிலைக்
கிரமமுடையாருயர்வுரைத்தாங்கிளராச்சிரமங்களுண்முதலாம்
பிரமசரியவாச்சிரமம்பேணும்விதியுமபேசுவாம். (க)

தேற்றமுறுநல்லுபநயனஞ்செய்துகொண்டமறைச்சிறுவ
னுற்றன்மிகவந்தரும்வேதவத்தியயனமொருவானுய்ப்
போற்றும்பலாசேகூவிளமேபோதியேயிம்மூவகையுட்
சாற்றுங்கேசாந்தத்தளவோர்தண்டதாங்கல்விதியாமால். (உ)

துகடூர்முஞ்சிமேகலைமான்றோறங்குபவீதந்தரித்துத்
தகவார்மனையிலணம்பிச்சைதானேற்றுண்செந்தழ
மிகவாஞ்சியாசிரியற்கியலும்பணியோகையிற்புரிந்து
சகமாதரிக்குந்திரிகாலசந்திக்கடனுஞ்செயல்வேண்டும். (ங)

காமங்குரோதமுதற்குற்றங்கடிந்துகாலைமாலையினுஞ்
சீமம்பெருகுமக்கினிகாரியமுஞ்சிறப்பச்செய்வானுய்த்
தோமங்கறவானவர்முனிவர்தொக்கபிதிரர்தருப்பணமு
மாமந்திரத்திற்புரிந்திவானுவான்பிரமசாரியே (சு)

ஓங்குமோமாக்கினியேனுமொளிரும்விரசாக்கினியேனும்
பாங்கினுதவுகிருகீற்றைப்பகரும்வேதமந்திரத்தாற்
றூங்கியபிமந்திரித்தன்பிற்சருவாங்கமுமுத்தூளனஞ்செய்
தாங்கத்திரிபுண்டரநெற்றியகலம்புயங்கள்களந்தரித்து. (ஞ)

சூற்றமகன்றமனத்தினுய்க்கூடாரரணநீருகச்
செற்றபரனேயுமையோடுதியானம்புரிந்துபூவாதி
மற்றவுபகரணங்களெலாம்வாய்ப்பத்தேடியப்பரமன்
பொற்றபாதமருச்சித்துப்போதறிவணங்கவேண்டுமால். (ட)

தந்தைதாய்முன்னவர்விருத்தர்சாற்றுங்குரவர்ஞானியர்க
ளிந்தகலமுள்ளோர்க்காணிலெழுந்துநாமகோத்திரமு
மூந்தவுரைத்துவணங்கிடுகமுன்னுமவர்வாழ்நாணீடி
யந்தமடையாச்சவுமியனேயாகென்றுசெயல்வேண்டும். (எ)

ஆசாரியனேவணங்கிடுங்காலன்ஞன்வலத்தானிடத்தாளிற்
றேசார்வலக்கையிடக்கையுறச்சிறப்பின்மாறிவணங்கிடுக
வேசாராவிலவுகிகநூலியல்வைதிகநூன்ஞானநூல்
பேசாரம்பத்தினுமுன்னர்ப்பேணுகுரவற்ழுல்வேண்டும். (அ)

தன்ழுய்தந்தைகுருவங்கிசத்தார்க்குளம்வாய்மெய்யடக்க
நன்ழுரியன்சந்நிதியினயந்துதொழுதஞ்சலிசெய்து
நின்ழுரருளீதரப்பெற்றுநேரலாதவிடத்திருத்தல்
பின்ழுவொழுக்கமெனக்கொண்டோன்பிரமசரியசிகாமணியே. (கூ)

உண்மைமொழிந்துவரல்கற்றவோத்தைமறவாதூற்லன்பின்
வண்மையுறுநித்தியகருமம்வளருநைமித்தியகருமந்
திண்மைசிறக்குங்கதிநிமித்தஞ்செய்துவருதல்பிச்சையன
மண்மைமறையோரகத்தேற்கவகப்படாதபக்கத்தில். (கூ)

வேறுவருணத்தாரகங்கண்மேவித்தகுதண்டலமேற்று
மாறுகடியாசிரியனுக்கும்வழங்கிப்புனிதமொடுதஞ்செய்
தூறுபுனலீராசமனமுயர்பிராணகுதிசெய்தமுன்
னேறுகிழக்குமுகநோக்கியிருந்துபுசித்தல்கடனுமால். (கக)

சிரார்மறையோன்பவதிபிட்சாந்தேகியென்றுஞ்செகம்புரக்கும
பேராரரசர்குலத்துதித்தேன்பிட்சாம்பவதிதேகியென்று
மேராரருவைசியன்பிட்சாந்தேகிபவதியென்றுமுரைத்
தூராரகஞ்சென்றியாசகித்தலொத்தவிதியென்றுரைப்பாரால். (கஉ)

அறையும்பெருமைமிகுவேதவத்தியயனமல்லாம
னிறையுமற்றைமனுச்செபித்தனீக்கவேண்டுநீள்கதிரோ
னுறையுந்திசைநோக்கியும்புசித்தலொக்குமிவைமுன்விதியனைத்தும்
பொறையுந்தவமுமிகவளரப்போற்றுவோனேபுலமிருத்தோன் (கங)

அரையிலுடுக்குமொண்டானையுடுல்லதளாக்கொண்டானைக்
கரையிலுலகங்கண்டானைக்காமமாதிவிண்டானைத்
திரையில்வருஞ்சுண்டானைச்சிரஞ்சேர்மதியத்துண்டானைப்
புரையில்சுரர்செய்தொண்டானைப்போற்றியொழுகவெப்போதும். ()

இன்னபிரமசரியவிதியியற்றுங்காலைவிராகமிகிற்
பன்னவருமுத்தியினிமித்தம்பரமவஞ்சவாச்சிரமந்
தன்னதாகும்வணம்விரைந்துசந்நியாசஞ்செயக்கடவன்
மன்னவுளதேற்காமமனைவாழ்க்கைமருவன்மரபாமால். (கரு)

மூன்றுவது பிரமசரியவிதியுரைத்த வத்தியாயம்
முற்றிற்று.
ஆக அத்தியாயம்க-க்குத் திருவிருத்தம்-கூஉ.

க

நான்காவது

கிரகாச்சிரமவிதியுரைத்த வத்தியாயம்.

(கலிநிலைத்துறை.)

ஆறுசூடிதன்னருளினுற்சஞ்சிதமழிய
வேறும்வல்வினையின்றிருந்தவமியைந்தீர்
வீறுசேர்மூதலாச்சிரமத்தியல்விரித்தாங்
கூறுதுங்கிரகாச்சிரமத்தர்கோட்பாடும். (க)

பிரியமாகிமுன்சொல்லியவிதிப்படிபிரம
சரியநன்கனுட்டித்தபின்றக்கநூலொழுக்க
மூரியதேசிகனுரையாலொத்தநன்னுளிற்
றெரியவாஞ்சமாவர்த்தனஞ்செய்துகொண்டதற்பின். (உ)

மனையறத்தினுக்குதவியாகிமித்தம்வண்குலத்து
ணினைதனக்கனுகூலமாய்நிகர்த்தகோத்திரத்திற்
புனையுங்கற்பினுக்குரியபல்பின்னங்கள்பொருந்த
வினையும்பெரிதிலொடுமுதித்திட்டவோர்மாதை. (ங)

தனதுசூத்திரவிதிப்படிமணஞ்செயத்தகுமாற்
புனல்விராவியசுடரைதாரகைதழைபொதியு
மினவிருக்கநாமம்பெறுமாதர்களேலார்
தினமும்பன்னியோடறத்தையாசரித்திடல்சிறப்பே. (ச)

பாரியோடவுபாசனஞ்செயல்விடற்பதித
ஞருமற்றவள்பூத்துநீராடிபின்பதிஞ
ரோருநாளிற்சந்ததிபெறப்புணர்ச்சியையுறுத
னினைவானவர்கல்லழலதியர்நிமித்தம். (ஞ)

பாகஞ்செய்திடலறநிமித்தந்தொழில்பண்ணல்
யாகஞ்செய்திடல்யாத்திரைசெய்திடனிமித்தம்
போகங்கல்குமிட்டிகள்செய்விப்பார்மறைபுரைவிண்
டேகவத்தியனஞ்செய்விப்பாரிடத்தேற்றல். (ரு)

இன்னநான்குமிவ்வாறுசெய்பவன்மனையிருந்து
கன்னர்மூத்தியையடைபவனுடம்பினைவக்குப்
பின்னமானதியறிதிலோனுபெருநரகம்
பன்னருங்கொடுநரகிடைவீழ்ந்துனைபவனே. (ஈ)

விடியுமுன்னரேசனமிகாத்தகுமிடமேவிப்
படிவிதிப்படிசலமலம்விசற்சனம்பண்ணி
யடிகரங்குதங்குய்யமண்ணறலிட்டுக்கழுவிச்
செடியிலாசமனம்புனலுதறச்செய்து. (அ)

சுத்திசெய்துபன்னீருதரம்புனலருகுத்தமிழா
லொத்தகாட்டமென்றுமிழ்ந்துவாய்கொப்புளித்தொளிர்நீ
ரத்தமேந்தியாசமனஞ்செய்தமையகாணமுஞ்செய்
துத்தமந்தருசந்தியாவந்தனமுஞற்றி. (கூ)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மூத்தரம்பிராணுபாமமுறையுளிசெய்துபின்னர்ச்
சித்தமாகின்றிக்காயத்திரியினைச்செபித்துச்செங்கே
ழுத்தமப்பரிதிதன்னையுறுமனுவாற்றியானித்
தத்தனதடிநினைப்பானவன்மனைபொழுக்கம்பூண்டோன். (கo)

கதிரவனுச்சிமேவுங்காலுமிவ்வாறுசெய்து
விதிவழிபிரமயாகம்வேதபாராயணஞ்சீர்
பதியழற்கருமம்பூதபலியேகித்திபசிராத்த
மதிதிகுமதிதிபூசைமாண்புறச்செய்யவேண்டும். (கக)

பாய்புகழ்ச்சந்தியாசிபகர்தரும்பிரமசாரி
யாய்தருமில்லத்தட்டவடிசிலுக்குரியசாராவார்
நேயமோடவருக்கோர்காணிநிலந்தனம்புசிக்கிற்
றூபவப்பாவம்போகச்சாந்திராயணமேசெய்க. (கஉ)

அவரைகாடோறும்போற்றலருளுநிலத்துவைத்த
றவறிலாறுதல்வேண்டுஞ்சந்தியாசிகடங்கையி
லிவரவோரவிழோர்துள்ளியின்புனலீத்திட்டாலுந்
தவகெடுமேருவென்னச்சமுத்திரமென்னவோங்கும். (கஙு)

ஒருதரமில்லறத்தினுறைபவன்புசித்தல்வேண்டும்
பெருகியவசத்தருகிற்பின்னுமோர்தரம்புசித்தன்
மருவியகவளகாலெண்வயங்குருக்குடவண்டத்தான்
பொருவியவளவைத்தாகும்புசிக்குமோரகவளமாதோ. (கச)

போனகம்புசித்தலோமம்புரிந்திடல்செயித்தல்மன்மை
யானவர்ப்பணிதலாசமனஞ்செய்தலையிரண்டு
வூனமிலிக்காலங்களுமவீஇயாதனன்று
மேன்மையிற்புசித்தல்வேண்டுமிசனமுள்ளினுமுமோதா. (கஞ)

உகபாத்திரமெனிர்க்கோலைமந்தரத்தரிசித்தல்வேண்டுஞ்
சிதமிகுதெய்வநீறுபிரமரைவிதிவழாமை

விதமுறவங்கமெல்லாமியல்வுத்தூளனஞ்செய்
ததமிலாமனுவென்றியாருமறைதிரியம்பகத்தால். (கசு)

பிரணவசகிதமாகப்பிறங்குபஞ்சாக்கரத்தான்
மூரணவித்துயர்த்துஞ்சீர்மூப்புண்டரந்தரித்தல்வேண்டுங்
கரணமொற்றுமையினிற்பக்கனிவொடுமெவனெஞ்ஞான்று
மரணமுப்புண்டரந்தீற்றணிறுதறிக்கவல்லன். (கஎ)

அன்னவன்வேதவத்தியனஞ்செய்பயனுமற்றைப்
பன்னரும்விரதமெல்லாமனுட்டித்தபயனுமுள்ளா
னின்னமுப்புண்டரத்தையேமறைவிரிக்குநீராற்
றன்னம்விண்டோனும்பாவத்தழற்குழிநிரையம்வீழ்வான். (கஅ)

கண்மணிநிறையப்பூண்டுகருதிலிங்கத்திற்காமர்
விண்மணிக்கதிர்சமழ்ப்பவிரிசடைப்பிராணவெற்புப்
பெண்மணியொருபாலானப்பிறங்கவாவாகனஞ்செய்
தொண்மணிப்புனல்பூமுன்னுவதுபொருள்யாவுங்கொண்டு. (கசு)

(மேற்படிவேறு.)

பகர்பூசைசெயவேண்டும்யோகிகளாற்றியாணிக்கப்படுதலானு
மிகவாதபெரும்பிரளயத்தறுபூதங்களெலாமிலீனமாகித்
தகவாகும்வண்ணமீட்டிற்பத்தியாதிவருந்தன்மையானு [மா.()
மிகவார்வமொடுமிலிங்கமென்றுரைப்பர்முழுதுணர்ந்தமேலோரம்

அவியாதமுத்தழலும்வளர்த்துவரிற் பாவம்போமாகுஞ் சுத்தி, சவியாருங்கரணங்களதனுற் றத்துவஞானந்தானே யுண்டாம், புவியாருமகஞ்சுவர்க்கநிமித்த மியற்றிடினதுவே பொருந்தும்வள்ளற், செவியார்தன்மனைவியிடைத் தென்புலத்தார்க் குரியகடன் றீர்க்க வேண்டி. (உக)

புத்திரனுற்பத்திசெய்து கொளல்வேண்டு மெய்மொழி யெப்போதும்வேண்டு, மெத்தியபல்லுயிர்க் குமினிதறாகடத்தல் வேண்டு மித்தவிதிவழாது, பத்தியினில் லறாகடத்திவருகாலை விரத்தியுறிற் பகருமேன்மை, வைத்தசங்கியாசியாய் வேதாந்தப் பொருளுணர்தன் மரபுமாதோ. (உஉ)

விரத்திமிகக்கதிவேட்கை மென்மேலுங் கிளர்த்தெழின் மெய்ச்சங்கியாசம், பரத்தியலுமஞ்சவாச் சிரமத்திற்செய்தன்மிகப் பாங்கேயாகு, முரத்திலெளியவன் பகுதகங் குடசகமிரண்டு ளொன்றிலுள்ளச், சிரத்தையொடு சங்கியாசஞ் செய்தன் மரபென்று தெளிக்கும் வேதம். (உங)

அவ்வளவுவிரத்தியிலானென்னில்வானப்பிரத்தமணுகியந்தச்
செவ்வியவாச்சிரமமனுட்டிக்கலாமதற்குமவிசேரானென்னி

லொவ்வியவாழ்நாளளவுமில்லறத்தேயிருந்திடலுத்தமமாமின்பங்
கவ்வியவவ்வறமெவர்க்குமாதாரமாதலினுங்கடைப்படாதே. (உசு)

(கலிவிருத்தம்.)

பல்லறங்களினுறற்பண்புசான்றவி
ரில்லறப்பெருஞ்சிறப்பியம்புவாரெவர்
நல்லறம்வழாவகைகடத்துவாரெனி
னல்லறவெழுஞ்சுடரேயதேசினீர். (உரு)

நான்காவது கிரகாச்சிரமவிதியுரைத்த வத்தியாயம்

முற்றிற்று.

ஆ அத்தியாயம் சுக்குத் திருவிருத்தம் ககள.

ஙூ

ஐந்தாவது

வானப்பிரத்தவிதியுரைத்தவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மலக்கோடைத்தம்பொறிவாய்கண்மாறவடைத்துமனக்குடிஞை
நிலக்கோடணிந்தானடிக்கடவுணீளப்பாய்த்துறைதவத்தீர்
விலக்கோதாதகிரகங்கிலவிரித்தாமனுட்டிப்பாருளத்த
வலக்கோதனுக்குந்தகைசான்றவானப்பிரத்தவிதியுரைப்பாம். (க)

உரியமனைவிமைந்தன்பாலுறவைத்தாவதுடன்கூடித்
தெரியவரக்கொண்டாவதுதற்சிறப்பாருத்தராயணத்தில்
விரியவிளங்குநிறைபக்கமேவுஞ்சுபவாரஞ்சுபநா
ளரியசுபமுகூர்த்தத்திலடவிபுகுதல்வேண்டுமால். (உ)

ஓடிவிலியமாதிசம்பத்தியுள்ளோனுகித்தவஞ்செய்த
னெடியசாகமூலபலங்கிவேதித்தரற்குப்பின்னுகர்தல்
படியினகர்நின்றுங்கொணர்ந்தபகர்தானியஞ்செய்பாகத்திற்
கடிதலில்லாப்பதினுறுகவளங்கொளலுங்கடனுமால். (ஙூ)

வேணிமுடித்தலுரோமமுகிர்வீழ்த்தும்வபனஞ்செய்யாமை
யாணமிகுப்பமறையாய்தலுத்தமகமோமம்புரிதல்
காணுமரகாருடித்தறிரிகாலதானஞ்செயலுயிர்கள்
பேணுத்தையுள்ளவனுதல்பிறழான்வானப்பிரத்தனே. (ரு)

தானமேற்றல்புலான்மதுக்கொடன்மையிரண்டாந்தரம்புரித்த
லீனமென்றுகடிந்தானுயிரவிற்றியாணம்புரிதலன்றி

யான துயில்கொண்டிடினிலம்பாயாகக்கோடல்பொறியடக்கல்
கானவிதழிமுடிப்பெருமான்கழல்சிந்தித்தல்கடனென்றும். (நி)

காமம்வெகுளிமயக்கமறக்கடிதல்பிரசாபத்தியநன்
மோமம்புணருங்கிருச்சிரமேநயக்குஞ்சாந்திராயணமே
யேமம்பயப்பமதிதோறுமியற்றல்வேண்டுநியதியாத்
தூமன்னிடுவெனிற்காலஞ்சுடரைந்தழற்குருவின்றும். (சு)

பரவைவறப்பமுகின்மேய்ந்துபயம்பெய்திடுகார்காலத்தி
னுரவுத்தருக்களடிமேவாதுறுவெள்ளிடையிற்போயிருந்தும்
விரவுபனிக்காலத்தறலின்மிகவுநினைத்தவுடையுடுத்துங்
கரவிலாததவம்புரிதல்கடனும்வானப்பிரத்தனுக்கே. (எ)

தேவர்பிதிர்தருப்பணமுந்திரிகாலத்துஞ்செயவேண்டும்
பாவுதவஞ்செய்காலத்துப்படர்காணுகர்ந்தோர்காணிலேயே
மேவல்வேண்டுமுன்பக்கமிகையில்பாலும்பின்பக்க
மாவினறுங்கோமயரசமுமாகாரங்கொண்டிடலுமாம். (அ)

திருந்துசருகுபக்கணமுஞ்செய்யலாகுமான்றோன்மெய்ப்
பொருந்துபோர்வையுடவீதம்புனிதமாகக்கொண்டிருத்த
லருந்துமமுதினுபநிடதவப்பியாசஞ்செய்திடுதல்
வருந்துன்பொருவியோகமுறல்வானப்பிரத்தற்கியல்பாமால். (கூ)

ஓமக்கருவியுதவாவேலொளிரக்கினியையான்மாவிற்
சேமத்துறவாரோபணமேசெய்தல்வேண்டுமில்லறத்தாற்
காமற்புசமந்திரவிதிகொண்டணிநீறுத்தூளனஞ்செய்த
மோமப்பவநோயறத்துணிக்குருண்மைத்திரிபுண்டரந்தரித்து. (கo)

கற்றூர்விரும்புமாமணியேகாமற்காய்ந்தகண்ணுதலே
மூற்றூவிளமென்மூலபாகாமூப்பிலாதமுழுமுதலே
நற்றூரணியிரதமாகநடத்திக்குறுவெண்ணகைதோற்றிப்
பற்றூரரணம்பொடிபடுத்தபரனேயுன்னைத்தொழுதேனல். (கக)

கவளக்களிற்றினரிபோர்த்தாய்கடவுளார்களுயிர்சாம்பித்
துவளப்படர்ந்தவிடமிடற்றுத்தூங்கவைத்தசுகரூபா
தவளப்பொடிபூசிமுதலேதண்ணம்பிறைவெண்ணிலவெறிக்கப்
பவளச்செழுஞ்சென்சடைமுடித்தபரனேயுன்னைத்தொழுதேனல் ()

மேம்புவனமனைத்துமாய்நிரம்புமுயிருக்குயிருமாய்த்
தேமவர்க்குள்ளொளியுமாய்த்திகழ்வாய்தேவர்சிகாமணியே
கூடுஞ்சுரும்பருழுதழக்கிக்கொழுந்தேன்மடுத்துக்குமட்டியிசை
பாடுங்கிக்கைதருந்தொடையற்பரனேயுன்னைத்தொழுதேனல். ()

விசும்புகிலனும்பாதலமும்விரும்பிமகிழ்வினைத்தெடுப்ப
வசும்புபடுபொற்கழலொலிப்பவங்குஞ்சிதத்தாளழகெறிப்பத்
தசும்புகிகரப்புடைத்தமுலத்தாயார்திருக்கண்சாத்தியிடப்
பசும்பொனணியம்பலத்தாடும்பரனேயுனைத்தொழுதேனல்.(கச)

என்றுதுதித்துஞ்சித்துமிருக்கவேண்டுமிவ்வாறே
யொன்றுமனுட்டிபுற்றவன்பினேங்கும்விராகத்தொடுமுடனே
சென்றுசந்நியாசத்திற்செப்பும்பேதங்களிலொன்றி
னின்றுவழுவாவகைகடத்தனீதியென்பார்கெறியுணர்ந்தோர். (கரு)

ஐந்தாவது வானப்பிரத்தவிதியுரைத்த
வத்தியாயம் முற்றிற்று.

ஆ வத்தியாயம் ரு-க்குத் திருவிருத்தம்-ாகூ.

ஙூ

ஆறவது

சந்நியாசவிதியுரைத்த வத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

கரியமலவேர்கரியமாயையொடுகன்ம
மிரியவரனரருளாயீட்டுமுனிவீர்காள்
பிரியமிகுவானப்பிரத்தவிதிசொற்ரு
மரியகதிபார்சந்நியாசவிதிசொல்வாம். (க)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

குலவுறுசந்நியாசவாச்சிரமங்குடகம்பகூதகமஞ்ச
லலிகுபரமவஞ்சமேயென்னநான்கதாங்குடகநிலேயோ
னிலகுசந்நியாசஞ்செய்துகொண்டபின்றனில்லத்தினுவது கடும்போ
ரலர்தருமில்லினுவதுமிதவையையமேற்றுண்டிடல்விதியால். (உ)

கிகையுபவீதஞ் செங்கமண்டலந்தரித்த, றகைகெழுநீற்றுத்தூளனஞ்சுருவாங்கமுந்தகச்செய்திடல் விதியின், வகையொளிர்திரிபுண்டரந்தரித்திடுதல் வயங்குகாயத்திரிசெபித்தல், பகையரணெரித்தோனருட்குறிப்பூசை பத்தியிற்புரிந்திடன்மரபால். (கூ)

மாற்றருமேன்மைப்பகூதகன் கடும்போர்மைந்தரா தியர்தமையொருவிப், போற்றுமேழகத்திலனப்பலியேற்றுப் புசித்திடல்பொலிதிரிதண்டஞ், சாற்றிடுபுனிதகமண்டலமுழைத்தோல்சத்திரமுத்தரீயம்மே, யாற்றல்செயோகபட்டமே குளிர்தாங்காடையேதூயகோவணமே. (ச)

பன்னுபாதுகையே சிறுதூளிச்சூரி பட்டிழையியற்றியசெபமா
ண், டின்னுகூர்ச்சிறுவாண்மண்டொடுகருவி தொகுமிவையுடையவ
னுதன், மின்னுவெண்பூதிதூளிதஞ் சருவாங்கமும்விளங்குறமிகச்
செய்த, லின்னுநற்றிரிபுண்டரந் தரித்திடுத லுபவீதஞ்சிகையுடைத்
தாதல். (சு)

சுழல்பவத்திடுகாமாதிகணீத்தூமனமுடையனுய்ப்பாவங்
கழல்படச்செயுஞ்சாவித்திரிசந்திகாலங்கடொறுஞ்செபித்திடுத
லழலவிர்சுடங்கைமுக்கணெம்பெருமானருட்குறியருச்சனையியற்ற
றழல்விழிப்பேழ்வாய்க்கூற்றுயிர்குடித்தாமரையாளித்தல்கடனு
[ல்

கொண்டகிரஞ்சன்கமண்டலங்கந்தை கோவணம் பலிக்கலன்
வேணுத்,தண்டமுத்தரீயங்கொளதிருநீறுத் தூளனந்தகச்செயறகை
முப், புண்டரந்தரித்தல்சிரச்சிகைமழித்தல் பொம்மலெண்கவளமே
புசித்தன், மண்டலம்புகழ்சாவித்திரி சந்தியவங்குகாலந்தொறுஞ்செ
பித்தல். (எ)

திடமுறவான்மவிசாரஞ் செய்திடுதீர்த்தயாத்திரை புரிந்திடு
தல், படர்சிரஞ்சிரஞ் சாத்திராயணமுதலாப்பலவிரதமு பனுட்டி
த்த, லிடமுறுமோரூரினிலொர்நாளன்றி யேற்றநாளிராமைசஞ்சரி
த்தல், படவரவணிந்தோ னருட்குறிப்பூசை பத்தியிற்புரிந்திடன்
மரபால். (அ)

மேதகுபரமவஞ்சனெண்பூதிவிளங்கிடத்தூளனஞ்செய்தல்
கோதகதிரிபுண்டரந்தரித்திடுதல்கோதனவான்மயிர்க்கயிறு [வி
பூதமிக்குறுகமண்டலமுழைத்தோல்பொருந்துவாண்மண்டொடு கரு
யேதமில்யோகபட்டமுத்தரீயமியைதூளிச்சூரியொண்கந்தை. (கூ)

கதிர்வெயின்மறைக்கத்தக்கசத்திரமேகழறராக்குமிழ்செய்பாது
கையே, வெதிர்புரிதண்டம்விழைசெபமாலைவெண்ணிறக்கோவணங
கோடல், பிதிர்தராதேமப்புண்டரமென்றும்பிரணவமனுவிஞற்செய்
தன், முதிரொளியுபவீதந்தபுத்திடென் மொய்சிகையொடுதலைமழி
த்தல். (கo)

நீத்தியகரும நீத்திடல்புனித நிகழுமண் பாத்திரந்தாரு, வொத்
தபாத்திரமே கஞ்சபாத்திரமே யுலந்திடும் வேணுபாத்திரமே, யத்
தபாத்திரமே யிவைகளி லொன்றுலறல்கொடா சமனஞ்செய்திடு
தல், பத்தியின்மருது பரசிவதியானம் பண்ணுதல் கடனெனப்
பகர்வார். (கக)

பாடுகற்புகழ்சால்பகூதகனஞ்சன்பகருமண்பாத்திரமன்றி
நீடுமற்றொருபாத்திரங்கொளறகாதானீதிசால்பரமவஞ்சனுக்குக்
கூடுமான்மிதவையமேற்றண்கைகுய்கமழ்பலகறியோடு
நாடுமோதனமுங்கவர்வுறின்யோகநவித்திடுநிலத்திடலின்றி. (கஉ)

குறைதரநுகரின் வருத்தமேமிகுந்து கொளுமுடற் சோர்ச்சி யாதலினு, னறைதருமியோகர் தனக்கனுகூல மாகுமாபுசித்திடல் வேண்டு, மறைமொழிக் குரவன்சேவை செய்திடுதன் மதித்திடு ஞா னவப்பியாச, நிறைதரச்செய்தல் சவுசமேனான நிகழ்தியானந் தவமுமை. (கஉ)

பொய்மொழிகாமங் குரோதமாற்சரியம் புகர்படு மூலோபமே மோக, மைமலியகங்கா ரங்களைத்திடுதன் மண்ணுயிரிமுவகை நட த்தல், செம்மையார் தருமன்னவர் கடனுகுஞ் சிறத்தநாற் சங்கியாசி களு, மெய்மையே சாதுர்மாசிய விரதம் விழைத்திடல் விதியெனும் வேதம். (கச)

மூதறிவாண்மைக் குடிசகன்மூதலா மூவரு முத்திகொள்பாக் குத், தீதகல்சாவித் திரிமனுகாளுஞ் செபித்திடல்வேண்டி மற்றிரு ருவன், வேதமந்திரங்கட் காதியாமெழுத்தை விரும்புபு செபித்தி டல் வேண்டுங், காதலிற்சந்தி காலங்களோறுங் கவின்படு புனித னேயாகி. (கரு)

அறுதரமறை மூலத்தினுற் பிராணுயாம நன்கியற்றிட னூற் றெட், டுறுதரமூரைத்த வெழுத்தையே யெண்ணலொருவரு மிலா விடத்திருந்து,செறுபொறியடக்கியியல்வகைசமாதி செய்திடலிவ்வ ணமாகச், குறுமதிமுடித்த தம்பிரானருள்கைக் கொளுந்தொழிலே செயல்வேண்டும். (ஙசு)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

உத்தமவிருத்திகின்றுமுயர்ச்சியில்லாதநீச
வத்தருவிருத்திசார்ந்தோனுருடபதிநுவான்
சித்தமாசொருவிமேன்மைதிகழுஞ்சங்கியாசிதன்னை
யொத்தவேழ்பரித்தேர்மேவுமொளியினன்காணுந்தோறும். (ஙஎ)

பேசுநம்மண்டலத்தைப்பேதித்துக்கொண்டுமேலா
மேசினல்லுலகஞ்செல்வானேயிவனென்றுள்ளஞ்சும்
பாசமிலனேயன்வைகப்படுங்கிரகத்தெந்காளுந்
தேசவிர்செம்பொன்முன்னுஞ்செல்வங்கள்பெருகுமாலோ. (ஙஅ)

பொறியவித்தொழுக்கினின்றுபொலிபவனேயானுலு நெறியவித்தடாதசெய்துநிற்பவனேயானுலுங் குறிபடுபுகழ்ச்சங்கியாசிகொண்டவேடத்தினுனே யறிவுருவமலனென்றேயாவரும்வணங்கத்தக்கோன். (ஙகூ)

(மேற்படிவேறு.)

மருவுபிரமசரியனுக்குமன்றன்மலர் மேலவன்றெய்வந், திருவமி குமில்லறத்தாற்குத்திகிரிக்குடங்கையான்றெய்வ, மொருவில்வானப்

பிரத்தனுக்கொள் ளொளியேழ்பரித்தேரோன்றெய்வம், பொருவில் சங்கியாசிக்குப்போற்றுமகேசனேதெய்வம். (உ0)

பகவன்மறையந்தமுந்தொடராப்பரமனடியாருளத்தகலாத் தகவன்றெய்வமாதலினுற்சங்கியாசவாச்சிரம மிகவுஞ்சிறந்தவறத்தத்தால்விளங்கும்பரமவஞ்சனுடல் சகமின்புறச்செய்கனனமலாற்றகனம்புரிதல்கூடாதால். (உக)

அனையன்றனக்குத்தரகிரியையாதிகளுமின்றவன்மனவி, நினையுமைந்தராதியர்க்கு நிகழுமாசூசமுமின்று, புனையுங்கனனமாயவிடம்போதிப்பதிலைசெயல்வேண்டும், வனையுமிலிங்கப்பதிட்டையிஞ்ஞவரும்பேறளிக்குமப்பதிட்டை. (உஉ)

கனனம்புரியுங்காலையவன்கரிசிலுடலந் தொட்டாலு, மனனெக்குருக்கண்டாலுமறங்கள்யாவும்வலியழியுஞ், சினமின்மற்றைமூவருக்குஞ் செய்யவேண்டுங்கனனமுத, லனகனூலின்படிபின்னராற்றல்வேண்டுந்தகனமே. (உங)

விருப்பினிலைசெயில்லறத்தான்மிளிர்மாமேதபலனடைவன், சுருப்புமுரன்மென்மலர்நீர்நிற்றீரூர்ந்தழியுமாசூச, மருப்புமூலையாள் விழிகளிப்பவணிமாமன்றினடஞவிலும், பொருப்புவில்லி குஞ்சிதத்தாள்போற்றும்புலமைத்திறத்தீரே. (உச)

ஆறுவது சங்கியாசவிதியுரைத்த
வத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம்-கூ-க்குத் திருவிருத்தம்-ஈருசு.

ஏ

ஏழாவது

கழுவாயுரைத்தவத்தியாயம்.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

விடமெனக்கருதிவடவையிற்கொதித்துவிணையுயிர்கடுங்கிடத்தோற்றுஞ், சுடர்விழிக்கொடும்பற்கூற்றுயிர்குடித்தநாயமுண்டகமலருளத்தீ, நிடர்கெடுத்துயர்சங்கியாசவாச்சிரம மியம்பினமினிக்கொடும்பாவப், படர்தபுத்தெவர்க்குநலமருள்கழுவாய் பலவுளவவையுரன்குரைப்பாம். (க)

மறையவற்செருத்தோன் கடிமதுநுகர்ந்தோன்வயங்குசெம்பொற்களவாண்டோ, னிறையருட்குரவன்பன்னியைப்புணர்ந்தோனிக

நிலிக்கொடியரையாரு, மறைவரான்மாபாதகரென விகரையடுத் தொருவருடகட்டவரு, முறைதவிர்மாபாதகர்களேயென்ன மொழி வதற்கையமொன்றின்றே. (உ)

அறிதரான்மறையோற் செருத்தவன்றன்னை யவமதித்தடவி யுட்புருத்து, செறிதருமெவர்க்குந்தன்னிழிபுரைத்துஞ் சேர்சருகாதி துய்த்துஞ்சோ, றெறிதலேயோட்டிற்பிச்லை யேற்றுண்டு மிவ்வணம் பன்னிருவருட, மறிமழுக்குடங்கை வள்ளமூளுள்ளி வசித்திடின சித்திடும்பாவம். (ஊ)

தெரிந்துமாமறையோற் செருத்தவன்பாவந் தீர்த்திடவெண்ணி னனுயிற், பரிந்துதன்னகர்நின் றழல்புறங்கொடுபோய்ப் படர்சிலை கொண்டெழவளர்த்து, விரிந்தசெஞ்சடையிலிளம் பிறையணிந்தவி மலனை நினைந்துதன்னுடல, மெரிந்து நீறுகவீழ்ந்திடல்வேண்டு மீது செய்திடமுடியாதேல். (சு)

மிகுமுபவாசவிரதஞ்செய்தேனும் விழையறப்போர்புரிந்தேனு, நகுமணிகொழிக்குங்கங்கைமுன்னை நதிநதப் புனல்விழுந்தேனும், தகுமகாப்பிரத்தானம்புரிந்தேனுஞ் சாந்தமா மறையவர்தீம்பா, லுகு சுரைச்செருத்தலான்பொருட்டேனுமுயிர்விடினெழிந்திடும்பாவம்()

உள்ளவுமொண்ணைப்புரைசெறிகள்ளை யுண்டவனெழிவரும்பா வர், தள்ளவெண்ணினனேலள்ளலிற்குளிக்குந் தகுதியோர்ந்துள்ள மாழாந்து, பிளவைவாண்மதியஞ்சூடியைனைந்துபெருந்தளம்வழிதர ப்பெய்த, கள்ளையேகொதிப்பவெதுப்பிவாய்மடுத்துக்கழிதலேவண் டுமொல்லாதேல். (சு)

விண்ணியலமரருறுப்பினிலடங்கவிளங்கிடுகுடம்புரை செருத் தற், புண்ணியவான்கள் சலத்தினையேனும் புகன்மயவிரதத்தையே னுந், தண்ணிபநெய்யேனும் புனலேனுந் தழலிடைக்கொதியெழக் காய்ச்சிக், கண்ணிபவாயினழலெழவிடித்துக்கழித்துயிர்விடுப்பினுங் கழியும். (எ)

வயங்குபொற்களவு செய்தவனிரும்பின் வலியுடை முசலமொ ன்றியற்றி, நயங்கொளர்நகர்மன்னவன்கரத்தளித்து நடுங்குதன்னி ழிதழியம்பி, யுயங்குதலொழியவருள்கென விரந்தோரடியவனை டித்திடத்தலையேற், றியங்குயிர்விடுப்பின்விடுத்திடும்பாவமிறைவனு ம்பழியடையானே. (அ)

கரைசெயிக்கழுவாயுறற்றவொல்லாதேற் கள்ளுன னந்தணற் செருத்தோற், குரைசெயும்விரதம்புரிகவொல்லாதே லுலோவயப்பரி மகம்புரியா, வரைசராடுறுநீரவிருதத்திலாடுகவதுவு மொல்லாதேற் புரையறுசெம்பொன்றன்னிறையுணர்ந்தபூசுரற்குதவுதல்கடனுல். ()

அருடருமாசான் பன்னியின்மணிசெ யணிமூலை மணந்தவன் பாவ, விருடபவெண்ணிலிகழ்ந்ததன்செயலையிரும்பிணை லவளுருப்ப ண்ணி, வெருடருதழலிற்பொறியெழக்காய்ச்சி விரும்பியவன்பருக் கின்பப், பொருடருபிரானேநினைந்துமார்பழுந்தப் புல்லிவீற்றிடுதலே வேண்டும். (கo)

தேசிகன்மனையாட் புணர்ந்தவனீ துசெய்ய வொல்லாதெனிற் குறியைக், கூசிலஞ்சிவாளினுலறுத்துக்குடங்கையினேந்தியஞ்சரும் பர், மூசியபடலைக் கடுக்கையாணடிகண் முன்னுபுகூற்றுறையுளை ணப், பேசியதிசைபோய் மறிந்திடினெழியும் பின்னுன்னுற்பெய ரரும்பாவம். (கக)

வெப்பியலிவரோடியைந் தவர்பாவம்விளித்திடுதண்டமூ மவ ர்க்குச், செப்பியதண்டமே யினுமுகிழ்வெண் டிங்களுங் கங்கையு மணிந்த, தப்பியல்சடையான் றிருவடிநினைந்து சுடுசுடர்த்தழலினு வதுதற், றிப்பியப்புனலினுவதுவீழ்ந்துசெத்திடினுந்தொலைந்தேகும்.

குரவினைப்பிழைத்த கொடியவன்மறையோற் கொன்றவற்கியம் பியவிரத, மூரவுறப் புரிதல்சாந்திராயணமே யுரைத்திடப்படுகிருச் சிரமே, விரவுறப்பற்பனடத்துதல்புரவி மேதமாமகம்புரிவேந்தர், பரவுபூண்டாமெவபிருதத்திற்புக்குழுழ்குதல்கடனுமால். (கஉ)

மகன்மனைக்கிழத்தி தன்னுடன்பிறந்தாண் மருவுதன்மகளிவ ர்ப்புணர்ந்தோ, னிகன்மனத்தவரு ரெரியுணக் கொடுத்தவெந்தை தாளிருதயத்தெண்ணி, யகனிலத்தழல்வீழ்ந் திறந்திடல்வேண்டுமெத் தையையமாமியைப்புணர்ந்தோன், மிகன்மதித்தென்றுஞ்சாந்திராய ணமேவினுத்துயிர்விடுத்திடல்வேண்டும். (கசு)

தன்னுடன்பிறந்தாண்மகள் சகோதரனேத்தழுவுறுங் கிழத்தி யைப்புணர்ந்தோன், பன்னிடுசாந்திராயணவிரதம்பன்னிரண்டெனற் றிடவேண்டு, முன்னிடு தாயோடுதித்தவர்வயிற்றினுற்றவரணிமூலை தோய்ந்தோன், மின்னிடுதழலே வளர்த்தகில்வீழ்ந்து வீந்திடல்விதி யெனப்பகர்வார். (கஞ)

இழிவுறுமாதர்ப்புணர்ந்தவன்பாவ மியம்பிடத்தக்க சாந்தப னங், கெழியருற்பயன்செய்கிருச்சிரந்தத்த கிருச்சிரஞ்செய்திடின கலு, மழிவுறுமூளத்திற் பூத்தயாதரைநீ ராடுமூன்புணர்ந்தவன்பாவ, மொழிதரமூன்றுநாளுணவொழிக்கினெழிதரு மென்மனுருணர்தோர்

வேற்கருநெடுங்கட்கன்னியர்பகத்துமிருகயோனியினுமிந்திரியம் பாற்படலிடித்தோன்சாந்திராயணமேடண்ணிடற்றிலுன்திடும்பாவ நாற்குலத்தினுமேதிலர்க்குரியார்தலைநுகர்ந்தவன்பெரும்பாவ மேற்குமாறழலேவளர்த்தகின்வீழ்வும்றிறந்திடாதொழிதராதென்றும்

ஒழுக்கமுற்றிழுக்கி யழிந்தமங்கையரை யுறுதவம்புரிமடவா
ரை, யிழுக்குறு கழைக்கூத்தாடி மாதர்கூ யியலுறு தேவதாசிய
ரை, வழுக்குறுசிலதிமாதரைப் புணர்ந்தோன்வயங்குசாந்திராயண
ஞ்செயறா, சழுக்ககற்றுவரைப் புணர்ந்தவன் பத்துக்கிருச்சிரமாற்று
தல்வேண்டும். (கஅ)

சீர்த்தநற்பிரமசாரி மங்கையர்தஞ் செழுங்கடிதடம் படிதரிற்
புன், கார்த்தபத்தோலெமெய்யின்மேற்போர்த்துக் கசிந்து மூக்கால
மூழ்கிப், பார்த்தவர்க்கெல்லாந்தண்ணிழிபுரைத்தேழ் பயிலகம்பிச்
சையேற்றுண்டு, தேர்த்தடப்புவியாற்றியானித் தோர்வருடந்திரி
தரவேண்டுமிவ்வாறே. (ககூ)

இயலுறுபிரமசாரி யென்றுரைப்போனிந்தியக்கலிதஞ் செய்
வானே, லுயலுறமூழ்கி மாமறைமூலத் தோடுகா யத்திரிமனுவை,
மயலறப்பதினாயிரந்தரஞ்செபிக்க மாண்டசந்தியாசியுமிந்தச், செய
லுறின்மூழ்கிப்பிரணவம்பதினாயிரந்தரஞ் செபித்திடல்வேண்டும். ()

அந்தணர்முதலோரரசரைச்செகுப்பி னந்தணற் கடிந்தவர்க்
குரைத்த, மைந்துறுகழுவா யியறறலக்கழுவாய்வயங்கு பார்ப்பனிக்
கொலைக்கோரெண், சந்தநல்வணிகக்கொலைக்குமூன்றரசத்தையறன்
கொலைப்பழிக்காறு, பந்தமார்பின்னேர்தம்மடமகளிர் பழிக்குநன்
கோரியாண்டியற்றல். (உக)

ஒருபகினாறுதினந்தலைமண்டையோட்டிலேழ் மனைப்பலியே
ற்றுண், டிருநகர்க்கண்ணேதிரிதரிற் சுணங்க னீருத்தபாவந்தொலை
ந்தேகும், பொருதிறற்கேழல்பாடலகுலம் பூஞைகொன்றவன்கிருச்
சிரமும், வருமெலிதவனைமாய்த்தவன்சாந்தி ராயணமுஞ் செயன்
மரபால். (உஉ)

அரவுயிர்செகுத்தோனெருமதியுளவோரங்கை பாலருந்திநோற்
றிடுக, பரவுறுமின்சொற்றத்தையையொறுத்தோன்பனவருக்கா னு
தவிடுக, விரவுபல்பறவை யொறுத்தவன்மிக்க விரதமாற்றுபுமறை
யோர்க்குக், கரவறுமனத்தின்விருப்பியொண்ணிதியுங் கறவையுமளி
ப்பதுகடனுல். (உங)

பாவடிக்களிறுமுதல்விருகங்கள் பாற்றினேர்விரதமிக் காற்
றித், தூவடிஞிலே நெய்பாலொடுமறையோர்துய்த்திட வளித்திடல்
வேண்டும், பூவடைபழங் காய்செறிதருக் குறைத்தோர்பொலிதரு
மிலதைகளறுத்தோர், மூவருமிருக்குவிளம்பிநெய்யருந்தி மூன்று
நாணோற்றிடல்வேண்டும். (உச)

அறிதராதூன்சேராக்கையையொறுத்தோற் காசிரியன் வழி
பாட்டாற், செறிதருந்தீர்த்த நாணூற்பலவாற் றீர்ந்திடும்பாவமற்ற

றிந்தேன், மறிதராகரகிற்றுளேந்திடல்வேண்டும் வம்பலர்மனமுத
ல்கவர்ந்தோர், குறிபெறவவர்க்கவ்வீந்துசாந்திராயணங்குணமுறச்
செயல்வேண்டும். (உரு)

கோசிகம்பைம்புலிந் தனம்புலால்பால் குளமதண்முதலியவ
வ்வி, னேசமோடிழந்தார்க்கவையளித்துணவுநீத்தானைத்தருந்திடல்
வேண்டும், பூசைவெண்குரண்டமரிட்டம்வெங்கிரி புரூக்கிளியூர்க்கு
ரீஇமுதற்பு, ளாசையினுகர்ந்தோருணவினை யொழிந்தீ ராறுநாளே
ற்றிடல்வேண்டும். (உசு)

மூடைப்புலாலுணங்கல் கோழிவெண்முட்டை முனிவிலாதரு
ந்திஞேர்மாழ்கித், தடைப்படாதுயர்சாந்திராயணவிரதத் தகவொரு
மதிசெயல்வேண்டும், படைத்திமபூபம் பாளித முதலாப் பல்லவுங்
கடவுளர்க்கூட்டா, தடைத்தவர்மோடுவீங்கிட விரும்பி யாற்றுகிரு
ச்சிரவிரதம். (உள)

கண்ணறச்செய்தழல்கயமைத்தன்மையாற்
றண்ணறுபிணிகளுந்தவாதபித்தமு
மொண்ணுபைசாசமுமொருங்குசேர்ந்தவே. (உங)

சென்மநோய்மிகமறஞ்செய்தீயவன்
சூன்மநோயொருபுறங்குமைக்கச்சூலையாம்
வன்மநோயொருபுறம்வதைக்கமற்றுள
கன்மநோய்வருத்திடக்கலங்கினனரோ. (உச)

மண்ணிடைப்புரளுவன்மயங்கிச்சோருவன்
புண்ணிடையரக்குநீர்பொழியச்சாம்புவ
ணுண்ணிடைமாதரார்நோக்குநோக்கிய
கண்ணிடைநீருகக்கலங்கிவீழுவான். (உஎ)

ஈர்த்திடுமலைத்திடுமெருக்குந்தியுகப்
பார்த்திடுங்கொதித்திடும்பற்கறித்திடுஞ்
சூர்த்திடும்போர்செயத்தொடங்குவாவெனா
வார்த்திடுங்கொலைப்பழியனைத்துமம்மவோ. (உசு)

இன்னணங்கொடுந்தயரெய்தினன்மற
மன்னியதொழிற்சிவன்னன்மற்றவன்
றுன்னியபிதிரர்கள்சுவர்க்கமுற்றவ
ரன்னிகர்கொடுநிரையத்தழுந்தினர். (உஎ)

பிரமலோகத்துறைபிதிரர்யாவரு
மூரமிலராயளறுற்றழுந்தினர்
பரவுபாதகமகன்பண்புநோக்கிய
கரவிலாத்தந்தையுள்கரைந்துசோருவான் (உஅ)

மகனெனப்பிறந்தவன்வயங்குதன்சூலத்
தகனமர்சுற்றங்களனைத்தும்வான்கதி
முகமலர்ச்சியிற்புகமுயலுவானிவ
னிகவருநரகங்களனேகமெண்ணினான். (உக)

தள்ளரிதாயுறத்தக்கசெய்தனன்
கொள்ளரும்பாதகக்குழிசியாயினன்
விள்ளருந்துயரினன்மெலிந்துசாம்புவா
னுள்ளருமிவன்வினையொழிவதெங்ஙனம். (கo)

இமையவர்ப்பணிதருமேகநாயக
னுமையவணையகனுவப்பத்தோத்திர
மமைதரச்செய்வனேலருளுமென்றெமைக்
கமையொடுதிதிசெய்வான்கரியமேனியோய். (கக)

(கலிநிலைத்துறை.)

மின்னேர்சடையாய்விடையாயடையார்வெண்செங்கார்ப்
பொன்னேர்மதிலோர்மூன்றுங்கருகப்பொடிசெய்தாய்
தன்னேரில்லாவிறையோய்மறையோர்தனிவாழ்வே
யென்னேயடியேன்படுதுன்பகலவிரங்காயோ. (கஉ)

மூவாமுதலேமுடியாமுடிவேமுக்கண்ணு
தேவாதேவர்க்கிறையேகறையேய்கிகண்டா
கோவாமணியேமுத்தேயமுதகுணக்குன்றே
வாவாவடியேனுற்றேனுடையாயருளாயோ. (கங)

வானேவளியேயொளியேயறலேமண்ணேமற்
றூனேயுயிரேகதிரேமதியென்றேரெண்மெய்
நானேயுடையேனென்பாய்மறையுங்கவில்கிற்கு
மானேருடையாயடியேன்வேறேருளாயே. (கச)

தொழுவாருள்ளச்சுடரேசுடருட்சுடரேசூர்
மழுவார்படையாய்மானேர்நோக்கிமணவாளா
செழுவானமிர்தேதேனேபாலேசித்தத்து
ளழுவாநிற்பேனல்லேனடியேனல்காயே. (கஞ)

அளவுறுகற்பாரகிலமுழுதுமியற்கொள்வான்
றளர்வுறுபாவங்களையொருமகவாத்தான்பெற்றேன்
களவுறுமன்பர்க்கெளிதருளுங்கருணைமூர்த்தி
பளகறுமாறுபணித்தருணேக்கம்பாராயே. (கட)

(கலிவிருத்தம்.)

என்றிரங்குமிருபிறப்பாளன்முன்
மன்றவெம்மருளாலொர்மறைமுனி
யொன்றுதேவபத்தப்பெயருள்ளவ
னன்றடித்தனன்மற்றவனன்மைபோல். (கஎ)

பாகவெக்கியன்பையுளனைத்தையு
மோகமற்றமுனிவரலைக்கியே
சோகமுற்றனனின்றுயர்சொல்கெனத்
தாகமிக்குவணங்கினன்சாற்றுவான். (௬௭)

ஐயனேயெற்கருமகவென்றொரு
வெய்யபாதகமேவிற்றதுபுரி
மையதீமைகளெண்ணிவருந்தினேன்
செய்யகின்வரவாவதுதீர்ந்தனன். (௬௮)

மிறைகொள்யானுமென்மைந்தனுமேவிய
நிறைகடும்புனிரையம்பிழைத்திட
வறைதிகல்வழியையவென்றுன்மறை
முறையுணர்ந்தமுனிவனுணர்த்துவான். (௬௯)

நிகரிலாதநிருமலசங்கர
னகனமர்ந்துறையற்புதத்தானங்க
ளிகவிலாதவெவைக்கும்விசேடமாப்
பகர்தலங்கோபருப்பதமென்பதே. (௭௦)

ஆரவோர்பதினாறுகுரோசம்வித்
தாரநீளமுளதத்தடவரை
வீரமாதவர்போற்றிடமேவியங்
கீரவான்மதிசூடியிருக்கின்றுன். (௭௧)

பத்தியோடுமைபோற்றுறுபண்பிஞற்
சத்தியீசனெனும்பெயர்தாங்கினுன்
புத்திமுத்தியும்போய்த்தொழுவாருக்குச்
சித்திசெய்யத்திருத்தலவீசனே. (௭௨)

அனையமாதலத்தம்புயமேலவன்
வினையிலாப்பரன்மெய்ம்மலர்ப்பாதங்க
ணினையுமன்பினிரம்பவருச்சித்துப்
புனைசிருட்டிபொலிதாப்பெற்றனன். (௭௩)

சுரசுவாகதச்சொல்லயிராணிகோன்
விரசுமன்பின்விளங்குறப்பூசித்துப்
பரசுமுப்பத்துமுக்கோடிபண்ணவர்க்
கரசனுயமராவதியாள்கின்றுன். (௭௪)

போரவாவுபொருப்புறழ்கிண்புயத்
தாரகாசுரன்பூசித்துத்தாவுறு
வீரவாழ்க்கையஞகிவிண்மண்ணுல
காரவென்றடிக்கீழ்ப்படுத்தானரோ. (௭௫)

ஓங்குமன் பினுருப் பகிபோற்றியே
வீங்குகொங்கைகள்வெய்யவயிரவா
டாங்குதோட்சயிலத்துறத்தாக்கவு
நீங்குரு துங்கழற்றவும்பெற்றனள். (சஎ)

பன்னுமாண்டளப்பான்பன்மலர்கொடு
தன்னுமன்பிற்முழுதருச்சித்தனன்
மின்னுவாள்வயிரப்படைவேந்தன்முன்
னுன்னுதேவர்க்கொருகுருவாயினன். (சஅ)

நெறிகொள்பூருறுநீர்முன்பலகொடு
குறிகொண்மாமழைக்கோளருச்சித்தனன்
மறிவிலாவரம்வாங்கினன்வாள்வலி
செறியுந்தானவர்தேசிகனுயினன். (சகூ)

அன்னமாதலத்தின்னுமளவிலார்
பன்னருந்தவமாற்றிப்பல்போகமு
மன்னவெண்ணியவாறுறப்பெற்றனர்
நன்னர்ஞானமுகண்ணினர்பற்பலர். (சஙo)

பத்தியோடுபெருவத்தினத்தலச்
சத்தியீசனைப்பூசித்துத்தண்ணருட்
சித்தியோர்கைச்சிறுபொனளிப்பினு
முத்தியெய்துவர்முப்புரிநூலினுய். (சஙக)

கிட்டியங்குக்கிளர்தண்டலைமொரு
மூட்டிகல்குவர்மூத்தர்முற்பாவங்கண்
மட்டிலாமலுள்ளோனுமருவுடல்
விட்டிநந்திடின்மேவுவன்முத்தியை. (சஙஉ)

(கோச்சகக்கலிப்பா.)

இருநிலஞ்செய்தவந்தெரிப்பானிலகுறுமத்தலத்தினிடைப்
பெருகுகருணையனறமேபிறங்குகயகுணத்தினன்சீர்
மருவுமறைமுடிவுணர்ந்தோன்மகானந்தபராயணனென்
றொருபெயர்கொள்சிவயோகியொப்பிலாவொருவனுளன். (சஙங)

அன்னசிவயோகிசரணடைந்துமீகலூடு
நன்னருபணிவிடைசின்னுள்புரிந்தங்குறைதியேற்
பன்னரியகின்மகற்கிப்பவப்பாலமுழுதழியு
முன்னர்வினையுங்கழியுமுத்தியுங்கூடுமென்றன். (சஙச)

அத்தகுசொலிருசெவியேற்றகத்துவகையெழத்தேவ
பத்தன்மலரடிவணங்கிப்பழிச்சிஞன்விடைகொண்டாள்
பித்தமிகுமைந்தனேக்கைப்பிடித்தபிடியொடுகொடுபோ
யுத்தமர்கள்புகழ்சீகோபருப்பதத்தையுற்றனனால். (சஙஞ)

உற்றமறையவன்மகனெடொளிர்சத்தியீசனென
நற்றவரேத்திடுதிருப்பேர்நமையங்குத்தரிசித்துப்
பொற்றவணக்கம்பிரதக்கணநூற்றெட்டுறப்புரிந்து
குற்றமறத்துதிசெய்துகொண்டாடிப்புறம்போந்தான். (நிசு)

அதிவன்னுச்சிரமியாயவிர்சிவன்முத்தனுய்க்
கதிர்புவனசற்குருவாய்க்கருணைக்கோராகரமாய்
வதிதருநற்சிவயோகிமகானந்தபராயணன்ற
னெதிர்சென்றுன்மகனெடுமிணையடியிற்பணிந்தெழுந்தான். (நிள)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

குறைவறுமன்புபொங்கக்குடந்தமுற்றெதிரேநிற்கு
மறையவன்றன்னைநோக்கிமகான்ந்தபராயணப்பேர்
நிறைசிவயோகியார்நின்னுடனிற்பான்யாவன்
முறைகருதியதெவன்கொன்மொழியெனவருளினுனே. (நிஅ)

அடியனேனுய்ந்தேனென்னவடியிணைமீட்டுந்தாழ்த்திப்
படியில்யான்மறையோனென்பேர்பாகவெக்கியணிந்நின்ற
கொடியவனெனக்குமைந்தன்சிவன்னனவன்பேர்கூறின்
முடிவறுபாதகங்கண்முயன்றுபன்னுஞ்செய்தான். (நிக)

அனையகாரணத்தினுலேயளவிறுன்புறுகின்றுனித்
தனையனின்றுய்யுமாறுந்தமியனேனுய்யுமாறும்
புனையுமென்சுற்றமுற்றும்புகரறுத்துய்யுமாறு
மினைவறவுணர்ந்துநின்னதிருஞ்சரணடைந்தேனென்றுன். (சுக)

செழுமறையுணர்ந்தயோகிதிருவுளமிரங்கிப்பாவந்
தழுவியகொடியனுனசிவன்னன்முகத்தைநோக்கப்
பழுதிலப்பார்வையாலப்பாதகற்குறுபசாச
முழுவலிப்பிணிகள்பித்தமுழுமையுமொழிந்தவம்மா. (சுஉ)

தணவறுபிணிமுற்றீர்ந்துசற்றறிவுதித்தலாலே
மணமலியோகிதாள்கள்வணங்கினன்சிவன்னன்சீ
ரணவறுமவனுமோர்மாணுக்கனேயாகக்கொண்டு
குணமிகுபணிகள்செய்யக்கொழுங்கடைநாட்டஞ்செய்தான். (சுஎ)

(கலிவிருத்தம்.)

போதனுகியபுண்ணியதேசிகன்
பாதபங்கயஞ்சூடிப்பணிவிடை
யேதமின்றியற்றுஞ்சிவன்னற்குப்
பாதகங்கள்பதறியொழியுமால். (சுஅ)

கந்தமூலபலாதிகள்காமர்தீ
யுந்தவாக்கிடுமோமவிறகுகள்
சந்தமாரக்கொணர்ந்திடுதன்மையிற்
கிந்தியேகியபாவங்கள்சிற்சில. (சுசு)

உத்தமப்புனன்மூழ்கியுவப்பொடு
மொத்தசுத்தியுடையவனுய்நறுஞ்
சுத்தநீர்கொடுவந்துதொகுத்தலிற்
செந்தொழித்தமாபாதகஞ்சிற்சில. (சுரு)

அறப்பெருந்தவயோகிதனுக்கஃ
யுறப்பசும்புலொளிர்தரக்கொண்டுவந்
திறப்பவுண்கவெனநன்கருத்திடு
சிறப்பிற்போகியபாவங்கள்சிற்சில. (சுசு)

உடுக்குங்கூறையொலித்தலிற்கோவணங்
கடுக்குஞ்சிந்தையிலாதகழுவலிற்
படுக்கும்பள்ளிதிருத்தலிற்பாறின
கெடுக்கும்பாதகஞ்சிற்சிலகெட்டனோ. (சுஎ)

கால்செய்வட்டமசைத்தலிற்கைகொடு
கோலம்மாடிதைவருகொள்கையிற்
சாலவும்பணிந்தேத்துந்தகைமையி
னுலநேர்சிலபாவமழிந்தன. (சுஅ)

எதிராதிருவென்னவிருத்தலிற்
கதிர்பகற்பினுங்காரிருண்முன்னரு
முதிருமன்பினடக்குமுறைமையி
னதிரும்பாவமழிந்தனசிற்சில. (சுசு)

தயிலநன்குதடவிதன்மையிற்
பயில்வெந்நீர்நன்பதந்தெரிந்தாட்டலி
னியலுமற்றைப்பணிபுரியேற்றத்திற்
செயிர்கொள்பாவஞ்சிதைந்தனசிற்சில. (எ0)

இன்னவாறுபணிபுரிந்தின்புற
மன்னிடுஞ்சிவன்னனுக்கோர்தினந்
தன்னைநேர்சிவயோகிதயையிஞ்
பன்னுமேன்மைப்பரிகலநல்கினன். (எக)

உண்டசேடமென்னெப்பிலமிர்த்தைத்
தொண்டன்போற்றித்துதித்துக்கையேற்றனன்
மண்டுமென்பின்மகிழ்ந்துபுசித்தனன்
விண்டுநீங்கினவெவ்வினையாவுமே. (எஉ)

அடர்பவந்தொறுமாக்கியதீங்கெல்லாஞ்
சுடரழற்படுதுய்யெனப்போயின
படரராப்பகுவாய்நின்றுநீங்கிய
விடரின்மாமதியென்னவிளங்கினன். (எங)

தேசிகன்பணிசெய்யும்பல்லோருரும்
பேசிவன்முதலென்னப்பிறங்கிரு
னேசின்முன்சென்றகாலுக்கிரங்கினன்
மாசிகந்தமனச்சசிவன்னனே. (எச)

கன்றுமாறுகழித்தவித்தேசிகன்
றுன்றுசன்மத்தொடுகடனின்றியா
மொன்றுமுத்தியுறத்தருஞானமற்
றென்றுநல்குமென்றெண்ணங்கொண்டானரோ. (எரு)

மழையைநோக்கிவருந்தும்பயிரெனப்
பிழையிலாச்சசிவன்னன்பிறப்பறத்
தழையுஞானந்தகப்பெறச்சிந்திக்கும்
விழைவையோர்ந்தனன்மெய்ச்சிவயோகியே. (எசு)

ஆன்றபக்குவனுயினனென்றுளஞ்
சான்றயோகிசசிவன்னனெற்றியிற்
றோன்றவின்பச்சுகந்தருநீற்றினைத்
தான்றன்பொற்கையினுற்றரித்தானரோ. (எள)

படியில்யோகிபரிந்தருறிப்புணர்ந்
தடியனுய்ந்தனனன்பறுதியுளக்
கொடியனுய்ந்தனன்கோலத்திருவருண்
மிடியனுய்ந்தனனென்றடிவீழ்ந்தனன். (எஅ)

அடிபணிந்தவன்றன்னையருகிரீஇப்
படியிறண்ணருட்பார்வைவழங்கிச்செங்
கடியவங்கைசிரங்கவித்தான்மறை
முடிவையோதவுற்றுன்குருமூர்த்தியே. (எக)

அஞ்தியாயளவில்லொளியாயொன்று
யிஞ்தினின்மலமாயெங்குமாயின்பாய்
மஞ்தியாலுணர்தற்கரிதாய்வயங்
குஞ்தியோகியருன்னுநம்முண்மையும். (அ0)

எண்ணிலாதனவாயென்றுமூள்ளவா
யண்ணுலூவகையாய்ச்சதசத்துமாய்க்
கண்ணில்பாசங்கழித்தருமதரு
ணண்ணின்முத்திருணுகுயிருண்மையும். (அக)

அளவில்சத்தியமைந்தனுவாயன்றே
தளர்விலாதுயிர்ப்பற்றியதன்மைத்தாய்க்
கிளருமம்மருளாலன்றிக்கேடிரு
வளர்கொடுங்கருமாமலவுண்மையும். (அஉ)

ஒன்றிரண்டென்றுரைக்கும்பிணக்கற
வென்றுமாநந்தமாயினையில்லதாய்
நன்றுபேரொளிகம்மொடுபேதமாய்
நின்றமுத்திநிலையினதுண்மையும். (அஙு)

பூன்றவாரியனன்றுபுகறலுந்
தோன்றக்கேட்டுச்சிந்தித்துத்தெளிந்துதூ
வான்றவுள்ளத்தனுபவமம்மருளினுற்
சான்றமுத்தனுனுன்சிவவண்ணனே. (அச)

கொடியபாவக்குழியியுமெய்தொணு
கெடியமுத்திநிலத்தையோர்தரிற்
படியின்ஞானிபணிவிடைபோல்வதோ
ரொடிவின்ஞானமுமுண்டுகொன்மாயனே. (அஞ)

பாகவெக்கியனும்பரயோகிதன்
சோகமற்றபணிதுலங்கச்செய்து
மோகமற்றவுளத்தினனுய்முதிர்ந்
தேகமுத்தியையெய்தினனென்பவே. (அசு)

பரமஞானிபணிவிடைசெய்தநல்
வரமனுஞ்சிவவண்ணனுயர்கதி
விரவலாலவற்பெற்றமெய்யன்னையு
முரவுமுத்தியுலகம்புகுந்தனள். (அஎ)

முன்னர்மாநிரையத்துமுழுகினோர்
மன்னுவான்சுவர்க்கத்தமலர்மக
னன்னர்மேவுபதத்தருணுகினுர்
துன்னுசுற்றமுமேயினசுத்தமே. (அஅ)

மேவியன்னவன்விட்டமகளிர்கள்
யாவருஞ்சுவர்க்கத்தையடைந்தனர்
தாவிலன்னவன்றங்கியகல்லிடஞ்
சேவையாருஞ்செயச்சிறந்திட்டதே. (அகு)

மின்னுமாமணிமேவியமார்பனே
பன்னுஞானிபணிவிடைமேன்மையை
ரின்னுமோரிதிகாசத்திலுமோ
ரென்னவாய்மலர்ந்தானெங்கடம்பிரான். (கூ0)

நாமவாள்விழிநாரியர்யாவரு
மேமவாணுருவிச்சிக்கும்பொற்பிணை
மேவோதிச்சுபகையெனச்சொலுங்
காமர்காமக்கணிகையொருத்தியே. (கூக)

எங்குமுள்ளவிரும்பெருஞ்செல்வர்க
டங்கணோக்கைவசஞ்செய்துசற்றிலா
தங்கவர்பொருள்யாவுங்கொள்வாமெனும்
பங்கமார்தருபாவநினைப்பிளுள். (கூஉ)

பொட்டிலுற்சிலர்பொன்னிறமென்கலைக்
கட்டிலுற்சிலர்காமருவாள்விழி
வெட்டிலுற்சிலர்மேனியெழுவிரை
மட்டிலுற்சிலர்மாழ்கவியற்றுவாள். (கூங)

ஆடலாற்சிலராற்நரப்பின்னிசை
பாடலாற்சிலர்பாய்மூலைகாட்டுபு
மூடலாற்சிலர்மொய்யொளிப்பல்கலஞ்
சூடலாற்சிலர்சூழப்புரிகுவாள். (கூச)

மோகமாரமுளைப்பவுரைபகர்ந்
தேகதாரவிரதியருமிருந்
தாகசோபந்தலைக்கொண்டணைதரப்
போகம்விற்றுணும்புன்மையினுளரோ. (கூஞ)

மருவுமைந்தர்மனைக்குலமாதரை
யொருவுமாறிதழுறலருத்தியும்
பெருவினைதக்கலவிபெருக்கியும்
பொருளெலாங்கொள்ளைகொண்டுறப்பூரிப்பாள். (கூசு)

கொக்குப்போலநரைத்துக்குரங்குபோன்
மிக்கசூனுடைமெய்யினராயினுந்
தக்கசாமந்தலைக்கொளச்செய்துபின்
கைக்கணுள்ளகவர்ந்துவிடுவளால். (கூள)

யாண்டொன்றிற்கிவ்வளவுபொன்முன்றில்
வேண்டலாண்டிற்குமேலெனவாங்குபு
தீண்டுமற்றைத்தினத்துப்பொன்னல்கிலுனை
மாண்டுபோகமடித்துக்களிப்பளே. (கூஅ)

மற்றைநாளுமிவ்வாறுருவன்னிடம்
பற்றிச்செம்பொன்பதைப்புறமாய்ப்பளாற்
கற்றைவார்குழற்காமருவாள்விழிச்
சிற்றிடைச்சுபகைப்பெயர்ச்சேட்டையே. (கூகூ)

இனையவாறுபன்னூருமியற்றினு
ணினைவருஞ்செழும்பொன்னுகிரப்பிளுள்
வினைசெய்வெய்யபிணியும்பைசாசமும்
புனைவில்கோறற்பழியும்பொருந்தின. (கஅ0)

பொருளுளாரைப்பொருந்துறவற்றன
ளிருளறைக்கிடையெய்துறவுற்றனன்
மருளகாளுமயக்கியதற்றன
டெருளிலாதுமயங்குதல்சேர்ந்தனள். (கஅக)

ஆர்ந்தகூறையகற்றலின்மேனியைச்
சார்ந்துகாளும்வருத்தலிற்சார்பற
நேர்ந்துநித்திரைநீக்கலின்முன்னைநாட்
சேர்ந்தமைந்தரையொத்தனதீப்பிணி. (கஅஉ)

ஓதிசோரவிதழ்த்துவரோவிடச்
சோதிப்பொட்டுந்தொலையப்பொன்னேலகள்
காதினிங்கக்கிடந்தாள்கலவியிப்
போதுமாற்றிக்கிடப்பவள்போன்றனள். (கஅங)

தழையக்கைதனமேல்வைத்துச்சாம்புதல்
பழையவாசனையான்மைந்தர்பற்றுபு
குழையக்கிள்ளிற்குலையுமுயிரென
விழையச்செய்தாண்மறைத்தல்விழையுமால். (கஅச)

தேருமைந்தர்செவிகள்விடுத்திட
வேர்கொள்கீதமிசைத்திடுமின்குரல்
யாருமஞ்செவிபொத்தவழுகையே
சோர்விலாதுதொடரவிசைக்குமால். (கஅஞ)

மைந்தர்காவிவிடுத்திடமாமத
கந்தநாறியகாமருமேனிதா
னந்தினுசிகையாற்புதைத்தியாவரும்
புந்திமாழ்கிப்புலந்திடநாறிற்றே. (கஅசு)

ஆடல்வல்லவண்முன்னரிப்போதுபே
யாடல்வல்லவளாயினளிவ்வகை
வீடனன்றெனமிக்கதுயருற்றுள்
வீடலில்சுற்றமுந்துயர்மேயின. (கஅள)

மருந்துமந்திரமாதியினுற்பலர்
திருந்துசாந்திகள்செய்யவுந்தீர்ந்திலை
பொருந்துகல்லிடமென்றவள்பாற்புகுந்
திருந்துவாட்டும்பிணிமுதல்யாவுமே. (கஅஅ)

என்னசெய்தும்மினீயெனவேங்குறு
மன்னகாலையவள்பல்பவந்தொறு
முன்னராற்றியநன்மைமுளைத்திட
மன்னவெம்மடிவாழுமுளத்தினுன். (கoசு)

சார்ந்தமேயுருவானவன்றண்ணரு
ளார்ந்தஞானியொருவனவசமாய்
வார்ந்தகாதுடையாண்மனைபுக்கன
னேர்ந்தன்னனல்வரவையுவளுமே. (ககo)

எழுந்துசுற்றமுஞ்சூழவிறைஞ்சியே
செழுந்தண்மாமலராதிகள்செங்கைகொண்
டழுந்திடாதவன்பாலடிபூசித்தாள்
விழுந்துதீவினைவேரொடுந்தீயவே. (ககக)

அனையஞானியருட்கண்வழங்கினுன்
புனைவழிக்கும்பொல்லாப்பெருநோய்களு
மினைதல்செய்யும்பைசாசமுமின்னுந்தீ
வினைசெய்கோறற்பழியும்விலகின. (ககஉ)

துயர்தவிர்ந்தசுபகையென்பாண்மிகு
நயமெய்ஞ்ஞானிநலமலர்த்தாள்பணிந்
துயருநின்வரவாலெற்கொழிந்தன
பெயர்தராதபிணிமுதல்யாவுமே (ககஙு)

ஆதலாலையனேநினையான்பிரிந்
தேதமூழ்கவிருக்குமனமிலேன்
காதலுற்றென்மனையினெக்காலமு
நீதழைந்துறைகென்றுநிகழ்த்தினுள். (ககச)

சொன்னவாறுறையாயெனிற்றூயநின்
பின்னரேகுவன்பேரருஞ்சுற்றத்தோ
டென்னமீட்டும்பணிந்திரந்தாணயந்
தன்னஞானியமையுடனூழினுல். (ககஞ)

சம்மதித்தனன்றூவி லுவகைகொண்
டம்மவோவெனவாடினள்பாடினள்
விம்முகாதலின்மேவுபணிவிடை
செம்மையாரத்தினமும்புரிந்தனள். (ககசு)

மணமிகும்புனலாட்டியும்வாய்க்கியை
யுணவுதல்லனவூட்டியுமோங்குறு
குணமிகுந்தமென்கூறைகணல்கியுந்
தணவுறுதுமென்பாந்தடவியும். (ககஎ)

பூசையிவ்வகைமூவருடம்புரிந்
தாசைதீர்ந்தகருத்தினளாய்ப்பல
நாசமாக்குநன்ஞானமுமுற்றன
ணேசமுத்தியடைந்துநிலவினள். (கக அ)

அவடன்சுற்றமுமன்னமெய்ஞ்ஞானிதன்
னிவருநல்லருளாலிருவானகத்
துவகையெய்திடவுற்றதுமற்றவன்
புவனியின்கட்புகுந்தனன்வேறிடம். (கக கூ)

அளவிலார்களிவ்வாறுமெய்ஞ்ஞானியைப்
பளகிலாவழிபாடுசெய்பேற்றினல்
வளநிலாவியமாமுத்தியெய்தினர்
விளவுகன்ருலெறிந்தமெய்யன்பனே. (க உ0)

இன்பஞானியிருக்குமிடத்தினி
லன்பினும்பரிபூரணமாயுளோ
மன்பதீர்த்தமுமாங்குவந்திதரும்
பொன்பிறங்குநிறப்புருடோத்தமா. (க உக)

திருந்துஞானிசேய்மைக்கணிருப்பினும்
பொருந்தியாயிடைப்போற்றுதலேகட
னருந்தவத்திருஞானியையாமென்றே
யிருந்தவத்தினர்கொள்ளுவரெற்றைக்கும். (க உ உ)

வேறுபாவனைசெய்பவர்மேவுவா
ரீறிலாதவஞ்ஞானத்தையெற்றைக்கு
மூறுஞானிக்கொருவன்செயினஃ
தேறுயர்த்தவெமக்குறச்செய்ததே. (க உ ங)

விரியுநூல்குருவால்விளங்கத்தெரிந்
தரியசாரமட்டுங்கொண்டனைத்தையு
மிரியல்விட்டிடல்வேண்டும்பலாலமூ
முரியதென்றுகொல்லோடுகொள்வாருண்டோ. (க உ ச)

நமையுணர்ந்தமெய்ஞ்ஞானிக்குநூல்களா
லமைதரும்பயன்யாதுநன்னீரெங்குஞ்
சமையக்கூவந்தழுவுதலுண்டுகொல்
கமையிற்றங்கியகெஞ்சுடைக்காகுத்தா. (க உ டு)

நற்குலத்தினுதித்தலநடை
நிற்கலுற்றுநிறையுமருட்டிரு
வொற்கமின்றிப்பெற்றெம்மையுளந்தெளிந்
தற்கல்செய்கலர்முத்தரென்றுவரே. (க உ சு)

மட்டுவார்வனமார்பசருமம்போற்
றொட்டுவானைச்சுருட்டுவருண்டெனிற்
பெட்டுஞானம்பெறுதுபேரின்பமே
யொட்டுமுத்தியுறுநருமுண்டரோ. (கஉஎ)

நன்மைசேருமெய்ஞ்ஞானமுமுன்பல
சன்மந்தோறுஞ்செய்சற்கருமத்தினற்
புன்மைதீரொருவற்குப்பொருந்திடி
மன்மையார்களத்தெம்மருளான்மன்னே. (கஉஅ)

பொங்கருட்பெருஞானிபொருந்திய
பங்கமில்லுட லுள்ளளவும்பகர்
சங்கவாதனையுண்டுதருமுடி
வங்கணம்மொளியாய்விடலுண்மையே. (கஉக)

மருக்கமழ்ந்தவனம்பொலிமாலையாய்
சுருக்கமாகச்சொற்றேமுணரென்றனன்
றிருக்குமூன்றுடைத்தேவர்கடேவனு
லிருக்குநாதனிலங்குகருணையால். (கஉO)

வணங்கிமாயன்வளங்கொடிதிபுரிந்
தணங்கொர்பாலுடையாயடியேனின
திணங்குமின்னருளாலுண்மையாவுநன்
குணர்ந்துபாசமொழிந்தனென்றனன். (கஉக)

மாயனுர்க்கிவ்வகைகன்கருளிய
தூயதேசிகனுகியதோன்றரு
ணேயமாதிதாடுநீண்மறையின்முடி
யாயதில்லைச்சிற்றம்பலமேயினன். (கஉஉ)

அரவுலாஞ்சடையண்ணலடிமல
சிரவுகன்பகலுந்தொழுமேற்றத்தீர்
பரவுஞானிபணிவிடைப்பேற்றினை
யுரவுசேருமதுள்ளத்துணர்மினே. (கஉஊ)

ஏழாவது

ஞானிபணிவிடைப்பேறுசொற்ற வத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் எ-க்குத் திருவிருத்தம் கூடுஉ.

ஊ

எட்டாவது

பிரமன் முன்னோர் தில்லையினேற்று ஞானம்பெற்ற வத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

பரமன்மாம்குரைத்தஞானிபணிவிடைப்பேறுசொற்றுங்
கரமனஞ்சங்கமேபிக்கரியவனருண்மேற்கொண்டு
வரமனம்பலநற்றில்லைமாநகரடைந்துநோற்றுப்
பிரமன்மூற்றேவர்ஞானம்பெற்றதும்விளக்கச்செல்வாம். (க)

நிலாச்சிவபரன்றனைதிருந்தருளப்பெற்றன்
பிலாதறமகிழ்ச்சியெழப்பொலிவுற்றமாய
னிலாத்தில்லையூரவ்வினையிலியெய்தக்காணு
னிலாதமுங்கியெண்ணியெண்ணியுள்ளிரங்குகின்றான். (உ)

(ஈற்றடிமிக்கதவந்த தான்கடிக்கலித்தாழிசை.)

அரியானேயாவருக்குமன்பருளமேய
பெரியானேப்பிஞ்ஞகனேப்பேணுநெடுவேதப்
பரியானேப்பண்ணவர்கள்பண்ணவனேக்கண்டங்
கரியானேக்காணுதகண்ணெண்ணகண்ணே
காலகாலனேக்காணுக்கண்ணெண்ணகண்ணே. (ங)

பாயகடலெழுந்தவிடம்பருகியுலகளித்த
தூயவனேயொருமுக்கட்சுயம்பிரகாசனேசன்
காயவர்தம்முளத்தமருமண்ணலேயங்கயிலே
நாயகனேவழுத்தாதநாவெண்ணநாவே
சமச்சிவாயாவென்ணுகாவென்ணநாவே. (ச)

உதியாமையிறவாமையுள்ளவனேவுயிர்க்குங்
கதியார்வமுணர்ந்துபெறக்கடைக்கணிக்கும்வள்ளல்
பொதிவாசநறுங்கடுக்கைப்பூம்பிணையன்மார்பன்
மதிசூடிகழலுன்னுமனமென்னமனமே
மாதேவன்கழலுன்னுமனமென்னமனமே. (ஞ)

பொங்கார்வமெழத்தினமும்போற்றுவாருளத்தே
மங்காதசுடரொளியாய்மன்னியுறையொருவன்
கொங்காருறையிதழிக்குருச்சடையெம்பெருமான்
கங்காளனடிதொழாக்கையென்னகையே
கறைக்கண்டனடிதொழாக்கையென்னகையே. (ட)

கொங்கையோர்வண்டினர்தேன்கூட்டிணும்பூங்கூந்தன்
மங்கையோர்பங்குடையோன்மாண்புலித்தோலுடையோன்
கங்கையோடரவணியுங்கவின்சடையோன்கனலார்
செங்கையோன்சீர்கேளாச்செவியென்னசெவியே
சிலபிரான்சீர்கேளாச்செவியென்னசெவியே. (எ)

(கலிநிலைத்துறை.)

என்றிரங்கிஞ்னைம்பிரான்றரிசனமின்றி
யொன்றுவைகுந்தமடைந்துயிர்வாழ்கிலேனன்ஞான்
சென்றருல்லிடமடைந்துபோற்றித்திகழ்விடைபெற்
றின்றுமீள்குவலெனமனவுறுதியோடெழுந்தான். (அ)

சீர்கொளிக்கயிலாயத்தையடைந்திலன்சென்ற
வேர்கொணற்றிசைநோக்குறினிலங்குபொற்றில்லை
யூர்கொளம்பலமேயடைந்தனன்கொலென்றுன்னி
னார்கொள்சிந்தையிஞரணன்வழிக்கொடுபோவான். (கூ)

கனகமாமலர்சிந்துகிடப்பனகண்டா
னினமுறும்மலர்தெய்வமாமலரென்பதுணர்ந்தா
னனகவாசிரியன்சென்றவழியிதென்றடைவான்
மனநிரம்புமன்புடையமாலென்னுமாணக்கன். (கo)

கொண்டல்செய்யதாமரைபலபூத்தெழில்குலவ
மண்டனிற்படர்ந்தாலெனப்படர்மறுமார்ப
னண்டர்தம்பிரானருணனிசிந்தித்தாங்காங்குக்
கண்டயாவையுங்கனிந்தபேரன்பொடிவிஞவும். (கக)

(கலிவிருத்தம்.)

பூங்காவனக்குயிலேதழைபொலியத்திரிமயிலே
நீங்காமலெவ்வுயிர்க்குமுயிராய்நின்றருணிமலன்
பாங்காருண்மையாளோபெசுங்கொன்றைமணப்ப
வீங்கார்வழிச்சென்றுன்கொலிசைப்பீரெமக்குறவே. (கஉ)

தேனேயெனப்பேசித்திரிசெழுஞ்சாரிகைப்புள்ளே
யூனேயுயிரெனப்பேட்டொடுமுறைதூதுணம்புறவே
யானேறியகொடியானவிர்மதியேறியமுடியான்
மானேர்விழியுமையாளொடுவரக்கண்டதுமுண்டே. (கங)

மாவேறும்பலவேபுனல்மண்டுந்தடமலர்த்த
பூவேசெழுங்காவேயலம்புனர்ஞானமுணர்ந்தோர்
காவேபுகழ்பெரியோனெனைநன்றாட்கொளவுரியோன்
றேவேசனிவ்வதிமாதொடுசென்றுன்கொலுரைப்பீர். (கச)

கிளிகாண்மிகுகளிகாணுறக்கிளர்மாமலரடையு
மளிகாளுளர்வளிகாணுறவலங்குர்பசுங்கொடிகா
ளிளிகாணெனமொழிமாதொடுமெம்மாணிணையில்லா
வொளிகாலவிவ்வழிவந்தஃ தண்டோவுரைத்திடுவீர். (கடு)

குருந்தேகறுங்கொன்றுய்கொடிமுல்லாய்செழுங்குரவே
இருந்தேனெனநிற்குமொருசிறியேனையும்பொருளா
வருந்தேலெனவாண்டோனுமைமாதோடுமிவ்வழியே
மருந்தேயெனச்சுரேத்திடவந்தான்கொலுரைப்பீர். (கசு)

அனமேயன்றிலினமேதுகிரடியொண்மடகாராய்
தனமேருவையனையாளொருதாயோடெதிர்தோன்றி
முனமேயெனையாண்டோன்முழுமுதல்வனிணையில்லான்
கனமேபுரைகண்டன்வரக்கண்டீர்கொலுரைப்பீர். (கஎ)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

மாயனிவ்வாறுவினவிஞனென்றும்வாய்திறவாமையைக்கண்டு, பாயதான்மறைக்குமெமக்குமற்றுள்ள பண்ணவரறிவிற்குமெட்டாத், தூயவான்சுடரையிவைகளோவறியுந்தொடர்ந்தியாம்வினவியதெவனென், ரூயமற்றெவையும்வினவுதறவிர்த்தானளவறிவரைவொடுபடர்ந்தான். (கஅ)

பற்பலவரைகள்பற்பலகான்கள்பற்பலவாகிநதங்கள், சொற்படுபற்பனகரங்கள்கடந்தான்ரூன்றவாங்காங்குவீற்றிருக்கு, மற்புதம்பயக்குஞ்சிவாலயம்பலவுமன்புறத்தாழ்ந்துதாழ்ந்தகன்றுன், பொற்புறுபுகழ்சேர்சென்னிகாடென்னும்பொன்னிகாட்டகமடைத்தனனால். ()

அனையகன்னட்டினுள்ள மாதலங்களதரிடைக்கண்டனயாவு, நனைமலர்கொடுதூயன்பினிற்பணிந்துநான்மறைவாழ்த்தொலியமரர், வினையறநாளுமேத்தொலிமுனிவர் விரித்திடுமரவொலிமற்றைப், புனையொலியறுத லில்லையினெல்லைப் புறம்பணமருதஞ்சென்றடைந்தான். (உ0).

பீலியிற்பிளிறும்பெருமடகாரைபிறங்குவெண்டாமரைமலரை, யாலியவன்பிற்பெடையெனவணைப்பவயற்பெடை கொடியையென்றாடிச், சாலியொண்பயிர்ப்புக்கொளிப்டவச்சேவறலியினல்வணங்கி நன்கினைத்துக், காலியல்கயல்களெடுத்தெடுத்தருத்திக்கடந்தனிர்க்கியுள்ளுவக்கும். (உக)

காவிகள்னொழுக்கும்வாவியிற்கவரிகாலுழக்கிடக்கருவாளை வாவிமேலெழுந்துவானகச்சுரபிமடித்தலமுட்டிடமருண்டக்கோ வியலினங்கன்றெனநினைந்தொழுக்குங்கூர்சுவைப்பாணினிபெருகியாவிபாலாழிகால்கள்பாலாறென்றறைதரப்பொலிதருநாளும்(உஉ)

ஓங்குபுனல்வரவிக்கயல்வராலியுறுகுலவளர்நறுமாலிற்
றூங்குறுகனிகளருகுத்திடத்தாங்கிச்சுவைமதுப்பங்கயம்பொலிதல்
வாங்குறுதுகிற்பின்மலைமகண்மணாளன்மாநடம்போற்றவக்கடலைப்
பாங்குறுவோருக்கினிதுறவளிப்பப்பண்பின்வைத்திருப்பனபோலும்

கலையடிக்கயவாய்ப்பிணர்மருப்பெருமைகழனியுட்கமுகெனக்
கதித்த, சுலைபடுகழைக்காடுழக்கிரோடைத்தொகுபுழற்காலரக்காம்பற், குலைபடுமலருட்செம்மனீத்தருந்திக்கொழுங்கதிர்ச்சாலிவாய்குதட்டி, நலையறத்தளிர்களருப்பியதேமாநறுநிழற்கன்றெறிமுறங்கும். (உச)

வெடிபடுவாளைமீமிசைப்பாயவிரிதலைக்கமுகிடைப்பிறங்குங், கடிபடுமிரல்கீண்டொழுகுசெந்தேன்பல்காலுலைதிகியெனப்பெருகி, மூடிபடுகூனற்குலையுடைக்கதலிமூழ்வதுமடியறச்சாய்த்துத், தடிபடுமில்பாய்பரவையுட்பரவித்தங்கியவுவர்மூழ்துகற்றும். (உரி)

குடம்படுசெருத்தற்கருநிறக்கவரிகொழுங்கழைகறித்தனகுதட்ட,விடம்படுகடைவாய்கின்றெழுமுகியசாறிடையுறுவொழுக்குறவோடி, விடம்படுகருங்கணுழத்தியர்பயிலுமென்பணைப்பெருவரம்புடைக்கத், திடம்படுமூழவர்சாறுகெட்டி செறித்துடைமடையடைத்திடுவார். (உசு)

மழையகடிரிஞ்சும்பசுந்தலைக்கமுகின்வலிகொடிதுறப்படர்ந்த, தழைகொடிபற்றியேறியங்குறையுஞ் சங்குகணவிவயிறுவாங்கி, விழைதரவீன்றவெண்டரளங்கண்மிளிருமித்திரமெனவுகுவ, வுழைதிரியுழவருடைந்துவெண்பாளையுகுவனமிகவுமென்றுரைப்பார். உள

குவிமுலைப்பாரம்பொறுக்கமாட்டாதுகூவிளிகொண்டுநாடோறுமவிதருமகிழ்வினரற்றுதண்மருங்குலாற்றுக்காலாட்டியர்பின்பு [ன்கவினடைகற்பான்றெடர்ந்துபன்னுநங்காமருகுமரிவெள்ளனங்கபுவியுறநடந்துதிரிதலிற்சிவந்தபுகழ்தரத்தோலடியவைக்கே. (உஅ)

தலைவிரித்தெழுந்தகோழரைத்தரக்குத்தாணிகர்காய்க்குலையரம்பை, மலைமடற்செங்காய்ப்பசியமென்கமுகுவண்சுவைக்கழைக்கரும்பிவைகள், நிலையுடைச்சிறகரிர்ந்தவனமருஞ்செம்பொன்மாமண்டபகாளு, நிலையுடைக்கவினிற்பொலிதரவுயர்ந்துநிலவுபுறுண்டொறுநிற்கும். (உக)

கருநெடுந்தடங்கணுழத்தியராய்ந்துகூகைகடிந்திட்டகாட்பிழைத்து, மருவரக்காம்பல்பங்கயந்தழைந்துவளரழல்பொருவவுட்சிவப்பத், திருகுவெஞ்சினங்கொண்டனவிவையென்றுதெரிந்துசேணுலகுறவளர்த்து, பொருவறமுதிர்ந்துகாய்த்தசெஞ்சாலிபொருக்கெனத்தலைவணங்கியதோல். (கo)

இத்தகுமருதப்புறம்பணைவளங்களியாவையுநோக்குபுகடந்து,சி
த்தமாசகன்றேரடைதரவிரும்புந்தெய்வதத்தில்லைமாகர்சார்ந்,த
த்தமப்பெருமான் றிருவுலாப்புறம்போதொளிர்மணி வீதியையடைந்
தான்,சுத்தரந்தாங்கிச்சுயின்சுழாந்தடுத்துக்கோக்கஸைப்புரந்தபைங்
கொண்டல். (கக)

திருவலகேந்திப்பணிபுரிவாருந்தெளிதும்புனறெளிப்பாரு
மருவுபேரன்பினடகவில்வாருமாண்புறச்சூழ்ந்திடுவாருங்
கருதிவணக்கமியற்றுவார்களுமங்கப்பிரதக்கணங்கசிந்தூள்
ளுருகிடவியற்றுவார்களுமானுருலப்பிலரத்திருமறுகில். (கஉ)

பனிதறும்புனலிற்சந்தனங்குழைத்துப்பைம்பொன்வேதிகைத்
தலமெழுகிப், புனிதவெண்டரளம்பொடித்தினிதெடுத்தபொடிகொ
டிகோலமும்புனைந்து, தனியொளிர்தரப்பொற்பாவைகளேந்துதரணி
நேர்மணிவிளக்கமைத்துக், கனிவுறநறுநெயுண்டொளிர்தீபக்கணங்
களுங்களுறச்சமைத்து. (கங)

தண்ணிபதறும்பூம்பந்தருமமைத்துத்தாமங்கள்சூழ்வரகாற்றிக்
கண்ணியகதலிகழைகமுகிளநீர்காறுறுங்கவினுறயாத்துப்
புண்ணியமூளைப்பாலிகைகளுமமைத்துப்பூரணகும்பமுமுறவைத்
தெண்ணியபிறவும்புனைந்திடவிளங்குமியண்மறையவர்மனையாவும். ()

மாமறைமுழக்கமருப்பெருஞ்சாலைமண்ணியயாகநற்சாலை
நாமருவினிதூணல்கிடுசாலைநறியநீர்வாக்கிடுசாலை
காமருசெம்பொனுடகசாலைகரைபிறவுறைப்பயில்சாலை
தூமணியொளிரம்மறுகிருபாலுந்துவன்றுவபற்பலமாதோ. (கடு)

மருவுவிண்ணமரர்மண்ணகம்புரக்குமன்னவர்மிடைதலினுளு
மொருவர்தம்முடியினொருவர்தம்முடிசென்றுரிஞ்றவீழ்பலமணியும்
பொருவறுபூம்பூமாலையுமொளிரும்பொன்னரிமாலையுமற்றைக்
கருகிருள்கடியும்பன்மணிமாலைக்கணங்களுமாவயிற்குப்பை. (கஎ)

மறையொலிமுழக்கும்விழாவொலிமுழக்குமணவொலிமுழக்கமு
கால்வாய்க், கறையடிமுழக்கும்வாம்பரிமுழக்குங்கடவுபொற்றேரு
ருண்முழக்கு, நிறையிளமகளிர் சிலம்பொலிமுழக்கு நீடியவாழ்த்
தொலிமுழக்கு, மறைபுகழ்மிகுத்தவரவொலிமுழக்குமண்டமெலாம்
பரவிடுமால். (கஏ)

சொல்லரும்பெருமையத்திருமறுகின் றெருவுளநோக்குபுமகிழ்
ந்து, செல்லருமன்பிற்பணிந்தபொன்வரைபோற்சென்றுயர்ந்தோங்
கியொண்மணியா, லல்லறவிமைக்குங்கோபுரவாயிலடைந்துதாழ்ந்
தாலயம்புகுந்தான், மல்லன்மோட்டாமையுருக்கொடுவெரிகின்மந்த
ரந்தாங்கியமாயன். (கஅ)

ஆலயமுன்னரன்புறவணங்கியருஞ்சிவகங்கைநீர்தோய்ந்து
வாலியநீற்றுத்தூளணிஞ்செய்தமன்னுமுப்புண்டரந்தரித்துச்
சாலவுமுயர்ந்தகண்மணிபூண்டதருமுறையினந்தெழுத்தெண்ணி
யேலவார்குழலான்மகிழ்ந்தரகடஞ்செயிறையவன்பேரருளுன்னினேன்.கக

பிறங்குறுதிருப்பேரம்பலம்பணிந்துபேரொளிப்பிழம்புநின்றுடுமறங்
கிளர்திருச்சிற்றம்பலமுன்னரடைந்தனன்றண்டெனப்பணிந்தா, னிரு
றங்கிளர்தரக்கணீர்மழைபொழியநெஞ்சகநெக்குநெக்குருக, மறங்கி
ளர்திகிரிப்படையிஞன்மகிழ்ந்தமுறுவலுந்தாழ்ந்துதாழ்ந்தெழுந்தான்

நலங்கிளர்ஞானந்தெளிதரவளித்தநாயகன்பேரொளியுருவை
யலங்குசின்மயமாமானந்தக்கூத்தையல்லியங்கமலக்கண்விடுத்து[ன்
வலங்கொளக்கவர்ந்தானஞ்சலிமுகிழ்த்தான்மட்டிலாவன்புருவாரு
கலங்கலில்கருணைக்கிலக்கனேயாகிக்கரைந்தனன்பற்பலதுதிகள். ()

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

ஒருமுக்குணங்களறத்து மிக்குமோரெண்குணங்களுடையனெவன்,
கருமத்தொழில்யாவையுங்கழிக்குங்கழலாத் தொழிலந்துடையனெ
வன், மருவப்படுபல்வடிவனேத்து மாய்க்குமொன்பான்வடிவனெவ,
னருமைப்படுமச்சிவச்சுடரையானும்போற்றித்துதிக்கின்றேன்.(சஉ)

எல்லாவுயிர்க்குமருளிச்சையினிக்குமிச்சையுடையனெவன்
பொல்லாவறிவுமுழுதொழிக்கும்புகரிலாவொள்ளறிவனெவன்
மல்லார்மனுக்கள்யாவுமாய்வயங்குமனுச்சொரூபனெவ
னல்லார்கண்டத்தவனடிகள்யானும்போற்றித்துதிக்கின்றேன்.(சஙட)

வானுதியவைம்பூதங்கள்வகுத்துக்காத்துமற்றவைகண்
மானுவருளினுயிர்களொழின்மருவப்புணர்த்துமறிவனெவ
னூனுந்தருமவ்வுயிர்க்குயிராயுணர்வாய்நிற்குமொருவனெவ
னானுந்கொடியப்பரம்பொருளேயானும்போற்றித்துதிக்கின்றேன். ()

முதியவேதாகமஞ்சொல்பொருண்முற்றுமாருமுதல்வனெவன்
பொதியுமவையாகானுண்மைப்பொருண்மத்தகத்துநிலையனெவன்
விதியும்விலக்குமவருத்தேவர்க்கும்வீளங்கவுணர்த்தும்விமலனெவ
னதிகனெவனப்பரசிவனேயானும்போற்றித்துதிக்கின்றேன். (சஙி)

மருள்சேர்மலகேவலத்துயிர்க்கண்மலர்பைந்தருவின்வதிதழலாய்த்
தெருள்சேர்சகலப்படுமுயிர்க்கட்சிலையினழலாயிவைகடந்த
பொருள்சேர்நிலையிலயத்தழலாய்ப்பொருந்தியருளும்புனிதனெவ
னருள்சேரச்சிவக்கொழுந்தையானும்போற்றித்துதிக்கின்றேன்.

பாசவறிவிற்பசுவறிவிற்பற்றுறுதபரமனெவன்
மாசுபடுமவ்விரண்டுமறமாற்றியருளும்வள்ளலெவன்
றேசுதிகழுஞ்சடத்துவாத்திருவுருவத்தேவனெவ
னூசும்புகரிலவ்விறையையானும்போற்றித்துதிக்கின்றேன். (சஎ)

கலங்குமெனக்குமுன்றோன்றிக்கரிகின்மறையின்முடிவேனத்தும்
விலங்குமலங்கண்மறித்தொழியவிருப்பிற்றெருட்டியருளியான்
மலங்கவெதிர்கின்றெழுர்தருளிவந்துதிருச்சிற்றம்பலத்தி
னலங்குரடனம்புரிபரமாயனுமுன்னேத்தொழுகின்றேன். (கஅ)

என்றுதுதித்தானடருவிலுமெம்மான்கடைக்கணேக்கருளி
மன்றினதுதுதிக்குமணமகிழ்ந்தேதின்பேருலகமடைந்
தொன்றமுன்புயாமளித்தவண்மைபோற்றியுலகளித்தி
துன்றுகலப்பும்பின்னுறுவைதுளங்கேலென்றுவிடைகொடுத்தான்.

ஐயனருளைமறுப்பதனுக்கஞ்சிப்பணிந்துபுறவிடைகொண்
டெய்யவிரும்புவாருள்ளத்தொளிராலயத்தின்புறம்போந்தான்
செய்யசிறைப்புள்ளினேனேந்தான்சிவணிற்றதுமேவினனிவர்ந்தான்
பொய்யிலவர்களேத்தெடுப்பப்பொலிவைகுந்தகரடைந்தான். (கo)

(நலிநீலத்துறை.)

சூலவுகாவலர்புகழ்ந்திடத்தக்கவைகுந்த
வுலகமாயவன்மேவிவீற்றிருக்குகாளுவந்து
மலரின்மேயகான்முகன்மகபதிமற்றையமரர்
பலருங்கூடியவ்வைகுந்தமாநகர்படர்ந்தார். (கக)

மடங்கலாதனத்திருந்தபைந்துழாய்முடிமாலைத்
தடங்கொள்கண்களிகூர்தரநோக்கினர்தாழ்ந்தா
ரடங்குமுமிழ்வொடுதுதிபலவெடுத்தறைந்தா
ரிடங்குலாவுமாயவனளித்திருக்கெனவிருந்தார். (கஉ)

வந்தகாரியமென்னெனமாயவன்வினவக்
கந்தமாமலர்க்கிழான்முதல்வானவர்களித்துச்
சந்தமாமறைத்தலைமையோன்கயிலேசார்ந்து
பந்தநீங்கிடவருந்தவம்பற்பகலாற்றி. (கங)

தெய்வநாயகன்றிருவருட்காட்சியுப்பெற்றுச்
சைவஞானமும்பெற்றுளாயாதலிற்றடங்க
ணேயனேயந்தப்பெறலருஞானத்தையாங்க
ளுய்யநின்னிடைப்பெறுவதுகருதிவந்தற்றேம். (கசு)

என்றுவிண்ணப்பஞ்செய்தனரிகல்வளையாழி
யொன்றுசெங்கையானுவந்தனன்கேட்டிலேகைகொண்
டென்றுமின்பருதிறைகொளவெண்ணிலீர்சால
நன்றுநன்றுநீர்விரும்பியகாரியமகர்காள். (கஎ)

உமைமணாளனண்ணுணர்த்தியஞானமுற்றுணர்த்த
வமையும்வல்லவனல்லனல்லனாயினுமுணர்த்தச்
சமையுமவல்லவன்சங்கரனெருவனேகண்டீ
ரிமையுமுதன்மெல்லிருமொன்றுசெய்திடுமின். (கஞ)

உலகெலாமுருவாகியபுருடனுக்குளமா
யிலகுறுத்திசனஞ்செயின்முத்தியீகுவதா
யலகில்பாவமும்போக்கிநல்லருளளிப்பதுவாய்க்
குலவுபோகமும்வேண்டுவார்க்கருள்குணத்ததுவாய். (இ௬)

மனவியோடுகூங்குடியிருந்துறவழிபாடு
கினைதரச்செயப்பட்டதாய்நினைத்திடுவார்க்கும்
வினைகடிந்தருண்மேன்மையதாய்மெய்ஞ்ஞானியர்தம்
புனையுமுள்ளத்துப்பொலிவதாய்விளங்கிடும்புலியூர். (இ௭)

அனையமாதலந்தனையடைந்ததித்துமூழ்குறுவார்
வினைகடிந்திடுசிவகங்கைமிளிர்புனன்மூழ்கித்
தனைநிகர்த்தநீறணிந்துகண்மணிதகப்பூண்டு
புனையுமாமனுவெவற்றினும்விசேடப்பூண்டதுவாய். (இ௮)

மருவுகன்சதவருத்திராகுவெதிவதுவாய்ச்
சருவசித்தியுந்தந்தருள்புரிவதாய்த்தயங்குந்
திருவமாருமைமந்தெழுத்தினப்பிரணவஞ்சேர்த்துப்
பொருவிலாதபத்திமையொடுபொருந்துறவெண்ணி. (இ0)

அந்தமந்திரங்கொண்டுசித்தம்பலத்தாடு
மெந்தைதன்றிருவடிகளுக்கருச்சனையியற்றிச்
சந்தமாருமானந்தநன்னடனமுந்தரிசித்
துந்துமன்பொடுசிலபகலத்தலத்துறைமின். (இக)

மங்கைபங்குடைச்சிவபிரான்குரவனாய்வந்தே
யங்கைநெல்லியிற்றெளிபமெய்ஞ்ஞானநன்கருளுஞ்
சங்கையின்றியோர்வீரசென்மினென்றுரைதந்தான்
கொங்கையேந்திய தழாயமுடிக்குணப்பெருங்குரிசில். (இஉ)

கேட்டவானவரின்பமுமுவகையுங்கிளர
வேட்டதுற்றனமின்றெனவிருப்பொடுமுளரி
காட்டமாயவனிணையடிபணிந்தனர்கடந்தார்
கூட்டமாதவர்புகழ்குளிர்தில்லையையடைந்தார். (இங)

மாசின்மாயவன்சொற்படிவண்புனன்மூழ்கிப்
பூசிப்புண்ணியநீறுகண்மணித்தொடைபூண்டு
தேசின்மிக்கவைந்தெழுத்தினைச்சிந்தையினெண்ணி
யாசிலாதசேவடியருச்சனையுகண்காற்றி. (இச)

மருவுமானந்தநடனமும்வளம்பெறப்போற்றி
பொருவிலாதபல்விரதமும்புரையறவாற்றிப்
பெருகுமாமறைமுடித்துதிபற்பலபேசி
யுருகுநெஞ்சராய்த்திருவருளுன்னியங்குறைந்தார். (இஞ)

வேணவாமுதற்குற்றங்கள்வேரறக்கடிந்து
பூணயாவருக்கும்படாவிரதங்கள்பூண்டே
யாணமோங்கிடவமர்களாற்றுமாதவத்தை
மாணநோக்கியதம்பிரான்வெளிக்கொவந்தான். (சுசூ)

கண்டவானவர்பொருக்கெனவெழுந்தனர்களித்துத்
தண்டநேர்தரப்பணிந்துகைதட்டமிட்டாடித்
தொண்டரேம்பிழைத்தேமெனச்சூழ்ந்தெதிர்ன்றுரு
ரண்டநாயகசயசயபோற்றியென்றறைந்தார். (சுஎ)

குன்றவார்சிலைகோலியகுழகனேபோற்றி
வென்றமால்விடைமீதிவர்வேதியபோற்றி
யொன்றவெங்களையாட்கொளுமுத்தமபோற்றி
மன்றமார்தருமாணிக்கக்கூத்தனேபோற்றி. (சுஅ)

விலங்கும்வெவ்வினையாருளமேயவபோற்றி
யிலங்குமாமதியேறியவேணியபோற்றி
மலங்குமெங்களைப்புரந்தருள்வள்ளலேபோற்றி
யலங்குமன்றினிலானந்தக்கூத்தனேபோற்றி. (சுசு)

கம்பமால்கடக்கரியுரிபோர்த்தவபோற்றி
வம்பரும்மலர்வயங்குபொற்கொன்றையாய்போற்றி
நம்பரும்தழலெமக்குநல்கிறையவபோற்றி
யம்பசும்பொன்மன்றற்புதக்கூத்தனேபோற்றி. (எ0)

வேதசாரமாய்முத்தியைக்கொடுப்பதாய்வீமல
போதமீவதாய்ப்போகங்கள்புணர்ப்பதாய்ப்புவன
வேதநீக்குவதாய்ப்பொலியின்பமாகடன
மாதர்காணுறமன்றிடைநவில்பவபொற்றி. (எக)

வேதனுதியரிவ்வகைதுதித்தலும்வீமல
நாதனுரெதிர்கண்ணியகூற்றுயிர்குடித்த
பாதனுரருட்பரமனுர்திருவுளம்பரிந்தே
யோதனுர்முகநோக்கியீதுரைப்பவரானுர். (எஉ)

போதுமேவியபிரமன்முன்னுகியபுலவீர்
யாதுவேண்டுவதுரைத்திடுமெருளுதுமென்றுர்
நீதிதீர்ந்தனமென்றுபொற்சேவடிவணங்கி
யோதுமெய்ச்சிவஞானம்வேண்டுவதெனவுரைத்தார். (எஊ)

அரவுசேர்சடையர்தணிவுறியவடிகள்
பரவுதேதிர்தம்பர்தம்யாவரும்நிற்தொழியக்
கரவுசேர்தருக்குருவையிலுங்கடைக்கணித்தே
விரவுதண்புடையிருத்தினன்பிளவாய்விள்ளும். (எசு)

மருவுமானந்தசொரூபமாய்வாக்கொடுமனுதி
யொருவிகிற்பதாய்ப்பூரணமாயென்றுமுளதாய்
நிருவிகற்பமாய்நிருமலமாய்நிகரிலதா
யருவமோடுருவிலதுமாயொளிர்பரம்பரமே. (எடு)

சகலமோக்கமாகியமாயைகஞ்சத்தி
சுகசொரூபரம்மாற்றொழிற்படுவதாலென்று
மகிலாஞ்சுயசொரூபநல்விசாரமிலாரை
யிகவிலாதென்றுமறைக்கும்பேரெழினியையேய்ப்ப. (எசு)

அவ்விசாரமுண்மையினுளார்தமைமறையாது
வெளவுநீர்மைகொள்பிரளயகாலத்தம்மாயை
செவ்விதாகியநம்மிடத்தொடுங்கிடுஞ்சென்ம
வெவ்வங்கரம்மடித்தொழும்பியற்றிமையீரே. (எஎ)

பொருந்துசீவர்கள்புரித்தமெய்க்கமைத்தவூழ்போக
விருந்தசஞ்சிதமும்முடலூழ்நுகர்ந்திடுங்கால்
வருந்திமேடியகருமமுமம்மிடைவதித்து
திருந்துமாறுசெய்மறுதிருட்டிக்குவித்தாகும். (எஅ)

பகர்வினைச்சமம்வாய்ந்தமும்மலபரிபாகத்
தகவடைந்தவரெவ்வகைப்பிறவியுஞ்சாரா
நிகலிலின்பமாயேகமாயினையிலாததுவா
யுகலிலாததாயோங்குநம்மொளிக்கலப்புறுவார். (எகூ)

ஒருபவத்தினைப்பூமியினுத்தமகுலத்து
மருவிமானுடகருமங்கள்புரிந்துசன்மார்க்கத்
திருவமார்கிலகின்றுதேசாருநம்மருளாற்
பொருவிலாதமுத்தியிற்புகுவாருஞ்சிற்சிலரே. (அ0)

(கலிவிருத்தம்.)

பல்லுயிர்கருமத்தின்பகுதிக்கேற்புறச்
சொல்பலயோனிகடோறுந்தோறறமுற்
றல்லலுஞ்சுகமுமிக்கடையும்பல்லுயிர்
புல்லுமானிடபவம்பொருந்தவற்றுளும். (அக)

பூருவசன்மபுண்ணியவிசேடத்தாற்
சாருபுகற்குலசன்மமாப்புவி
யோருநம்மனுக்கிரகத்தினுண்மையி
னேருநற்கருமங்கணிகழ்த்திநாடொறும். (அஉ)

தொடர்தருசித்தநற்சுத்திவாய்ந்துபின்
னடர்சமூசாரபயிக்கருரென்றெணணியே
யிடரறுவிரத்தியிக்கினையிலாக்கதி
படரியவிருப்பமென்மேற்பரந்தெழ. (அங)

உறைமறைமுடிக்கதியுபாயமாய்வளர்
நிறைசிவஞானத்தைநிகரிலாதகம்
மறையருளாலடைந்தலங்குமுத்தியி
னிறைபெறுமுயிர்சிலவிலங்குவானுளீர். (அச)

சாற்றிடியாவருந்தகுநன்ஞானத்தா
லேற்றமார்முத்தியையெய்துவார்ஈனி
யாற்றிடுகருமங்களனைத்துஞானங்கொள்
போற்றிடுசாதனமாய்ப்பொருந்துமே. (அடு)

தறைபுகழ்சாந்தியேதாந்தியேமுதற்
கறையறுகுணத்தொடுகருமமாற்றிடிற்
றுறைகொளப்பவதழினே தூயமாமறை
யறைசிவஞானத்தையடைகுவாரரோ. (அசு)

வாரணவாசிமுன்வருக்குருந்தலத்
தோரணவுறவதிற்தெவரிறப்பினு
நாரணவுறுமவர்ஞானவாளராய்ப்
பூரணமுத்தியிற்பொலிதலுண்மையே (அஎ)

வித்தகநூல்களுள்வேதமுத்தம
மொத்தமந்திரத்துணேத்தெழுத்தத்துத்தமஞ்
சுத்தநல்வானவர்தொகுதியுள்ளுமிக்
குத்தமமுடையம்யாமொருவமேயரோ. (அஅ)

தலங்கள்பல்லவற்றுளுஞ்சாற்றுமேன்மைநற்
றலங்களேயுத்தமதருமவற்றுளு
மலங்கனாவாரணவாசிகாளத்தி
மலங்கலில்லாதசிசயிலமாத்தலம். (அசு)

திருவிருத்தாசலந்திகழ்சிதம்பரம்
வெருவறவருளும்வன்மீகமாகர்
கருமலங்கணமறைக்காடுமுற்பல
பொருவறுதலநலம்பொலியுமுத்தமம். (கூ0)

இயம்பியவிவற்றுளுமிலங்குகாசியிவ
வுயங்கலில்சிதம்பரமுத்தமோத்தமம்
பயங்கொளிவ்விரண்டும்பத்திமையினின்றுயர்
வயங்கினர்தவத்தரேமருவத்தக்கன. (கூக)

பண்ணியம்வளருமிப்பொற்றலங்களி
னண்ணியன்பொடுமெமையருத்பூசிப்பா
ரெண்ணிடேமாகங்களெனிவியெய்துவார்
தண்ணியமுத்தியுஞ்சார்ந்துவாழ்வரால். (கூஉ)

தேவர்காணுமக்குபதேசஞ்செய்தவிம்
மூவருமுண்மையையமோக்கவாஞ்சையர்
மேவரவனுட்டிப்பர்வீடுவெஃகிலாப்
பாவகாரியர்செவிப்படவுந்தாங்கலார். (கூங)

காதலினெம்மடிக்கலந்தபத்தியி
ராதலினுமக்கிஃதருளிச்செய்தனம்
வீதலுற்பத்தியைவிடித்துவாழ்மினென்
ரோதல்செய்தெம்பிரானுருமறைந்தனன். (கூச)

களிமகிழ்வானவர்கருத்துவாய்த்தன
ரளிமலர்கொன்றையானடிபணிந்தனர்
வெளிநடம்போற்றினர்விடையும்பெற்றன
ரொளிமிகுதத்தமதுலகமேயினர். (கூஞ)

மாயவனுரைப்படிவானநாட்டவர்
தூயவன்றில்லையைத்தொழுதுசார்ந்துகண்
காயஞானம்பெற்றவடைவுதேருமின்
பாயமாதவமிகுபனவிரென்றனன். (கூசு)

என்றருதன்பதமிரண்டுமைம்பொறி
வென்றமாதவர்முடிவிரவத்தாழ்ந்தனர்
மன்றமாமறைமுடிவயங்குமுண்மையை
யொன்றயாகினதருளாலுணர்ந்தனம். (கூள)

விரிகதிர்மன்றிடைவிமலநாயகன்
புரிதிருநடனமும்போற்றவெண்ணினேங்
கரிசறுமந்நடங்காணுபாயமுந்
தெரிதரவருளுதியென்றுசெப்பினர். (கூஅ)

எட்டாவது

பிரமன்முன்னோர்தில்லையிலேறறுஞானம்பெற்ற
வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் அ-க்குத் திருவிருத்தம் சுடுவி.

ஙூ

ஒன்பதாவது

பரசிவனதுதில்லைநடனங்காண்டற்
குபாயமவருத்தவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தேவர்கண்ஞானம்பெற்றசெய்தியையெடுத்துச்சொற்ரு
மூவர்கள்வழுத்துமூவாமுதலவன்மன்றிலாடு
மோவருநடனங்காண்டற்குபாயமும்வருத்தச்சொல்வா
மேவருபத்திவாய்ந்தவிரதமாதவத்தீர்கேண்மின். (க)

சூன்றவித்பெருமானன்பன்குணமெனுங்குன்றிலேறி
நின்றவன்காமமாதிகிழ்தருகுற்றமூன்றும்
வென்றவன்பொறிகளேவல்விருப்பொடுசெய்யவாண்டோன்
றன்றவக்களவிலாதான்சவுனகமுனிவனென்பான். (உ)

தொல்லோன்மறைகளேத்தச்சுரர்முதல்யாரும்போற்றத்
தில்லையம்பலத்துளெம்மான்செய்தருளானந்தக்கூத்
தொல்லையான்கண்டுபோற்றற்குபாயமென்னென்றுதேர்ந்தான்
வில்லேமென்மேலும்வீசும்வெள்ளியங்கிரியைச்சார்ந்தான். (ஙு)

நெற்றியிற்பொலியுங்கண்ணர்நீறணிபவர்நாற்றிசை
ரற்றிகழ்மிடற்றுவள்ளலடியவரனேகர்சூழ
வெற்றிவேத்திரங்கையேந்திவீற்றிருந்தருளுமன்பு
பற்றியவுளத்துநந்திபாததாமரைபணிந்தான். (ச)

நந்தியங்குரவனேக்கிருகைமுகமலர்ச்சிகாட்டி
யந்திலோரிருக்கைநல்கியையம்பொறியவித்தநீயோய்
தந்தியீருரியாற்கன்பசவுனகமுனிவாவிங்கு
வந்தகாரியமென்னென்றுன்மாதவத்தலேவன்சொல்வான். (ஞ)

திருவளர்செந்நிநாட்டுத்தில்லைச்சிற்றம்பலத்து
மருவளர்கடிக்கைவேணிவள்ளலாரியற்றுமின்பப்
பெருவளநடனங்காண்பெட்டனனதற்குபாய
மருவளக்குரவநின்பாலறிதரவடைந்தேனென்றான். (சு)

நன்றுநீசிந்தித்தாயந்நடனங்காண்பதற்குபாய
மொன்றுமாறுரைப்பன்கேட்டியுத்தமமுனிவாவென்று
சூன்றவில்வாங்குஞ்செங்கைக்குரவன்பாற்சிவாகமங்கண்
மன்றமூற்றுணர்ந்தநந்திவள்ளல்வாய்விள்ளுமாலோ. (எ)

கொங்காந்தண்மலர்ப்பூங்கூந்தற்கோற்றொடித்திருமின்னுர்க
டங்காதராயமாயர்தாந்தொழவருதல்காணுஉ
வீங்காந்தண்ணிதிற்பெய்மேகமீண்டினபலவென்றெண்ணிச்
செங்காந்தடுப்பீன்காட்சிதிகழ்மிக்கபிலாயத்தில். (அ)

காலையுமாலைப்போதுங்கண்ணுதற்பரமயோகி
வேலையுமருட்டிமைக்கண்விமலைவெற்பரசுயிர்த்த
பாலைநேர்மொழியாண்மட்டும்பார்க்கமாநடனஞ்செய்வ
னூலையோர்முனிவரமற்றோர்நோக்குதலருமைத்தாமால். (கூ)

மறையவர்மாடத்தும்பர்வயங்குபொற்றசும்பின்சோதி
நிறைவுறவெழுந்துவிண்போய்நிலையங்குள்ளார்யாரு
முறைதவிர்த்திமைக்கச்செய்யுமுழுவளத்தில்லைமூதூ
ரறையுநாதாந்தமேயொத்தலங்குசிற்றம்பலத்து. (கo)

எண்ணில்பல்லண்டமுற்றுமீன்றசிற்றுதரத்தாயும்
புண்ணியவெருகூர்ங்கோட்டுப்புலவனுமுருகவேளுங்
கண்ணியமறைமாஞாளிக்காரியும்யானுங்காண
நண்ணியபேரானந்தநடனமெப்போதுஞ்செய்வான். (கக)

விண்ணவர்பிரான்செயந்தவிமலவானந்தக்கூத்தை
யெண்ணவனருள்பெற்றோர்கள்யாவருங்காணலாகுங்
கண்ணருணிரம்பப்பெற்றகாரணமதனலாலு
மண்ணவர்முதலோர்போற்றீர்மாதவர்கண்டுவப்பார். (கஉ)

ஆதலின்முனிவராயவ்வழகியதில்லைமூதூர்
காதலினடைந்துகாதன்கருணைசித்திக்கவார்வின்
மாதமாதினரசன்னலின்மார்த்தாண்டனுதயமுன்ன
ரேதமெண்ணினர்க்கும்போக்குமிருஞ்சிவகங்கைமூழ்கி. (கங)

மன்னியதீறுபூவியங்குகண்மணியும்பூண்டு
தன்னிகர்மூலட்டானன்சந்நியடைந்துதாழ்ந்து
துன்னியவன்பிலேறுஞ்சூழ்ந்துமுன்னிருந்துகொண்டு
மின்னியவைந்தெழுத்தைவிதியுளியபுதமெண்ணி. (கச)

அன்றுபவாசமேசெய்தடியருச்சனையுஞ்செய்தி
யொன்றுமில்வாறேயோராண்டுவப்புறநோற்பையாகின்
மன்றுணின்றூடல்செய்யும்வள்ளலார்கருணைகூர்வ
ரென்றுமாராதவின்பவெழினடங்காணலாகும். (கரு)

இவ்வாறுபல்லோர்முன்னமிமையவருள்ளுமாற்றிச்
செவ்வாய்வெண்ணகையோர்பாகன்றிருவருட்கிலக்காயாவு
மொவ்வாதநடனங்கண்ணுற்றுற்றனரிட்டமித்தி
தெவ்வானபொறிகளோந்துஞ்செற்றமாமுனிவரேறே. (ககூ)

சிற்பரவியோமமாகுஞ்சிற்சபைநடனங்காண்டற்
கற்புதவுபாயமீதென்றருளினனகிலகால
கற்பனைகடந்தகாதன்கயிலைவீற்றிருந்தாயே
னற்பதிமூள்ளத்துள்ளுமமர்ந்தருணந்தியண்ணல். (கஎ)

மன்னலம்பெற்றேனென்றுமாமுனிவரனெழுந்து
பன்னலந்திபாதம்பணிந்தனன்விடையும்பெற்றுன்
கன்னலங்காடுகாண்போர்கழுகங்காடென்னவோங்கு
கன்னலப்பணைசூழ்தில்லைகரஞ்சென்றடைந்தான்யாதோ. (கஅ)

கலாநிதிதரித்தவேணிக்கண்ணுதல்குடிகொள்சிந்தைச்
சிலாதரமுனிவன்மைந்தன்செப்பியவாறுராண்டு
நிலாவுறமுனிவனேற்றுனிறையருட்கிலக்கமாகி
யிலாபமாடனங்கண்ணுற்றின்பத்துண்மூழ்கினானே. (கஆ)

தம்பிரானுடல்கண்டசவுனகமுனிவனென்பான்
பம்பிநீர்விழிகள்வாரப்பதைத்துளமுருகவந்த
வம்பிகாபதிக்குநேர்நின்றடிணுவுவகைபொங்க
வெம்பிரானுங்கிங்காலேயாவர்தாமாடாதாரே. (உ0)

அறைதருகருணைபொங்கவம்பலத்தாடுமையன்
றறைபுகழ்த்தவத்துமிக்கசவுனகமுனியைநோக்கி
மறைகண்முன்னுமிருக்குமறையிற்சாகல்லியத்திற்
கிறைமைகொணிருவாகன்ஞயிருநீயென்றருளினானே. (உக)

அத்தகுமுனிவனவ்வாறுக்கிரந்தங்கள்செய்தா
னுத்தமருணத்தினன்றற்குண்மைமாணக்கனேனன்
வித்தகவுணர்ச்சியாசுவிலாயினமுனிவனென்பான்
சித்தமாசறுதன்ஞசான்செய்தருளனுஞையாலே. (உஉ)

சுடர்முதன்மறையினுக்குச்சூத்திரமுதலசெய்தா
னிடர்கெடவாங்குற்றின்னுமெண்ணிலார்நடனம்போற்றிப்
படர்புகழ்ஞானமேமுற்பலவுநன்குற்றுவாழ்ந்தா
ரடர்மலந்துமித்துத்தூயராகியமாதவத்தீர். (உங)

ஆழியங்கரத்தினுன்கூருகியவியாதமேலோன்
வாழிமுனைமக்குச்சொற்றவண்ணமந்தணங்கள்யாவும்
பாழிகொணுமக்குச்சொற்றேம்பராபரனடனங்கண்ணுற்
றூழியுமழியாவின்பவுதகியிற்படிமினென்றான். (உச)

எனவுரைத்திட்டசூதனினையடிமுனிவர்போற்றிக்
கனமறைமத்தகத்துக்கலந்தபல்பொருள்கள்யாவு
மனமுறவிரித்துச்சொற்றையமக்கறன்சூதேர்ந்தே
மனகங்கியாஞ்செய்கைமாறுவதொன்றுளதோவென்றார். (உஇ)

முனிவரர்விஞயயாவுமுனிவறமொழிக்தசூதன்
கனிவுறுசுரவுனகாமருவியாதன்றனனை
யினிதுறுமுளத்துச்சற்றேயெண்ணினுனெண்ணலோடும்
புனிதமாணக்கரோடும்போந்தனனவ்வியாதன். (உசு)

பொலியும்வெண்ணீறுமேனிபோர்ப்பக்கண்மணிகள்பூண்டு
வலிகொளாந்தெழுத்துந்தூயமனத்துறப்பதித்துப்போந்த
வொலிபுகழ்வியாதவாசானுபயபாதங்கள்போற்றி
மெலிதலிலன்பிற்பூசைவிதியுளிமுடித்தான்சூதன். (உஎ)

வாதராயணனுமன்னன்மாணக்கர்குழாமுமேன்மைச்
சூதமாமுனியுமற்றைத்தூயமாமுனிவர்யாரும்
போதன்மான்முதலோர்போற்றப்புராதனனடனமாடுஞ்
சீதமென்புனல்சூழ்திலலைத்திருகரடைந்தார்மன்னே. (உஅ)

மறைமுனிவியாதன்முன்னுமற்றுளமுனிவர்யாரு
மறைதருதுரோணத்திங்களாதிரைகாவிலன்பி
னிறைசிவகங்கைமூழ்கிநீறுமெய்விதியிற்பூசிப்
பிறைமுடிமூலட்டானப்பேரருட்பெருமான்றன்னை. (உகூ)

சடக்கரத்தாற்பூசித்துத்தகவுபவாசஞ்செய்து
விடக்கருமலந்துமிக்குஞ்மிமலவப்பரனைச்சூழ்ந்து
தடக்கரங்குவித்துத்தாழ்ந்துதலருங்கருணைபெற்றே
யடக்கருமகிழ்ச்சியாக்குமானந்தடனங்கண்டார். (கூ0)

ஆயகாட்டிருவிழாகாளாதலினன்பர்வேண்ட
மாயனேமுதல்வாஞர்க்கண்மலர்மழைபொழிந்துவாழ்த்தத்
தேயமன்னவர்மூன்யாருஞ்செங்கரங்குவித்துதிற்பப்
பாயசீர்க்கணங்கொண்டாட்டப்பரமதத்தருங்கைகூப்ப. (கூக)

திருவளர்மன்றிலாடுந்தேவன்பொற்கலையுடுத்திக்
குருவளர்மணிக்கிரீடங்குண்டலமொளிர்கேயூரம்
பெருவிலைப்பதக்கமாழிபிறங்குகங்கணமுத்தாரம்
பொருவினூபுரமுன்னனபொற்பணிபலவும்பூண்டு. (கூஉ)

சூடமுழாமுருடுமொந்தைகொக்கரைதடாரிபேரி
படகமேதகுணிதக்கைபரவுசல்லறியேதாளந்
தடமுறுசங்கம்வீணைதகுகுழல்யாழேயாதி
யிடமுறுபரவையேழோடெழிலிகாணுறமுழங்க. (கூங)

உமையொருபாகன்வந்தானெப்பிலாமுதல்வன்வந்தா
னமையுமரல்விடையான்வந்தானணிநடராசன்வந்தான்
கமையுடையன்பருள்ளங்கலந்துவீற்றிருப்பான்வந்தா
னிமையவர்தலைவன்வந்தானென்றுசின்னங்களார்ப்ப. (கூச)

பவளக்காற்குடைசுருட்டிபருமணிக்குளிர்பூம்பந்தர்
தவளச்சாமரைபூம்பட்டிற்சமைத்தபொற்றவசக்காடு
திவளக்காலொளியினெங்குஞ்செறிதரத்தீபம்விம்மக்
கவளக்கால்வரைசூழாமுங்கலினவாம்பரியுமொய்ப்ப. (கூடு)

தும்பிமாமுகத்தத்தேவுஞ்சூருயிர்குடித்தகோவும்
பம்பிவானவர்கண்மொய்த்துப்பணிசெயமுன்புசெல்ல
கும்பியசீர்த்திச்சண்டனயந்துபின்றொடர்ந்துசெல்ல
வம்பிகையோடமையணிமணிவீதிசார்ந்தான். (கூசு)

வானவரியக்கர்சித்தர்வயங்குகிம்புருடர்நாகர்
தானவர்கிருதரேகாந்தருவர்விஞ்சையர்வான்பூத
ரானவர்முனிவர்யோகரரம்பையர்பலருமொய்த்தார்
மானவர்கணமுமொய்த்தமயங்கினமறுகின்மாதோ. (கூஎ)

பல்வகைத்தீவினைப்பயன்மிகப்படைத்தநித்த
நல்வளமெவர்க்குநல்குகாவலந்தீவையென்பார்
செல்வமார்பன்னுட்டின்னருஞ்சென்னிகாபுரத்தென்பார்
சொல்வலிவாணருத்தாழ்தூயரிங்ஙகரரென்பார். (கூஅ)

காதரமிரித்தோமென்பார்கவலைமூற்றிழித்தோமென்பார்
பாதகந்தொலைத்தோமென்பார்பவமறக்காய்ந்தோமென்பார்
போதமுற்றுயர்ந்தோமென்பார்பொருவிலின்புற்றோமென்பா
ராதரவுற்றுமன்றிலாவென்பவனிகண்டோர். (கூக)

இலங்குமிங்ஙகரிலேயாமெற்றைக்குமிருப்பேமென்பா
ரலங்குமிப்பவனிகாணுர்யாவருங்குருடரென்பார்
நலங்கொண்மால்வேதன்பாங்கர்ணணிமெய்ப்பணிகளாற்றப்
புலங்கொளுமரன்பாலென்னபுண்ணியம்புரிந்தாரென்பார். (சஅ)

தேவர்கண்முதலியோரித்திறம்புகன்றேத்தெடுப்ப
மூவர்கண்முதல்வன்வேதமுடியின்வீற்றிருக்குமண்ண
ரூவருங்கருணைபொங்கத்தனிமணியொளிசெய்வீதி
யாவருங்காணச்சூழ்போந்தம்பொலையத்துட்புக்கான். (சக)

அவிதலில்விளக்கமாகியடியருள்ளொளிருமையன்
செவியணிகுழைகிழிக்குஞ்செழுங்கயற்கருங்கட்செவ்வாய்க்
குவிமுலையுமையாளோடுங்குளிர்சிவகங்கையாடி
யவிரமப்புனல்வாணர்மூனனவர்க்குநல்கினனே. (சஉ)

திருமறுமார்பன்மூன்னத்தேவர்கள்யாருமூழ்கிப்
பெருமறைத்துதிமுழக்கிப்பெறலரும்வரங்கள்பெற்ரு
ரருமையின்விடையும்பெற்ரரவரவருலகம்புக்குக்
கருணையையுள்ளியுள்ளிக்களிப்பின்வாழ்ந்திருந்தாரம்மா. (சங)

வேதங்கண்முற்றும்வல்லவியாதனுமவனேச்சார்ந்த
சூதனேமுதன்மாணாக்கர்தொகுதியுமற்றுளோரு
மாதரம்பயப்பமூழ்கியருஞ்சதவருத்திரத்தின்
மேதகவிளங்காநின்றவிழுத்துதியெடுத்துச்சொல்வார். (சச)

ஆயிரஞ்சிரசுள்ளானுயாயிரமுகமுள்ளானு
யாயிரங்கண்ணுள்ளானுயாயிரஞ்செவியுள்ளானு
யாயிரம்வாயுள்ளானுயாயிரம்புயமுள்ளானு
யாயிரம்பதமுள்ளானுயவிர்சிவக்கொழுந்துபோற்றி. (சடு)

ஆயிரம்படையாய்நாமமாயிரமுடையாய்தேம்பு
மாயிருவானங்காத்தமணிகண்டாவேணியாளா
பாயிருங்காலரூபாபகர்மதுவன்னகேசா
வாயிரங்கெமைப்புரக்கும்வள்ளனின்னடிகள்போற்றி. (சசு)

தருவாதிசொரூபபோற்றிதருபசுபதியேபோற்றி
திருவாளர்புகழும்பல்கேத்திரபதிபோற்றிபோற்றி
மருவாரோடதிவிருக்கவன்செத்துபதியேபோற்றி
யொருவாதயாவருக்குமொருபதிபோற்றிபோற்றி. (சஎ)

அப்பரூத்தூணியுள்ளாயடர்வலிப்பிணகமுள்ளாய்
வெப்பரூக்கதிர்சமழ்ப்பவிளங்குறுகிரீடமுள்ளாய்
கொப்பரூச்செவிக்கயற்கட்கோற்ரூடிபாகமுள்ளாய்
தப்பரூவெமையுங்காக்குஞ்சங்கரசயம்புபோற்றி. (சஅ)

இருப்பவன்படிக்கையாளனியையதருசுழத்தியாளன்
விருப்பமார்சாக்கிரத்தன்மிளிர்சபாரூபனந்தத்
திருப்பயில்சபைக்குராதன்றேசவிர்சருவசாட்சி
யருப்பவிழ்கடிக்கையாளியாயகின்னடிகள்போற்றி. (சகூ)

கின்றிருமுகங்கள்போற்றிநேயமாரடிகள்போற்றி
யொன்றியவரூட்கண்போற்றியுமையொருபாகம்போற்றி
குன்றியல்சிலைக்கைபோற்றிகொலைமழுச்சூலம்போற்றி
வென்றிகொளிடபம்போற்றிமிளிருமன்றாடல்போற்றி. (கூ0)

என்னகின்றேறத்திணருக்கெம்பிரானருளினேடு
மன்னகல்விடையுகல்கிமன்றகம்பொலிந்தகின்றான்
பன்னகாபரணன்திலலைப்பதியின்மாண்பியம்பேதாவார்க
ளென்னராயினும்பேரின்பமெய்துதற்கையமின்றே. (கூக)

ஒன்பதாவது

பரசிவனது தில்லைநடனங்காண்டற் குபாயம்வகுத்த
வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் கூ-க்குத் திருவிருத்தம் கூ0க.

மூன்றாவதுகாண்ட முற்றிற்று.

ஆகக் காண்டம் கூ-க்குத் திருவிருத்தம் கருகூரு.

சிவமயம்.

நான்காவது

எக்கியவைபவகாண்டம்.

பூருவபாகம்.

முதலாவது

சூதனிக்காண்டத்தை யாரம்பிக்கக் கடவுளரைத் துதித்த வத்தியாயம்.

விநாயகர்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

உயர்திணையுமஃறிணையும்படைத்தளித்துத் துடைக்குமுதலொருதானேயென், றயர்வறவெத்தகைபோரு மறித்துய்யத்தெரிக்குமடையாள மேய்ப்பப், பெயர்கொளுயர்திணையுமஃறிணையும் விரவியவுருவிற் பிறங்குவானை, மயர்வடியர்க்கற்றுமொருமருப்பானைவிநாயகனை வணங்குவாமால். (க)

பரசிவம்.

தோற்றமுறுதன்முனைப் பங்கயங்காத்தமறன் மலர்தல் சுடர்தீக்காலன், மாற்றரியசுவறலுறவுஞ் சிறிதும் விகாரமருவாப் பொன்னேய்ப்பச், சாற்றலுறுதன்முனர்முத் தொழிலுலகமருவவுந் தன்னமும்விகார, மேற்றலிலதாயொளிருஞ் சிவச்சுடரை யெற்காளுமிறைஞ்சிவாழ்வாம். (உ)

பரை.

பேரணியும்பல்வகையண்டங்கடொறமுயிர்க்குயிராய்ப் பிறங்காகின்று, நீரணிபுகிழல்போலத் தோன்றலுக்கொருதுணையாய் நிலவுவாளை, வாரணியுமுலைப்பணுவ லாட்டிமுதற்சத்திகளாய் வயங்குவாளைத், தாரணியுறுங்கூந்தற் பூரணியைக் காரணியைச் சரணஞ் சார்வாம். (ஊ)

விநாயகர்.

(கோச்சகக்கலிப்பா.)

நத்தனயன்விண்ணிறைதகவைதீர்ப்பணிந்தேத்துஞ்
சித்திபுத்தியெனுநாமச்செழுங்கொடிகள்படர்ந்தோங்கு
மத்திமுகக்கற்பகத்தினடிமலரைப்பணிந்திடுவாஞ்
சத்தமுதலேந்தடக்குந்தனிவாழ்வுபெறுமாறே. (சு)

முருகர்.

(கட்டளைக்கலித்துறை.)

அணிகேசவன்பதுமாலயன்வாழ்த்தவருடருஞ்சீர்
வணிகேசனென்னமறைநான்குமேத்துமவரதனெழிற்
றணிகேசன்சேவடித்தாமரைதாழ்ந்தர்த்தயங்குநெஞ்சே
தினிகேசபாசமடவார்நமன்றுயர்தீர்ந்திடவே. (கு)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மலர்பொதுளி மதுவுறைத்துமணங்காலு நைமிசமாவனத்து வாழ்வோர், பலர்புகழ்நற்கலேயுணர்ந்து சாரத்தைக்கவர்ந்துகொளும் பண்பின்மிக்கோ, மலர்தலுறுமருமறைநூலத்தியயனம்புரிதலமை ந்தநீரார், கலர்கொளிராகாதிகடிந்தவர் திரசித்தத்தினர் நற்கருணை யாளர். (சூ)

தினரதிதியரிவரையுபசரிப்போர்குருமுதனற்சேவைசெய்வோ [தி ரானபலவுயிரிடத்துத்தயையுடையோரேதிலர்க்காஞ்சுகத்தைநோக் மானமுறக்களித்திடுவோரகங்காரமென்பதனைமறந்துணர் ரீனமிகவாக்குசுகதுக்காதிதுவந்துவங்களென்றுமில்லார். (எ)

சடைமுடியர்வற்கலேயர் புண்ணியநீறக்கமணி தயங்குமெய்யர், நடையுயரைந்தெழுத்து நிலேபெறுமுளத்தர் தூயசிவஞானந்தக், கொடையருணல்லருட்குறியேயென்றுமருச்சிப்பவருட்கோதொன் றில்லார், விடையுயர்த்தவெல்கொடியானடிக்கன்புராடோறுமிகச் செய்வோரே. (அ)

இத்தகையமுனிவரர்கள்பத்தமுழுவதுமகற்றுமெண்ணம்பூண்டு சத்திரமாமகமுடிவில்வாதராயணமுனிவன்றன்பால்யாவுஞ் சித்தமலமறவுணர்ந்தசூதமுனிவருகவெனத்தியானித்தார்கள் வித்தகராயகற்போற்றியுத்தமமாந்தில்லைநகர்மேயசூதன். (கூ)

அம்பலத்தெம்பரனருளாலுணர்ந்தமுகமலர்ந்துமகிழ்ந்தாங்குச் சார்ந்தான், வம்பலர்நைமிசவனத்துமாதவர்களாண்டெழுந்துமகிழ் விற்றுழ்ந்து, நம்பலர்பாத்தியமாதியளித்துயராதனத்திருத்தினன்கு தாமும், பம்பலர்மேயவர்பலரும்சூழ்ந்திருந்தன்னசூழ்ந்திருந்தார் பண்பின்மாதோ. (கo)

இருந்தமுனிவர்பலருஞ்சூதமுனிமுகநோக்கியிணையிலாதாய் மருந்தனவேதார்த்தமூழவதுமுரைக்குமெக்கியவைபவகாண்டத்தைத், திருந்தவுரைத்திடுதியெனமுகமலர்க்குருவனடிகியானஞ்செய்து பொருந்தொருகோட்டிறைசெவ்வேளுமை மதிசூடியை முறையிற் போற்றலுற்றனர். (கக)

(மேற்படிவேறு.)

அடியருக்கிடையூறுறுதகற்றிநன்காண்டருள்பெருமானே
மடிவிலாவருட்சித்திபுத்திகளொடுமன்னிவீற்றிருப்பானைக்
கடிகொள்கொன்றையுந்திங்களுந்தங்கியசடாமருசடையானே
முடிவிலாவெறுழொருமருப்பிறைவனே முறைமையிற்பணிகின்றேன்

கஞ்சநாண்மலரவன்முடிகுழிவிழக்கரங்கொடுபடைத்தானே
வஞ்சமாவிருகூறுபட்டொழியவேல்வயங்குறைகழித்தானைத்
தஞ்சமென்றடைபவருளத்தொளிர்தருசடக்கரப்பெருமானே
மஞ்சளாவியதெய்வதப்பிடிமணவாளனைப்பணிகின்றேன். (கஉ)

எண்ணிலாதபல்லண்டமுற்றீன்றசிற்றெழில்வயிறுடையானைக்
கண்ணிலாதகூற்றுயிர்குடித்தவரிடக்கண்ணில்வீற்றிருப்பானை
யுண்ணிலாவிமாதவர்க்கொளியாய்விளங்குத்தமகுணத்தானைப்
பண்ணிலாவுமாமறைப்பொருளிறைவியைப்பத்தியிற்பணிகின்றேன்

மாயனுதியர்தன்னமுங்காணருமாமறைப்பெருவாழ்வைத்
தூயவேயாகியருள்ளகம்பொலிதருதூண்டுருத்தீபத்தை
நேயமாயினர்க்கெற்றைக்குந்தித்திக்குநிரம்பியசுவைத்தேனைப்
பாயபேரருட்பரசிவக்கொழுந்தினைப்பத்தியிற்பணிகின்றேன். (கஙு)

திங்கள்சூடியசெஞ்சடைப்பகவனைத்திரிபுராந்தகன்றன்னை
யங்கண்மாலுலகத்தினெவ்வுயிருக்குமாருயிராஞனைத்
துங்கமாரும்வைச்சூலவெம்படையனைத்துவசவெள்ளேற்றினைச்
சங்கவார்குழைச்செவியுடைப்பரமனைச்சந்ததம்பணிகின்றேன். (கசு)

என்றுபோற்றினன்முனிவரைநோக்கினன்யாகவைபவகாண்டங்
கன்றுமைம்பொறியவித்தெதாருகிலாயாய்க்கச்சமிலுஞ்ஞேமே
யொன்றுநன்மையினின்றுளீராகலினுமக்கினிதுரைக்கின்றேன்
மன்றமற்றதுமுழுதும்வேதார்த்தமேமதித்துணர்ந்திடுவீரே. (கஎ)

முதலாவது

சூதனிக்காண்டத்தை யாரம்பிக்கக் கடவுளரைத்துதித்த

வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கஎ.

உ

இரண்டாவது

வேதார்த்தத்தையுரைத்தவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

பனிமதிமுடித்தவேணிப்பரனடிக்கன்புபூண்ட
மூனிவிர்காள்வேதார்த்தத்தைமுறைமையினுணர்த்துகேன்யான்
கனிவொடுமுவந்துகேண்மின்கனிவின்றிக்கேட்பினென்றும்
புனிதமெய்ப்பலஞ்சேரா துபொருந்துறும்பாவமன்றே. (க)

பரவுறுமறையருத்தம்பரமென்றுமபரமென்று
மிருவகையாகுமுன்னதியல்சகளத்தின்வேறுய்ப்
பெருவினிட்களமாய்நின்றபூரணசிவமேயாகும்
விரவுபின்னதுதான்றன்மமதன்மமென்றிருவேறுமால். (உ)

தருமமென்பதுடாகாதிசகலபுண்ணியமாமற்ற
தொருவருஞ்சிவத்தைச்சார்தற்குற்றசாதகமேயாகும்
வெருவுபின்னதுதான்கோறலாதியவினைகளின்ன
மருவுறுதகற்றுமாறேமறையெடுத்துரைக்குமன்றே. (ங)

வெம்மையாரதன்மதீங்கவிருத்தியார்த்தருமமந்தச்
செம்மையார்தருமத்தாலேசித்திக்கும்பரவேதார்த்த
நம்மையாருடையாரேனுங்குருல்லொளியாயிருந்து
மும்மையாருலகிற்றூனேதோன்றிடாமுறையென்னென்னில். (ச)

மாயைதன்மறைப்பிற்சீவர்மருவிடுமளவுந்தோற்றூன்
றூயதற்றருமமோங்கத்தோன்றிடுஞ்சிவஞானத்தாற்
பாயவம்மாயைநீங்கும்பகர்ந்தவம்மாயையெங்கு
மாயைதன்னியத்தினிடமுண்டாகியதுமாதோ. (ஞ)

சாற்றுமாயாசிவர்த்திதானதிட்டானமாய
தோற்றுசைதன்னியத்தின்சொரூபமானதுமற்றின்ப
மாற்றுமந்சிவர்த்திதானுமபாவமாமினையமாயை
மாற்றருஞ்சதசத்திற்குப்பின்னமாய்வயங்குமாலோ. (ட)

சார்பரமார்த்தமாய்ச்சத்தாயென்றுந்தயங்கலாலே
யேரதிட்டானசைதன்னியத்திற்குநாசமில்லை
யோர்தருமினைத்தினுக்குமுயரதிட்டானமாகிப்
பேர்பிகுபரசிவன்றன்பிரத்தியக்கத்தினுலே. (ண)

அலமகன்முத்தியுண்டாமப்பிரத்தியக்கஞானங்
கிலமறுங்கிலவிராய்முத்தியவதிகாரியாகி
வலனுயர்பரமவஞ்சன்மறையீற்றுச்சிரவணத்தா
னலனுறப்பெறுவன்மற்றேர்ந்துணுவர்க்கிரமமாக. (த)

நன்னிலவனத்தன் பூமேனுன்முகனுலகஞ்சார்வ
னின்னிலகின்றகல்லோனெழிற்பிதிருலகமெய்து
மன்னியசங்கியாசிமாண்சிவஞானமெய்து
முன்னியசங்கியாசிபேதத்துண்முதலோனை. (கூ)

நயமிகுகூசகன்மெய்ஞ்ஞானவிச்சைக்கூறுகி
யியலுவனேத்தும்வேதவீற்றுக்கேள்வியிறீரும்
வயமுறுபகூதகன்ரூன்மற்றுமக்கேள்வியாலே
முயலுறுசாந்திதாந்திமுதலங்கவிச்சைமேவும். (கo)

அஞ்சன்வேதாந்தக்கேள்வியவாவுவன்பரமவஞ்சன்
விஞ்சுமக்கேள்வியாலேமெய்ஞ்ஞானமடைவனன்னேன்
வஞ்சமில்கருமசங்கியாசியென்றுரைப்பமன்னு
மெஞ்சியமூவருங்காமியகன்மமிகத்தலாலே. (கக)

மன்னுபிட்சுகரென்றியாரும்வழங்கிடப்படுவரம்ம
வன்னுவேதாந்தமாவாக்கியங்களாலுரைக்கப்பட்ட
பன்னபரோட்சமாயபரஞானங்குரவனல்கத்
தன்னுமேலறிந்துசெய்தபாவமுநதொலைந்துபோமால். (கஉ)

குரவன்முன்னிலையிற்பெற்றகோதறுமனையஞான
முரவுறுபந்தம்யாவுமொழித்திடுமுலகமெல்லாம்
பரவியவிருளனேத்தும்பகற்கதிரொழிக்குமாபோல்
வரமலிஞானலாபம்வேண்டினேன்மற்றிதோர்ந்து. (கங)

அவிர்தருபரமவஞ்சமாசிரித்திடுதல்வேண்டுங்
குவிகலக்குரூசகன்பகூதகனஞ்சனென்னப்
புவியின்மற்றேவருகப்பேசுகின்றனவன்முன்னுகப்
பவனருண்மிகும்பிராசாபத்தியவிட்டிசெய்க. (கச)

நீடியபரமவஞ்சநிலைமருவுறுவிருப்ப
ஞடியலாக்கினேயவிட்டிநன்காற்றவேண்டும்
பாடுமிந்நால்வர்சொற்றபடியியற்றியபினன்மை
வீடுறுத்திரையதாதவியிட்டியுஞ்செய்யவேண்டும். (கஞ)

செம்மகம்புரிதராவேதியர்க்கிவ்விட்டிகடாமில்லை
தம்முடையழலினன்மைதருமனுவிரூசயோதி
விம்முநெய்சருவுமோமஞ்செய்துவிஞ்சியதையுண்டே
யம்மபிஞச்சியங்கொண்டவிர்சுவாகாகாரத்தால். (கசு)

பூரணகுதிகன்காற்றிப்பொலியுமத்தழலேப்பின்பு
சீரணவாக்கிராணஞ்செய்துபின்விதிவழாது
சேர்தருபிரேடவுச்சாரணஞ்செய்யவேண்டும்பின்பு
பார்புகழ்சங்கியாசம்பண்ணுதல்விதியாமென்பார். (கஎ)

குரவனற்கொடுக்கப்பட்டகுருகெழுகற்றூயாடை
வரமலிதண்டும்பெற்றுமற்றவன்றூள்வணங்கித்
திரமலிதருவேதார்த்தசிரவணஞ்செய்யவேண்டும்
பரவுகாமியகன்மத்திற்படுபலனிடேதமென்று. (கஅ)

அறிந்துநிட்காமியஞ்செயறிவரனெவனெனுஞ்சீர்
செறிந்தசந்நியாசியொப்பான்றிகழ்ந்தருபரமவஞ்ச
னறந்திகழ்வேதசாரமாம்பிரணவமேயன்றி
மறந்தும்வேறுள்ளதாமோர்மனுச்செபித்திடல்கூடாதால். (ககூ)

அத்தகுபிரணவந்தானனேத்திணும்விசேடமான
வுத்தமமென்பராலவ்வோமெனுமரக்கலத்தாற்
பித்தமார்பாசபந்தப்பெருங்கடல்கடக்கலாகு
மொத்தமற்றதற்குரைக்குமருத்தமுமுரைப்பக்கேண்மின். (உ0)

காரணங்கடந்தவள்ளல்கறைமிடற்றிறைவன்சந்த
வாரணமுடிக்குமெட்டாவொருவனேயருத்தமாவ
ரூரணன்முதலியோரைருவிலுவர்சில்லோரென்னி
லேரணவியதவத்தீரிலக்கணவகையாற்சொல்வர். (உக)

பிரணவப்பொருளோர்முக்கட்பிரானன்றிவேறுண்டென்பார்
முரணவிப்பதற்குக்கொன்றைமுழுமலர்த்தொடையுண்டா
லரணுறுநூல்கள்காட்டியாமுரைக்கவும்வேண்டுங்கொல்
கரணமோர்கெறியேசெல்லக்கண்டருள்கொண்டுளீரே. (உஉ)

திருமலிசந்நியாசிசிவஞானசித்திக்காக
மருவுறுமவிமுத்தத்தின்மயேச்சுரப்பெருமாற்கண்டு
பெருகுறப்போற்றவேண்டும்பேசியவிவ்வாறன்றி
யொருவின்ஞானர்த்தமாய்வேறுமார்க்கம்பிரவேசித்தல். (உங)

கருவிடதுகர்ந்தூமோட்டுக்காய்பசிதணிக்கவெண்ணு
மொருவன்றனுணர்வுபோலுமாதலாலுண்மையாகச்
சுருதிசொலதிபூதத்தஞ்சுயசொரூபத்துங்கண்டு
திருகில்சங்கரனப்போற்றதெளிந்தவர்செய்கையாமால். (உச)

மன்னியபிரமசாரிமனையவன்வனத்தனின்றேனர்
தன்னிகரில்லாதேதங்குஞ்சருத்திரியஞ்செபிக்கி
றுன்னியவதனற்பாவந்தொலையுஞானத்தையுற்று
மின்னிடுமுத்திசேர்வரதற்கிணைவேறுண்டின்றால். (உஞ)

(கோச்சகக்கலிப்பா.)

அச்சதருத்திரரூப்பணவிர்தருபஞ்சாக்கரத்தி
லெச்சமறமாதேவனிருப்பன்சாந்நித்தியமாய்க்
கச்சமில்டேரருட்சமட்டிபூதருடியகடவுண்
மெச்சுசாந்நித்தியத்தால்வியட்டிபூதர்களான. (ஊ0)

வானவர்கள்யாவர்களுமாண்டருவிற்சாகைகள்போ
லானசிறப்பைபந்தெழுத்திலாசிரித்துக்கொண்டிருப்பா
ரீனமிலோர்தருமூலத்திரும்புனல்வாக்குறினெழுந்து
கானமலர்ச்சாகையெலாங்களுன்றுதழைத்திடல்போல. (உஎ)

சங்கரனுக்குவகையுறச்சதருத்திரஞ்செபிக்கிற்
பங்கயன்மான்முதலானபண்ணவர்யாவருமுவப்பார்
பங்கமறுமையேச்சுரசம்பந்தமாகியமாயை
அங்கமிகுசத்துவமும்சொலுங்குணபேதங்களால். (உஅ)

பலசீவரையுமறைத்திப்பந்தமுறுத்திடுமுதலிற்
சொலலாகுஞ்சத்துவத்தாற்சுகஞானம்வயிராக
மிலகாகின்றிடும்வெண்மையிவையாதியுண்டாகும்
விலகாவிராசதத்தான்மிகுகாமமொடுதுக்கம். (உசு)

சிவப்பீவைமுனுண்டாகுஞ்சிறவாதாமதத்தா
னிவப்புறுமாலசியமேகெடுமோகம்பிராந்தியே
யுவப்படையாக்கறுப்பிவைமுனுண்டாகுமிவ்வாறே
தவப்படுமாலுத்தமபதார்த்தஞ்சத்துவகுணத்தில். (உ0)

இராசதத்தின்மத்திமபதார்த்தமெலாந்தாமதத்தின்
விராவுதமபதார்த்தமெலாமேவிவருமாதலினுற்
றராதலத்திக்குணத்திரையசகிதமாயாமயமாய்ப்
புராதனசீவருக்குளதுபோக்கியசமுசாரம். (உக)

தீராதசமுசாரஞ்சிவஞானவுதயத்திற்
பேராதுகின்றிடுமோபேருமறப்பறந்தொழியுஞ்
கற்றவர்சொல்சத்தியமேகைப்பிடித்தத்தலத்துறைந்தான். (கங)

இவ்வாறுமூவருடமிருந்தானப்புலியூரிற்
செவ்வாய்வெண்ணைகபாகன்றிருப்பிரசாதம்பெற்று
ளெவ்வாதபாவமெலாமொழிந்துபலபோகமுந்துய்த்
தெவ்வானர்களும்புகழுமின்பமுத்தியடைந்தனனே. (கச)

பற்றலர்கள்புரநீறுபடநகைத்தபெருமானே
யற்றமறமனத்திருத்தியம்பொறிகளுங்குவியச்
செற்றபெருமாதவத்தீர்சிவப்பிரசாதப்பெருமை
மூற்றவெடுத்தூரைக்கவலர்மூவுலகத்தினுமிலரே. (கடு)

இருபத்துநான்காவது

சிவப்பிரசாதத்தாற் றுர்க்கடன்முத்திபுகுந்த கதைபுரைத்த
வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் உசு-க்குத் திருவிருத்தம் நுஉ.

உ

இருபத்தைந்தாவது

சிவப்பிரசாதத்தாற் சத்தியசந்தன் முத்திசார்ந்த கதையுரைத்த வத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

நித்தியஞானனந்தநிருமலன்பாதப்போதே
பத்தியிலுள்ளிநிற்பீர்பகர்சிவப்பிரசாதத்தான்
முத்திதுர்க்கடனடைந்தமுறைமையையுரைத்தாமின்னுஞ்
சத்தியசந்தன்முத்திசார்ந்ததுமெடுத்துச்சொல்வாம். (க)

மிக்கநற்குணங்களுள்ளான்வேதியர்குலத்துதித்தான்
சக்கரபாணியன்பன்சத்தியசந்தனென்பான்
மெருக்கநன்மிருதிகன்மஞ்சுருதிகண்மங்கணுளும்
பொக்கமிலாதியற்றிப்புவியிடைப்பொலிந்தான்மன்னே. (உ)

மாயவன்பூசையாற்றன்மற்றவன்மனுச்செபித்தல்
பாயசீரவனன்மூர்த்திப்பதிட்டைசெய்திடலனேக
மாயவத்திருமாலவைகுமாலயத்தரிசித்தேத்த
மூயமற்றவனன்பர்க்குத்தொகுபொருளாதிநல்கல். (ஙு)

நித்தியமிவைதனக்குநெறியெனக்கொண்டுளான்முன்
முத்தியனகைமாமார்பன்முன்னுறுகாட்சிதந்தான்
சத்தியசந்தன்கண்டுதண்டம்போலடியில்வீழ்ந்து
பத்தியிற்பூசையாற்றிப்பஃறுதிசெய்யலுற்றான். (சு)

உலகார்காரணமாய்ஞானயோகிகட்கெற்றைஞான்று
மிலகான்மசொரூபமாய்மற்றெவ்வகையுயிர்க்குமின்பாய்
விலகாவஞ்சகராலென்றுமேவுறப்படாததேயா
யலகாராப்பொருளாயெங்குமமர்ந்தொளிர்பொருளேபோற்றி. (ஙூ)

தவம்புரிவார்க்குமுத்திதப்பாமலளிப்பாய்போற்றி
யவம்புரியசுரர்கூட்டமனைத்தையுமொறுப்பாய்போற்றி
நவம்புரிமகசொரூபஞானசொரூபபோற்றி
பவம்புரியெனையுமாளும்பண்ணவபோற்றிபோற்றி. (சு)

மோகநம்பினர்க்குநீக்கிமுழுஞானமளிப்பாய்போற்றி
போகமெவ்வுயிர்க்குநல்கிப்புரந்தருள்வள்ளல்போற்றி
யோகமுற்றவர்தமுள்ளத்தெளிர்தருபொருளேபோற்றி
நாகநாட்டமரரேத்துநலம்புனைபாதபோற்றி. (எ)

செருந்தொழில்வல்லஞுகித்திசையெலாந்திரிந்ததீய
முருந்தனதாவிமாய்த்தமுருந்தனேபோற்றிபோற்றி
நருந்தரளப்பூண்கொங்கைநங்கைவாழ்மார்பின்பாற்
புருந்தவெனையும்புரக்கும்புண்ணியபோற்றிபோற்றி. (அ)

மகப்பலங்கொடுப்பாய்போற்றிவானவர்க்கரியாய்போற்றி
நகப்பலமறைகொண்டாடுநாரணபோற்றிபோற்றி
யிகப்பலங்கொள்ளாராகியிந்தியமவித்தோருக்குச்
சுகப்பலங்கொடுப்பாய்போற்றிசுடருமைம்படையாய்போற்றி. (கூ)

பொன்னுடைபுனைந்தாய்போற்றிபுகழ்வாசுதேவபோற்றி
மின்னுருமுடிகேயூரமிளிர்குழையணிந்தாய்போற்றி
பன்னுமமுடையாய்போற்றிபரவுவார்க்கமுதபோற்றி
தென்னர்கல்யாணபோற்றிதிருநெடுமாலேபோற்றி. (கo)

என்னநின்றேத்திஞானையெழிற்றிருநெடுமாஞைக்கி
ரின்னதுகருத்தியாதுநிகழ்த்துதிதருதுமென்ரு
னன்னவன்மகிழ்ச்சிவீம்மவானந்தமுத்திவேண்டு
மன்னநன்களித்தியென்ஞவணங்கிவிண்ணப்பஞ்செய்தான். (கக)

விண்ணப்பஞ்செய்தகாலமெய்மைவாக்குடையோனையு
மெண்ணில்பல்லுயிர்க்குநாளுமிதஞ்செயும்வள்ளலாயுங்
கண்ணியவின்பஞானக்கடலாயுமமுக்காரில்லாப்
புண்ணியமூர்த்தியாயும்பொலிபுருடோத்தமன்ரூன். (கஉ)

சத்தியசந்தனென்னுந்தண்ணியன்முகத்தைநோக்கிப்
புத்தியிற்கோடியென்றுபுகன்றனன்பொருவிலாத
பத்தியினுண்மைநோக்கிப்பந்தந்தீர்த்தெவ்வுயிர்க்கு
முத்தியையளிக்கவல்லோன்முழுமுதற்சிவனேயென்றும். (கங)

பிரமன்முன்ஞனமற்றைத்தேவரும்பிறங்கியானும்
வரமனுமுத்திநல்கவல்லரல்லேநன்கோர்தி
பரவுமச்சிவனெனக்கும்பண்ணவன்சருவகத்த
னுரவனெப்புயர்வுமில்லாஞளிர்சருவக்கியன்காண். (கச)

தூலாதிசரீரமூன்றுமிலான்றுவந்தவங்களில்லான்
மேலாயபரையுமந்தவிமலனேடபேதமென்று
காலாயமறைகள்கூறுநகுஞானம்வலிமைமற்றைத்
தோலாதகிரியையின்னசுபாவமாயவனுக்குள்ள. (கரி)

எனக்குநான்முகன்மூற்றேவர்யாவர்க்குமினையமூன்று
மனக்கினிதாகுமன்னருளிஞன்மருவாகிற்கு
நினக்குறுமதனுல்யாங்கள்கிரமமாகெடியமுத்தி
தனக்குறுருயிர்களுக்குச்சாதகமாயிருப்பேம். (கசு)

சங்கரனருளால்யானுஞ்சதுமுகன்முதல்வாளேருந்
துங்கவான்போகமீவேஞ்சுதந்திரமில்லேங்கண்டாய்
பொங்கரவணிந்தமுக்கட்புராணனேபல்லுயிர்க்கு
மங்கணிபோகமோக்கமருள்சுதந்திரனெஞ்ஞான்றும். (கள)

மூன்னுகாமத்தாலுள்ளமுகிழ்பொருளாற்சிறந்து
மன்னுமாதேவன்பாதமறந்தெனைமட்டும்பூசை
யுன்னுபாற்றிடுவோர்சன்மமொருகோடியாயினுலும்
பன்னுநற்கதியுரூர்கள்பகர்ந்தவீதுண்மையுண்மை. (கஅ)

ஆதலினன்னேமுன்னமமர்யாவரையுநீத்துக்
காதலின்மாதேவன்ரூள்கருத்துறப்பூசையாற்றி
வீதலில்லாதவன்ஞன்மிகுபிரசாதமுற்றுப்
போதலில்கதிசேரென்றுபுகன்றுமாயவன்மறைந்தான். (ககூ)

மாயவனுரைத்தவண்ணமாதேவனடிகட்கன்பின்
மேயபூசனைகன்காற்றிமெய்ப்பிரசாதம்பெற்றுப்
பாயநீர்முத்தியுற்றுன்பண்ணவர்பலரும்போற்றச்
சாயலின்மிக்கசீர்த்திச்சத்தியசந்தன்மாதோ. (உ0)

(மேற்படிவேறு.)

ஆதலினன்மாமுனிவீர்சிவப்பிரசாதத்தாலேயடையவேண்டுஞ்
சாதலறுமுத்தியைமற்றுன்றிணைவரிதான்மந்தணமேயென்று
வேதபரம்பரையாலுமிருடியர்தம்பரம்பரையினுலுமிக்க
போதமுறநிச்சயிக்கப்பட்டவிதைத்துட்டருக்குப்புகலொணுதே. ()

இருபத்தைந்தாவது

சிவப்பிரசாதத்தாற் சத்தியசந்தன் முத்திசார்ந்த

கதையுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் உரூ—க்குத் திருவிருத்தம் நுசுடு.

உ

இருபத்தாறவது

சிவப்பிரதிஷ்டாமுறைத்தவத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

சுத்தியைந்தொடுமரற்செழுதருச்சிப்பீர்
சத்தியசந்தனென்றுரைக்குந்தண்மையோன்
முத்தியையடைந்தமைமொழிந்தனஞ்சிவ
பத்தியின்விசாரமும்பன்னுவாமரோ. (க)

போகமுள்ளனவெலாம்புணர்க்கவல்லது
மோகமுள்ளனவெலாமுருக்கத்தக்கது
யோகமார்முத்தியையுதவுநீரது
பாகமார்தருசிவபத்தியொன்றரோ. (உ)

அனேயதுபலவகையாயிருக்குமா
றனேகர்சைவசாயுச்சியத்தினும்
புனேவுறுசிரத்தையேபொலிந்தசாரமா
நினேசிவபத்தியென்றுரைக்குநீண்மறை. (ங)

முன்னுசாலோகமுன்மூன்றினுந்தக
மன்னுநற்சிரத்தையேமறைமுனுகமம்
பன்னுமுத்தமசிவபத்தியென்பரா
லன்னுழையாமனத்தறிஞர்யாவரும். (ச)

தேர்சிரவணமுதற்செப்புமூன்றுட
ஞர்சிவஞானத்திலவிர்வேதாந்தத்திற்
பூரணவிபூதிமுப்புண்டரத்தினி
லார்தரவெழுசிரத்தையுமப்பத்தியே. (ஞ)

அக்கமாமணிவடமன்பிற்பூணுதன்
மிக்கபஞ்சாக்கரம்விரும்பியெண்ணுதல்
பொக்கமில்சிவலிங்கபூசையாற்றுத
றக்கவப்பூசையைத்தரிசித்தேத்திடல். (சு)

புல்லனமசிவபிரான்பூசைக்காகிய
நல்லனமையுபகரணங்கணல்குதல்
வல்லனமபூசையின்மகிழ்ச்சிபூத்திடல்
பல்லனமையிவையுமப்பத்தியாகுமே. (எ)

சிவன்விழாத்தரிசிக்குமிச்சைசேவையப்
பவன்விழாத்தரிசிக்கப்படர்ந்தகல்லவர்க்
குவமையிலன்னபானாதியோகையி
னவமுறநல்கலுமயக்கும்பத்தியே. (அ)

நலஞ்செய்மாதேவன்முன்னுமம்பல்லவும்
புலஞ்செயுஞ்சிரவணவிச்சைபூணுதல்
வலஞ்செய்நந்தனவனமல்கவாக்கிடல்
பலஞ்செயும்பரசிவபத்தியாகுமே. (கூ)

பரசிவனுலயப்பணியின்மேவியே
வரமலர்த்தடாகமாதிகள்வகுத்திட
னுரவுறுதிலங்கவுயுறப்புதுக்குதல்
விரவுகோபுரமதில்விளங்குமண்டபம். (கo)

இட்டிகையாதிகளாலியற்றுதன்
மட்டிலாவிளைநிலமாணவாக்குதல்
புட்டிகழ்சோலைகள்பொலியவைத்திட
னுட்டிகழிவைகளுமுரைத்தபத்தியே. (கக)

பவனடிக்கன்பரைப்பண்பிற்போற்றலு
மவமறுநித்தியமாதிகன்மங்கள்
சிவபரன்பணியெனத்திருந்தவெண்ணுபு
தவறறவாற்றலுஞ்சாற்றுபத்தியே. (கஉ)

வேதமுன்னுஞ்சிவவித்தையாவையு
மோதுதலோதுவித்திடுதலுண்மையின்
மேதகவரைந்திடல்விருப்பிற்போற்றிடல்
சாதலிலன்பர்க்குத்தானகல்கிடல். (கங)

தகுசிவஞானியர்தமக்கன்பார்தர
நகுதல்செயன்னபானுதிநல்கிடல்
புகுபுறைதரமடம்புதிதளித்திடன்
மிகுபணிசெயலிவைகளுமெய்ப்பத்தியே. (கச)

சிவமனுச்செபிப்பவர்திருந்துமெய்ப்பணி
சிவனமர்தலன்தொறுஞ்சென்றுபோற்றிடல்
சிவனகர்யாத்திரைசெய்பவர்க்கிடர்
சிவணுறவியற்றுதீயோரைத்தண்டித்தல். (கரு)

சிவவ்பராதங்கள்செய்தசீயரைச்
சிவமுணர்ஞானியைச்சிவநன்ஞானத்தைச்
சிவமயவிபூதியைச்சிறிதிகழ்த்த
சிவமுறுக்கொடியரைச்சிதறக்கொல்லுதல். (கசு)

நெடியமாயவன்முதனிகழ்த்துந்தேவரைப்
படியிடைநிந்தைகள்பகர்ந்துளார்தமை
மடிவிறேவாலயப்பொருள்கள்வெளவிய
கொடியரையுயிர்நிலைகுலையவாதித்தல். (கஎ)

ஆதலர்ப்புரந்திடலச்சுற்றோர்களுக்
கோதறுமபயமீந்துவப்பக்காத்திட
நீதருவிவைகளுந்திகழுநான்மறை
கோதறுச்சிவபத்தியென்றுகூறுமால். (கஅ)

இனியவைகூறலுமெவ்வுயிர்க்கணும்
புனிதமார்தருதையபொருந்தவைத்தலுங்
கனியிதமேசெயக்கருதும்வாஞ்சையு
நனிமகிழ்ந்துயிரெலாநயப்பநிற்றலும். (ககூ)

பொற்றநல்லுலகிடைப்பொருந்துவோருடைக்
குற்றமில்லாதுயர்குணங்களேநனி
சொற்றலுங்குருவுபதேசத்தூமொழி
யற்றமொன்றுரைதுசெயார்வத்தன்மையும். (உ0)

குருபரன்பணிவிடைகுறைவறச்செய
மருவுமெய்யன்புமுற்றிவையெலாநலம்
பெருகுமெய்ச்சிவபத்தியென்றுபேசுவா
ரருமறைமுழுதுணரந்தவுளரே. (உக)

பத்தியையடைதற்கும்பந்தம்போக்கிற்கு
முத்தியையெய்தற்குமுழங்குறுஞ்சிவ
பத்தியேகாரணமென்னிற்பார்மிசைச்
சித்திசேர்தனலஞ்செப்பவல்லரார். (உஉ)

பத்தியாருயிருளப்பங்கயத்திடைத்
தித்தியாநின்றசொற்செய்யவாய்ப்பரா
சத்தியோடிறையவன்றங்குவானென்று
நதியானம்புரிநன்மையந்தணீர். (உங)

இருபத்தாறுவது

சிவபத்திவிசாரமுரைத்த வத்தியாய மூற்றிற்று.

ஆ அத்தியாயம் உசு-க்குத் திருவிருத்தம் ருசுஅ

உ

இருபத்தேழாவது

பரசிவசொரூப விசாரமுரைத்த வத்தியாயம்.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

பரசிவர்குடங்கைப் பண்ணவன்பதமுட் பதித்தமாதவத்திர்
வானுறையும்,பரசிவன்மைதீர்தரப்பொலிகட்சீபதிவிதி முதலியோர்
ஞானரும், பரசிவந்தனைசெய் பரசிவபத்திப்பான்மையை யெடுத்துரை
செய்தாம், பரசிவசொரூபவிசாரமு மினிதுபகருதுநன்குகேட்டுணர்
மின். (க)

ஆருறுமெல்லாவுலகுமெச்சிவத்தினவிர்சத்தாசம்பந்தத்தாலே
தேருறுசத்துப்போன்றுதோன்றிடுமெச்சிற்பிரகாசத்தினுலே
நாருறுவியாபாரப்படுமெவ்வானந்தசம்பந்தத்தினுலே
சீருறுசிவாசபாத்திரமாமச்சிவச்சுடர்சொரூபம்யாமுரைத்தல். (உ)

திரிசியபவுதிகப்பிரபஞ்சத்தினும்வெளியாதிபூதங்க
டெரிதரினதிகமவற்றினுமதிகஞ்சேதனமாகியவுயிர்கள்
விரிவுறுமவையுமுரைத்திடசமட்டிலியட்டியென்றிருவகைப்படுமோ
லரியயனுணரப்படாமறைமுதல்வனடியிணைக்கன்புபூண்டுயர்ந்தீர்.

சாற்றரும்வியட்டியாகியவுயிர்கடத்தமதுடையசங்கற்ப
மாற்றரும்பேதங்களுக்கனுரூபமாய்ப்பலபேதம்வாய்ந்தனவாய்த்
தேற்றமார்தேவர்நரர்திரியக்குசெந்தகண்முதலியவான
தோற்றமார்சரீரங்களீயடைந்திருக்கின்றனதுலங்குறுதவப்பெரியீர்

இயம்பியவியட்டியினுஞ்சமட்டியானவிரணியகருப்பன்மிக்கதிகன்
வயங்கொண்மற்றவனின்மலர்மகன்வியட்டிமருவுவதாரங்களதிக
முயங்கலிலவைசங்கற்பபேதத்தாலொன்றற்கொன்றதிகமாயிருக்கு
நயங்கொளுமிவைகடம்மினுஞ்சமட்டிநான்முகனதிகனேயாவன். ()

அம்மலர்மேயமுனியினுமாழியவிர்தருகுடங்கைமாலதிகம்,வெ
ம்மூலத்திருவாழ்நிறத்தவன்வியட்டிமேவுவதாரங்கடமினுஞ், செம்
மைசேர்சமட்டியதிகமாமந்தச்செய்யதாமரைக்கண்மாயனினு, மெம்
மையாள்கருணையுருத்திரனதிகனெனமறையெலாமெடுத்தியம்பும்.

உருத்திரனுடையவியட்டிரூபங்களினுமுறுமுத்தமஞ்சமட்டி
திருத்தகுமயன்மூன்மூவரும்பரதத்துவத்திகழ்வியட்டிகளாவர்
கருத்தமரிம்மூத்தேவர்கடமினுங்காரணத்துவவ்பாதியொடு
பொருத்தமார்ந்திலகுமீச்சுரனதிகனென்மனுர்புலமைமிக்கோரே.

சித்தமார்ந்திலங்குமீச்சுரன்றனினுந்திகழ்ந்நிருபாதிகமாகிச்
சத்தியஞானனந்தசொரூபமாய்ப்பரதத்துவந்தானு
யுத்தமமாகியவிர்பரசிவமேயதிகனன்குணர்மினிவ்வாறே
யொத்துயர்சருவாதிகத்துவஞ்சுருதிமிருதிகளுரைத்திடுநாளும். (அ)

சாருவபூமனுகியவரசன்றன்னுடையானந்தத்தினுனன்
காருறுசீர்த்திமணிதகந்திருவரானந்தநூறுபங்கதிகஞ்
சேருமற்றதிற்கந்திருவர்முன்முளரித்தெய்வதமளவுமானந்த
மோருறுநூனுதிகப்படிநூறுநூறுபங்கதிகமாமுணர்வீர். (கூ)

மலர்மகனூரூனந்தமாற்கோரானந்தமம்மாலுடையொருநூ
றிலகுமானந்தமுருத்திரற்கோரானந்தமவ்வெழிலுருத்திரனூ
றலருமானந்தங்காரணசிவற்கோரானந்தஞ்சிற்பரசிவற்கு
நலமலியகண்டானந்தமிவ்வாறெனூனத்தினூனுதிகமுமே. (கo)

பெருமரம் பராரைகவடுகோடுகண்முற்பேதங்க ளுற்றிருப்பது போன், மருவுருத்திரன்மூற் பேதங்களுற்று மன்னுவன் பரசிவப் பெருமான், றருவுடைச்சினைகளொன்றற் கொன்றதிகநூணங்கள் சமைந்தனபோல, வொருவனதுருத்தி ராதிபேதங்க ளொன்றற் கொன்றுயர்வுதாழ்வுறுமே. (கக)

நிகழ்பிரமாணசித்தமேயாகநித்தியவத்துவொன்றுகிப் புகழுறவிருக்கமோகத்தினுலேபுகல்பிரமாணநம்பிக்கை யிகழ்பவராகியொன்றற்கொன்றதிகமியம்புறுநூணங்கற்பித்துத்[றே. திகழ்தராவிவாதஞ்செய்துகொண்டிருப்பார்தெரிதரின்வியப்பதுவன்

இயலுருத்திரனுங்காரணசிவனுமியாரினுமதிகரென்றோரார் மயலுடைமனத்துநிருதராப்பிறந்துமருவுலகத்தழிதருவார் தயலொருபாகத்தம்பிராணநிகத்தன்மைமாபாவிகளாளுர்க் குயலுறநாளுந்தோன்றுவதின்றுலுத்தமப்பெருந்தவமுனிவீர். (கஉ)

மேவுபற்பலசன்மங்களிற்சுருதிமிருதிகன்மங்களைவிருப்பி னேவுருதியற்றியுள்ளபுண்ணியச்சீருயிர்கட்குப்பிரமாணத்தாலும் பாவுறற்றருக்கத்தாலுமெம்முளத்துப்பங்கயச்சேவடிபதிப்போன் றுவுறுவதிகத்தன்மைமற்றியற்கைத்தன்மையிற்றோன்றிடுமாதோ.()

விதந்திடுகிரமசாதகமானமேவுபல்சுரரைபுமொருவிச் சுதந்திரமாகமுத்தியையளிக்குந்துலங்குபேரருட்சிவந்தனையே நிதந்தழைதரவுட்டியாளிக்கவேண்டுநிகழ்தருவிகற்பமில்லாத விதந்தருதூயபரசிவஞானமெய்திறனேயியன்முத்தன். (கடு)

மறைமுதறனக்குநாமரூபங்கண்மருவுதலில்லேயெனினுங் கறையறவிளங்குமாயையினுலேகற்பிக்கப்பட்டனவாகு முறைநயச்சிவனமாதேவன்முற்பெயர்களுருத்திரனுமங்களாகு மறைபரம்பிரமமுதற்பெயர்பரதத்துவவிர்வாசகமாமால். (கசு)

நீதரனுராயணன்முதற்பெயர்கள்சிவனுடையோகநாமங்கண் மேதகுசிவமற்றரூபமாயிருந்தும்விழைந்துபாசிப்பவர்நிமித்த மோதுசந்திரகேசரநீலகண்டமொளிர்தருமருத்தகாரீச மாதரானந்ததாண்டவமுதற்பல்வடிவமுற்றவிர்தருநாளும். (கஎ)

சகலமூர்த்திகளில்லாதவனுயுந் தழைசகத்தே மூர்த்தியாயுந், துகளறவிருக்கும்பரசிவன்றனச்சுச்சொற்றமூர்த்திகணுத்தமென் றகலமாமறைகூறுங்குணமூர்த்தியாகியவருத்திரமூர்த்தி [போல். யிகழ்வருமபேதஞ்சிவத்தொடுமெல்லாவிலக்கணங்களாலுந்தீயம்

மூராரிமுன்னுனமூர்த்திகளந்தமூர்த்தியோடொப்புமுரைவென்றும் பராவுமுன்னுரைத்தபரமுதலாகப்பகர்பரதத்துவப்பெயர்கள் புராதனமானவுருத்திரன்றனக்குப்பொருந்தியருடிவாசகமா மராவணையவன்முற்சுரர்க்கவிர்பரதத்துவயோகத்தாற்பெயராகும்.()

பரசிவன்மூர்த்தியனுக்கிரகத்தாற்பகர்பரதத்துவஞானம்
வரமுறத்தோன்றுமவ்வனுக்கிரகம்வண்பூசைதியானமாதிகளால்
விரவுமொள்ளொளியாய்ச்சிவமெங்குமேவவுமுயிருணராமை [ர்.
கரவிவம்மூர்த்தியனுக்கிரகத்தைக்ககக்கொளாமையினெனவுணர்வீ

பற்பலவுயிர்க்கும்பயன்மதிச்சடையப்பரசிவனெருவனேயென்
றும், பொற்புறுபோக முத்தியுமளிக்கும் புண்ணியனுதலினுலே, யற்
புறுமுளத்தோடனைய மூர்த்தியையே யனுதினம்பூசிக்கவேண்டும், விற்பசுங்கழையான்மலர்க்கணை துளையாமெய்யுடை மெய்மைமாத
வத்தீர். (உக)

இருபத்தேழாவது

பரசிவசொரூபவிசாரமுரைத்த வத்தியாயமுற்றிற்று.

ஆ அத்தியாயம் உள-க்குத் திருவிருத்தம் டுஅகூ.

வ

இருபத்தெட்டாவது

சிவலிங்கவிசார முரைத்தவத்தியாயம்.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

வெளிவளியழனீர்புவிமதியிரவிவிரும்பியமானனிவ்வெட்டு
மளிமிகுதனதுமூர்த்தமாவுடையானளிமுரல்கடிக்கையந்தொடையா
னளிமலர்ச்சடையான்பாததாமரையேநாடுவீர்பரசிவசொரூபத் [ம்.
தெளிதருவிசாரஞ்சொற்றனந்தெளியச்சிவலிங்கவிசாரமுமுரைப்பா

பொலிதருமிலிங்க மெனுமொழிக்குரைக்கும்பொருள்பிரகாசக
மென்பர், மலிதருமறிஞராதலாற்சிவமேமன்னியலிலிங்கமாமந்த, வல
ர்புகழ்ச்சிவந்தான்சுயம்பிரகாசமாயிருத்தலிற்சடம்போலச், செலவறு
வேரூர் வத்துவாற் பிரகாசித்திடப்படுவதன்றுணர்வீர். (உ)

பழிதபவெவற்றையும் பிரகாசப்படுத்தலிற் சிவஞ்சடமென்று,
மொழிதல்கூடாது மொழியினெவ்வத்துக்களுக்கு மொய்பிரதீதியின்
றிக், கழியுஞ்சுனியமாய்ச்சுனியசித்திகழியவு நன்றுநன்றென்னிற்,
கொழிபிரமாணஞானமொன்றின்றிக்குறித்தசுனியசித்தியுறுதே.()

ஆதலிற்சிவமேயெவற்றையும்பிரகாசஞ்செய்வதறிமினிவ்வாறே
வேதமுமுரைக்குஞ்சிலர்சிவனுடையவிலிங்கமாலெனவிளம்பிடுவர்
காதல்செயுடைமையாக்கல்கூடாதுகரிசறுநூல்வழிபோகிப்
போதமுற்றுயர்ந்துசிவப்பிரகாசம்புணர்ந்துறவிளங்குமெய்த்தவத்தீர்

(எண்சீரடியாசிரியவிருத்தம்)

மறையினந்தஞானமே யிலிங்கமென்பர்சில்லோர் மன்னியகற்
சத்தியேமயிலிங்கமென்பர்சில்லோ, ரறைமிருதிபுராணமுதலியதூல்
களாலுண்டாகுகின்ற ஞானமேயிலிங்கமென்பர் சில்லோர், நிறைவு
பெறுநன்மனமே யிலிங்கமென்பர்சில்லோர் நிகழ்கின்றசித்தமே
யிலிங்கமென்பர்சில்லோர், முறைமையுறுபுத்தியே யிலிங்கமென்பர்
சில்லோர் முண்ணுமகங்காரமே யிலிங்கமென்பர்சில்லோர். (இ)

மன்னியபிராணனே யிலிங்கமென்பர்சில்லோர் மருவியசரீரமே
யிலிங்கமென்பர்சில்லோர், பன்னியவிந்தியங்களே யிலிங்கமென்பர்
சில்லோர் பகருஞ்சத்தாதிகளே யிலிங்கமென்பர்சில்லோ, ருன்னிய
விண்ணுதிகளே யிலிங்கமென்பர்சில்லோ ருலகெலாமிலிங்கமே
யென்பர்சில்லோரிவற்றுட், பன்னியசடங்களுண்மை யிலிங்கமாகா
வாஞ்சுடர்ஞானமது சிலசொருபமேயுணர்வீர். (சு)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

பரசிவந்தனக்காதாரமாமிலிங்கமெனச்சிலர்பகர்வரச்சிவந்தா
னுரவுநித்தியசைதன்னியமாகியொளிர்தலாலெவைக்குமோர்தானே
விரவுமாதாரமன்றியாதாரம்வேண்டுவதின்றதற்கெவைக்கும்
வரமுறுதாரமாயவான்றனக்குமற்றுமாதாரமொன்றுளதோ. (எ)

ஆதலிற்சிவமேயிலிங்கமென்பதனுக்கையமின்றுணுஞ்சித்த
மேதகுபரிபாகப்படியுயிர்கள்விழைநலத்தியானபூசாதி
காதலிற்புரியக்கருதியாதாரங்கற்பித்ததாகுமாலுணர்வீர்
சாதலும்பிறப்புங்கடந்தபேரின்பந்தடையறப்பெறமுயலுவதீர். (அ)

சிலபெரியோர்களுலகங்கள்யாவுஞ்சிவத்திடையிலயமாதலிலு
னலமருவிலிங்கமென்றுபேர்வந்ததெனவில்வார்கள்சுத்தியிடை
யலர்வுறவாரோபிதமுறுவெண்பொனதனிடத்திலயமாகுங்காற்
சலசமென்றுரைக்குஞ்சுத்திமாதவத்தீர்சத்தியமாயிருப்பதுபோல். ()

பரசிவத்திடமாரோபிதமானபவஞ்சமச்சிவத்தொடுங்கிடுங்கா
லுரவுசேருண்மையாய்ச்சிவமிருக்குமுரைத்தவிவவாறெல்லாவுலகும்
விரவுறவிலயமாவதனுனுமேதகுசிவமிலிங்கந்தான்
கரவில்சில்யோகர்மெய்யிலுதாரங்களினமரிலிங்கங்கடொழுவார். ()

ஆதியோடந்தமில்லதாயழல்போலவிர்நிறமுளதாய்க் கீழ்முகமா
ய்ச், சோதியார்தருமத்தியத்தறைகின்றசயம்புவிங்கத்தையுங்கோடி,
நீதில்சூரியர்போ லொளிர்வதாய்ப்பந்தஞ் சிதைப்பதாய்க்கோமள
மாய்மே, லோதியமுகமாய் மூன்றுந்தானத்தி னுறையிலிங்கத்தையு
மாதோ. (கக)

கோடிசக்திரர்போ லொளிர்வதாயரூபங்கொண்டதாய்ப்புருவ மத்தியத்து,நாடியபரையோடினிதமர்ந்தருளுநன்மகாலிங்கத்தையுஞ் சா, கூடியகுரவனனுக்கிரகத்தாற்குறைவறவோர்ந்து கொண்டன்பி, னீடியசீர்த்திமுனிவர்காள்போற்ற னெறியெனப்பகர்வர்கற்றுணர்ந் தோர். (கஉ)

உரைசெய்பலிலிங்கமாய்ச் சிவம்பரையோடுறைதலின்யாவரு மன்பிற், புரையறப்போற்றப் படுவதச்சிவமே புகழுறுமிலிங்கமெய் யோர்ந்து, விரைமலர்புனலாதிகள்கொடு மனுவின்விதிப்படிநாடொ றும்விடாது, கரையறுமன்பிற்பூசிப்போர்பத்தங் கழிதீதுமுத்தியை யுறுவாரால். (கந)

இருபத்தெட்டாவது

சிவலிங்கவிசாரமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் உஅ-க்குத் திருவிருத்தம் சுஐ.

இருபத்தோன்பதாவது

சிவத்தலவிசாரமுரைத்த வத்தியாயம்.

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

பெண்சுமந்தருளும்பாகமுமாகப்பிறைசுமந்தருள்சடாமுடியுங் கண்சுமந்தருளுநெற்றியுமுடையான்காமர்தாள்சுமந்திடுமனத்தீர் பண்சுமந்தருளுமறைமொழிப்படியேபகர்ந்தனஞ்சிவலிங்கவிசார மென்சுமந்தருளுஞ்சிவத்தலவிசாரமினியியம்புதுமுணர்ந்திடுமின்.

கட்டுவார்கிழித்துமார்பிடங்கவர்ந்துகவன்றிடைநடுக்குறவண்ணஞ் தெட்டுமாதிரமுமிடமிலையென்னவெழுந்தபேரிளமூலத்திருமான் முட்டுறுவமுதச்செய்யவாய்த்தேறன்முழுக்கவுண்டுண்ளங்களிக்கு மட்டுவார்ந்தொழுகுறுவிரைத்துளபமாலிகைதுயல்புயமாயன். (உ)

மதியகிரிஞ்சுங்கதிர்முடிக்கயிலைமால்வரைச்சாரலையடைத்துத் துதிபெறுவெண்ணீறழகுறத்தரித்துத்தொழுதகுகண்மணிபூண்டு பொதிதருமன்பினிருஞ்சடைபுனைந்துபொற்பவற்கலையுடுத்திருந்து கதியருள்பரமன்பதமுளத்தமைத்துக்கடுத்தவம்புரிந்தனன்மாதோ.

ஆயகாலயினேராயிரங்கோடியளிக்குலமுண்டெங்களிக்கப்,பா யதேன்பிலிற்றுநறுவிரைக்கடுக்கைப் படலைதாழ்செஞ்சடைப்பெரு மா, னேயமார்காட்சிகொடுத்தனனுகளெரேலெனமாயவனெழுந்து, தூயபேரன்பாற் பணிந்துசூழ்ந் தவந்து தோத்திரஞ்செய்யலுற்ற னனே. (ச)

அகரமுன்னுகவுரைக்குமைம்பத்தோரக்கரசொரூபமாயந்த
நிகரறுவண்ணவருத்தமாயின்னுநிகழுமவ்வன்னமந்திரார்த்தப்
புகரறுசொரூபமாய்ப்பொலியவ்வப்பீசங்களாற்பூசைகாளுந் [றேன்.
தகர்வறச்செய்யத்தக்கதற்பொருளாய்த் தயங்குறுநினைத்தொழுகின்

ஞாதிருஞானஞேயமூன்றினுக்குநான்மறையுரைத்திசொன்றாய்
மாதிருகைக்காதாரமாய்வண்ணமாண்சுரவியஞ்சனவுருவா
யோதுறுமட்டவருக்கரூபமாயொளிர்தருவிபாகப்பட்டறையுந்
தீதிறுப்பொருளாய்மன்னியதேவதேவநின்னடிதொழுகின்றேன். ()

சத்தமாருருவாய்ச்சத்தத்துட்பொருளாய்த் தகுசுயம்பிரகாசமா
ய்ச்சீ, ரொத்தநற்பிரத்தியக்கமுனளவையுள்ளவைத்தினுக்கதோசர
மாய், நித்தநின்மலமாய்நீடொளிர்பிழம்பாய்நிகருயர்வென்றுமிலா
தாய்ப், பத்தருட்கோயில்கொள்வதாய்விளங்கும்பரசிவநினைத்தொழு
கின்றேன். (எ)

என்றுதோத்திரஞ்செய்மாயவன்முகத்தை யெம்மையாளுடை
யவளேநக்கிக், கன்றுகொண்டெறிந்து விளங்கனியுகுத்தகளங்கனி
வண்ணனேயுள்ளத், தொன்றுவதியாது கேண்மதிதருதுமுவந்தென
றின்னுடைத்தலச்சீர், குன்றுவிற்கொண்டா யுரைத்தருளென்னக்
குழகன்வாய்மலர்ந்தினிதருளும். (அ)

பரவுமஞ்ஞானமனைத்தையுங்கெடுத்துப்பல்லுயிர்களுக்குமின்புத்தி
யுரவுறுமுத்தியளிக்குநந்தலங்களுரைசெயிஞத்தியான்மிகஞ்சீர்ப்
புரவுகொளாதிபௌதிகமென்னப்போற்றிருவகைப்படுமிவற்றுள்
வீரவுறுமுன்னதியோகீகட்சிசைவாய்விளங்கிடுபிரமசந்திரமும். (கூ)

வதனமண்டலத்தினேத்திரங்காதுவார்தருநாசிகபோல
மிதமுறுமோட்டஞ்சிரமிவைகளுமேர்ச்சந்தியக்கிரங்களோடிருக்கும்
பதமணிக்கரமுமுதரம்வெந்நாபிபக்கமோரிரண்டுமோராறு
சுதீம்கலாதாரமும்மற்றுமாகுஞ்சொற்றபின்னதுமனேகங்கேள். (கo)

புரிமுறுக்குடைந்தமலர்த்தவிசுறையும்போதர்கணம்பதம்வணங்கிக்
கரிசகறத்தம்பதமுறச்செலுங்காற்கவின்றதம்மனேவியரேயென்
றரிமதர்மழைக்கணரம்பையர்செங்கையங்கையிற்பற்றுபுராண
விரிகதிர்க்கற்றைவெள்ளெனவீசும்வெள்ளியங்கயிலைமால்வரையும் ()

நிறைகடல்வறப்ப வாய்மடுத்தெழுந்த நெடுங்கமழ் சூற்பசுமுகி
லெக், கறையடிநால்வாய்க் காற்றெறிசெவிக்கார்க் கடம்பொழிகளி
றெனக்கருதி, யறைமுழக்கெழுப்பி மூடங்குலமடங்க லச்சுறப்
பாய்ந்துபின் வெள்குந், துறைபலமருவி நெடுவளம்படைத்த தூய
காளத்தி மால்வரையும். (கூ)

வேழவன் மருப்புங்கொடுவரித்தோலும்வெள்ளியமித்திலக்குவையும், காழகிற்றுணியுஞ் சந்தனக்குறடுங் கையரிக்கொண்டு கன் கொழுகிச், சூழ்பவத்தொடர்ச்சி மூழ்குநர்க்கொழித்துத் துலங்குறு கங்கையாறமைந்த, வாழ்வினிற்சிறந்துதாழ்வறப்பொலியும் வாரண வாசிமாநகரும். (கக)

தடிபடுமுசில்கடவழ்தருபொங்கர்த் தண்ணரு வெள்ளம்வாய் மடுத்துப், படியப்புறப்பல் லாயிரங்கோடிபைஞ்சிறைத் தும்பிகள் பாடக், கடிதுறுங்கமலச் சேக்கையிற்றுயிலுங் காமருவெள்ளணம் விழித்துச்,சுடிகைமின்னுரோடாட்டியர்தடஞ்சூழ்சோமமாதப்பெரு நகரும். (கச)

இடரறத்தழைந்துமணந்துறத்தண்ணென் றிலகுகற்பக நிழலமரும், படர்நெடுங்கடுங்காற்றெறிமுறச்செவிவண்பகட்டெழிற்றெய்வ மால்யானை, யிடர்வலிப்புழைக்கை நீட்டுபுறியாவந் தனிர்க்குளகு கொண்டுவப்பச், சுடர்நெடுவானங்கிழித்தெழுசோலைசூழ்ந்த கேதார நற்றலமும். (கரு)

வளமலிசாரனெறிப் படருவவுமதியுடலா வயிற்பயிலுங், களர் நகைக்குறத்தி மார்முலைக்கோட்டாற்கிழிதலினுறைத்ததெள்ளமுது, பளகமிக்குறவம் முலையிடைத்தங்கப் பொள்ளெனக்குறவர்கணைக் கித், தளர்வகன்றமரர்போற்களித்திடுசீ சயிலமென்றுரைக்கு மால் வரையும். (கசு)

பருமணிவயிரத் திரள்கதிர்சமழ்க்கப் பயிலொளிச்செம்மணித் திரளொண், கருமணித்திரணீ டலைக்கரத்தெடுத்துக் கரைக்கமூ னினங் கழுத்தொடியக்,குருமணிக்கதலிக் கூன்குலைதருமாங் குலைபல முறிதரவெறியுங், திருமணிமுத்தா நதிபுடையுடுத்துத்திகழ்விருத்தா சலத்தலமும். (கஎ)

குறத்தியர்நெடுங்காற் சுற்றுழியிதண்மேற் கொண்டுசெம்மணி கவணிறுவிப், புறத்தியல்செவ்வாய்ப் பைஞ்சிறைக்கிள்ளை பொலி தொடிக்கட் செழும்பூவை, கிறத்தியனெச்சிப்பாசிலைநீர்தா ணிகழ் மயிறிளைப்புனத்தகலத், திறத்தியன்றெறியும் பெருவளச்சார நிகழ் தருகோபருப்பதமும். (கஅ)

கொழுமலர்த்தடகின் றெழுமிளவாளை குயின்வயினுறுகருக் கலக்கி, முழுமதிக்கடவு ளுடல்கிழித்தண்ட முகட்டையுந்துளைத்து மேலெழுந்து, பழுதறப்புறநீர்ப் பயிலிளவாளைப் பாங்கடுத்தறவு பாராட்டெஞ், செழுமையிற்றவிராத் தண்ணடைபலசூழ்சிதாநிர்த்த மாத்தலமும். (கக)

நலியிடைவாய்விட்டமுதமுதிரங்காடொறும்பருத்தெழுமுலையார், மலிநிறச்செம்பொனடுக்கு மாளிகைமேல்வண்சிலம் பொலித்திடவேறி, வலிமிகுவானக்கற்பகவிடபம் வளைக்கையின் வளைத்தலர் பறித்துப், பொலிகுழற்கணிந்து மீளுறுமாதிபுரமெனும் பெருந்திருத்தலமும். (உ0)

போற்றவுந்தனதுபிழையறிந்தூடல்பொருந்தியமந்திதன்சினங் கண், டேற்றகூன்புறச்செம்பிள்ளுடைக் கடவெனன்செய்வாமென்றுளத்தெண்ணிச், சாற்றருங்கடிப்பிற் றுயெழீஇக்கற்ப தருக்கனி கொணர்ந்துநன்கூட்டி, யாற்றலின்மகிழ்வித் திடுபொழிற்சுவேதாரணியமென் றறைதிருத்தலமும். (உக)

பண்புறுகுமரிப் பேட்டனமுயிர்த்த பார்ப்புறுதாமரைத்தொட்டி, னண்புறுநுணலை பாய்ந்தினிதாட்ட நலம்புனை வண்டுதாலாட்டக், கண்படுதடத்துட்கவரிகளுறுது கருவரால்பாய்ந்து பாய்ந்தோட்டுந், தண்பணைமருதமுடுத்தொளிர் திருத்தானமென்றுரைத்திடுதலமும். (உஉ)

அலைமுழவதிர்ப்பச்செழுமடநாரையணிகெழுபீலிகின்றிரட்டத் தொலைவறுமளிகனின்னிசைபாடத்தொகுமரைமலர்விளக்கெடுப்ப நிலையுடைவாவிகொழுவிருந்தூட்டநிறைந்தனச்சேவலும்பேடுந் தலைமணம்புணருந்தண்பணைக்காசத்தலமெனவறைதிருநகரும். (உங)

ஊடுறுகாலைமாதர்களெழுப்புமொளிரடிச்சிலம்பொலியாலுங் கூடுறுகாலைமைந்தர்களெழுப்புங்குருக்கொண்மேகலையொலியாலு நீடுறுகமஞ்சுற்கருமுகின்முழங்குநிறையொலிசெவிமடாவளத்திற் பாடுறுசீர்த்திபற்பலவுடைத்தாய்ப்பிறிதிகோடிகாநகரும். (உச)

முழவமுவாரங்கும்புனவமுப்பொதியமுகிலமுதுறங்குகோபுரமுங் குழவமுமுலையாராட்டமுத்தடமுங்குலமலரமுக்குளிர்பொழிலு மழவமுமனையுமறையமுக்கிடையும்வயங்குதலமுக்கடைத்தலையும் விழவமுமறுகுமிகக்கொநாளும்விளங்கிடைமருதெனுநகரும். (உசு)

மின்னிகர்மடவார்மைந்தர்நீராடன்மேவுழிறுமலரொளிர்பூண் மின்னிளமுலையிற்பதிந்தொறுங்கணவர்தொடிக்கரம்பட்டனவென்றும், பன்னிளமுகைமார்புறுந்தொறுமாதர்படாமுலையுற்றனவென்று மன்னியமகிழ்ச்சியுறப்பொலிகமலவாவிமங்களவமிசகமும். (உசு)

கள்ளமுப்பொழிலுங் காலமுப்புனலுங் கதிரமுச்செறுவும் வெள்ளன்னப், புள்ளமுத்தடமும் புறத்துறவக்கத்துப் பொன்னமுமாடமாளிகையுங், கிள்ளமுக்கொங்கை மாதருமும்புலவிகெழுமடவாரடிசூட்டிக், கொள்ளமுச்சென்னி மைந்தருமுறக்கொள் கும்பகோணப் பெருநகரும். (உஎ)

குடங்கையிற்பொலிந்த கூரயிலனுக்கிக் குறையறுகொலைத் தொழில்பயின்று, விடங்கெடக்கறுத்துக்காவதநீண்டு வெஞ்சமர் வீரத்திடக்கூற்றை, மூடங்கல்விட்டழைக்கு முழத்தியர்கருங்கண் முழுநிழலறலிடைத்தோன்றத், தடங்கையின்மள்ளர் கயலெனவரிக் குந்தக்கணுவருத்த நன்னகரும். (உஅ)

வெடிபடுவாளைதாக்கலிற்கழன்றுவீழ்தருதென்னைமுப்புடைக்காய் கடிபடுகமுகம்பழக்குலைதறிக்கஞ்ல்புறமுட்கனிசிழித்து வடிபடுநறும்பூமாங்கனியுகுத்துவாழையங்கூன்குலைசாய்த்துக் கொடிபடுகமலத்தடத்திடைமிதக்குங்குளிர்வளச்செறேச்சுரநகரும்.

சங்கினமுருத்த நித்திலக்குவையுந் தழைபுனற் காவிரிகொணர்ந்த, பொங்கிளங்கதிர்நேர் செம்மணிக்குவையும் பொலிதருவச்சிரக் குவையுங், கொங்கிவர்செறுக்கட் குவிதலிறகடைஞர் கூரலப்படையினிறுத்தி, யிங்கினிச்செயலென் னெனவுனும்வளச்சீ ரேய்ந்த வன்மீகநன்னகரும். (உ0)

வன்றிறன்மோட்டுப் பிணர்மருப் பெருமைமரகதக் களிர்த்தெனக்கவின்று, துன்றிருஞ்சாலிச் சூற்பயிர்குதட்டிச் சுரும்பரற்றிடக் கழைகறித்துப், பொன்றயங்கம்போ ருகதடமுழக்கிப் பூத்தசெவ வாம்பல்வாய்மென்று, கன்றுடுதேமாநுழுறங்குங்கசாரணியத் திருநகரும். (உக

இருணிறப்புன்னைக்குடம்பையுட்புலர்தவிரும்பெடையூடறீர்த் தின்பம், பருகுறப்புகுங்கா னெடுங்கழிக்குவளை பார்ப்பதென்றுள் ளுறநாணிக், குருவனப்பெடையோடரசனம் யானைக்கொம்பென வரும்புகடோற்றி, யருகுறப்பொலிந்த கைதையுட்புகும்வே தாரணி யப்பெருநகரும். (உஉ)

தழைமலர்ச்சோலைப் பைஞ்சிறைக்கிளியுஞ் சாரிகைப்புள்ளு மீப்பறந்து, விழைதருவானக் கற்பகதருவாழ் மென்கிளிபூவைக டமக்குப்,பிழைதபதமிழ்சேரைந்திலக்கணமும்பிறங்குறப்பயிற்றுபு மீளும், பழையருஞ்சீர்த்தி கொழுந்துவிட்டிலகிப் படர்திருவாலவாய் நகரும். (உக)

பேதையர்தரளங் கொடுமறுகிழைத்தபிறங்குசிற்றிலாறுமலர்ப் பூங், கோதைகொள்குஞ்சிச் சிறுர்விடுசிறுதேர் குலைத்திடவருவது நோக்கி, யோதைகொண்டெழுந்து மணிக்குழையெதிரும்த்தருளுரு ளாவகைநிறுத்தி, வாதையினகன்று மனமகிழ்செல்வமல்கிய விராம னீச்சரமும். (உச)

கண்ணியவனைத்தூல்குறுஞ்சிவகங்கைப்புனன்மூழ்குபுபாச [ந்து மண்ணியவடியார்மெய்யிடைத்தரித்தவயங்குவெண்ணீற்றொளிபர தண்ணியகதிரோராயிரங்கோடிதழைக்துதித்தெனவிருள்பருகப் புண்ணியம்பழுத்துப்பொலிதருகின்றபுண்டரீகப்பெரும்புரமும்(உஞ),

இன்னுமற்றுள்ளதலங்களுமாகுமிவற்றினுட்சிதம்பரமென்ப
தன்னுபல்போகங்களுமருளுவதாயுத்தமத்துத்தமமேயாய்
மன்னுபல்பாவமனைத்தையுங்கெடுத்துவளர்சிவஞானமீவதுவாய்ப்
பன்னுமம்மருளாற்சேவித்தல்கிடைக்கப்படுவதாய்விளங்கிமோதோ.

சூலவுமாமறைக்குமகோசரமாகிக்கோடிசூரியரெனவிளங்கி
நிலவுமத்தலம்பல்லுயிருமின்படையநியமிக்கப்பட்டதுமாம
விலகுமத்தலத்தியாம்புரிதிருநடனமெம்மருணிரம்புறப்பெற்று
மலரும்வானுடர்முதலளவில்லோர்வாழ்வுறக்கண்கெண்டுவப்பார்.()

சத்தசாலத்துமாறுகொடருக்கசாலத்துழுழ்கியன்பின்றிச்
சித்தமாசுற்றுரைத்தருநடனஞ்சேவிக்கக்கிடைப்புரிதென்று
மொத்தவேதாதிநூலதிகாரமூருதவராயினுமம்பால்
வைத்தபத்தியரேலத்திருநடனம்வாழ்வுறத்தரிசிப்பர்காணும். (நஅ)

அத்தலநடனந்தரிசியான்யாகமாற்றினுமடைதரான்சுவர்க்கஞ்
சுத்தநன்ஞானமூற்றவனேனுஞ்சுடர்கதியடைதரானவன்செய்
வித்தகவறமும்பாவமாமுயர்ந்தவேதியனுயினுமிழிந்தோ
னெத்தகுற்சனமப்பயனிலான்பலவாவுரைப்பதெனமக்கதேபிரிபம்.

தண்ணியமுத்திசார்பவர்தமக்கேதரிசிக்கக்கிடைக்குமத்தலஞ்சீ
ரண்ணியமாலேயறிதியென்றருளியங்கயிலேப்பிரான்மறைந்தான்
கண்ணிய துற்றுமென்றுளமகிழ்ந்துகரியவன்வைகுண்டம்புகுந்தான்
மண்ணியபத்தமுனிவர்காளுளத்துமாண்புறவிம்துணர்ந்திடுமின் (சஅ)

இருபத்தொன்பதாவது

சிவத்தலவிசாரமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் உகூ-க்குத் திருவிருத்தம் கூசூஉ.

ஙூ

முப்பதாவது

பற்பதாரணவைபவமுரைத்தவத்தியாயம்.

(தோசிசகக்கலிப்பா.)

காரணிகந்தரத்திறைவன்கழலணிபொற்பதம்போற்றும்
பேரணிமாதவமுடையீர்பெருந்தேவர்தலைவணங்கு
சீரணிநற்சிவத்தலச்சிறிதேனும்புகன்றிலம்யாந்
தாரணியத்திபெற்பதாரணவைபவஞ்சொல்வாம். (க)

மருவுமறமுழுதுணர்ந்தோர்மகாபற்பம்பற்பமென
விருவகையாகும்பற்பமென்றுரைப்பரெஞ்ஞான்றும்
பெருகுகொடும்பாவநாசம்பண்ணும்பெற்றியஞ்
றிருகறுநல்லுணர்வுடையோர்பற்பமெனச்செப்புவரால். (உ)

மூழுஞானமினிதளித்துமகாபாவமுருக்குதலான்
மழுமானங்கைப்பரனேமகாபற்பமெனப்படுவான்
ருழுசீரம்மகாபற்பசொரூபத்தையடைந்தோர்க்குப்
பழுதாகாத்தவந்தானுதிகளாலாம்பயனென்னே. (கூ)

துரிசறுநன்மகாபற்பசொரூபம்விளங்குறப்பெற்ரே
னரியசிவனெனயாருமறைவர்மறைமூதலான
பெரியநூலோதுபயன்பிறங்குறுமகாபற்ப
வரியதிருஞானமடைகுதலாகுமுணர்வுடையீர். (கூ)

சீர்மருவுபற்பந்தான்சிரௌதமேசுமார்த்தமே
யோர்மருவிலவுகிகமேயெனமூன்றுவகையிவற்றுட்
பார்மருவுமுன்னிரண்டும்பார்ப்பார்க்கும்பின்னென்று
பேர்மருவுமற்றையர்க்குமாகுமெனப்பேசுவரால். (கூ)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

தூயபுகழ்ச்சாபாலவுபநிடதமனுக்களினுத்தூளனஞ்செய்
தாயபஞ்சப்பிரமனுமுதலாயபன்மனுவாலங்கைநீற்றை
யேயவறலாற்குழைத்துத்திரியக்குபுண்டரமூன்றிலகுமாறு
நேயமிகுமைந்திடத்துக்தரித்தல்விதியென்றுரைப்பர்நெறியுளோரே

மேதாவிமுதன்மனுக்களாற்பிரமசாரியுமெய்ப்பிரணவத்தா
லோதார்வமுறச்சங்கியாசியுமுப்புண்டரநன்குறுத்தல்வேண்டுங்
தீதாகாமக்கிரகல்லதிகாரியத்தகையசிறப்பிலாதான்
கோதாகாமனுவினஃதின்றிமுறைநீறணிதல்குணமென்பாரால். (எ)

வெள்ளியநீறுத்தூளனத்தொடுமுப்புண்டரமும்விளங்கக்கோ
ட, நெள்ளியஞானங்கெனநான்மறையுமெடுத்துரைக்குந் திறம்பா
வன்பி, னுள்ளியநற்பாசுபதவிரதமெவனனுட்டித்தா னுயர்ந்தவன்
ஞன், வள்ளியமெய்ஞ்ஞானமுற்றுனெனக்கைவல்லியசாகை வகு
க்குமாலோ. (அ)

பொங்குமழன்முதலானபுனிதமிகுபொருள்களினும்புனிதமிக்க
தங்குலவுநீறதனைமுத்திவிருப்பினாவிடாதணியவேண்டுந்
தங்குமுயிரளித்தல்சுபகானம்விரதந்தானந்தவகல்யாக
மங்குதலின்மற்றுநீறணிதலேயெனமறைகள்வகுக்குமாலோ. (கூ)

மாலயனிந்திரன்மற்றையமரர்மலர்மகளிர்சசிமற்றைவானக்
கோலமடவாரியக்கர்கந்திருவரரக்கர்குலவசுரர்வேதச்
சீலமுனிவரர்மற்றுரிவருளருந்தவமுடையீர்திருவெண்ணீறு
சாலவுமுத்தூளனமுப்புண்டரமாடெறும்போற்றித்தரியார்யாரே.()

பகர்புனிதநீறணியார்ஞானமடையார்கோடிபவமாஞலுந்
தகர்தலுரூர்சமுசாரமாபாவமுடையராய்த்தாழ்வார்கும்பி
புகரில்வருஞச்சிரமபலமுமுரூரவரியற்றும்புனிதமான
நிகரரியபுண்ணியமும்பாதகமாமென்றுமறைநிகழ்த்துமாலோ. (கக)

பலபவப்பாவியருக்கேநீற்றில்வெறுப்புண்டாகும்பண்பார்நீற்றைக்
குலவவுவவாரெலலாமாபாவரெனததெரிந்துகொள்ளவேண்டு
நலமுறிம்மான்மியஞ்சொலவெம்மாலுமற்றெம்முடையகுருநாதனு
மலர்புகழீர்முடியுமோமுடியாதெக்காலத்தும்வாய்மையீதே. (கஉ)

மூப்பதாவது

பற்பதாரணவைபவமுரைத்தவத்தியாய மூற்றிற்று.

ஆ அத்தியாயம் கூ0-க்குத் திருவி க்தம் கூறிசு.

வ

மூப்பத்தோராவது

சிவப்பிரிதிகரமுரைத்தவத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

தவத்தின்மேம்படுசாந்தமுனிவர்கா
ளவத்தினீக்கியருள்செயுநீற்றின்சீ
ருவப்புமேவுரைத்தாஞ்சிறிதினிச்
சிவப்பிரிதிகரஞ்சிலசெப்புவாம். (க)

சவிகொண்மாமறையாற்றழைத்தாகுமத்
துவிதஞானமூந்தூமறையந்தத்தி
னவிருமவாகியத்தாலினிதாகுறுஞ்
செவிகொளெல்லாஞ்சிவமெனுஞானமும். (உ)

உமையொர்பாகருத்தமதாண்டவ
மமையுமூர்த்தமுண்ணும்பலமூர்த்தத்துஞ்
சமைதிபானமுஞ்சங்கரசம்புமு
னெமையளிக்குநன்மைகளேத்தலும். (ங)

இடையறுமலெழுசிவபத்தியு
மடைபவர்க்கருளாரியபத்தியு
நடைகொள்வேதாகமநற்புராணத்து
மிடையும்வாஞ்சையும்வேதநூலோதலும் (சு)

நலவேதாகமநன்குகற்பித்தலு
நிலவுந்நூற்பொருணிச்சயஞ்செய்தலும்
பலருமேத்துஞ்சாபாலமனுப்படி
மலர்வெண்ணீறுவயங்கப்பூணுதலும். (ஙு)

சிரங்களங்கைமுற்செப்புமிடங்களில்
வரங்கொளக்கமணிகள்புனைதலுந்
திரந்தழைக்குஞ்சிவலிங்கபூசையும்
புரந்தவன்படியார்கண்மெய்ப்பூசையும். (சு)

காசியேமுதலாகக்கரைபல
தேசுறுந்தலயாத்திரைசெய்தலும்
பேசுசாந்திமுதற்குணம்பேணலு
மாசின்மூத்தியில்வாஞ்சைவயக்கலும். (எ)

நிலைநிலாப்பொருண்ஞானமுந்தியு
மலைவுறுதவிராகமுமாமகந்
தலைமையாந்தவந்தானமுதற்பல
வலைவுறுதவறங்களுந்தூய்மையும். (அ)

விதியைப்பேணிவிலக்கையொழித்தலு
மதியிறுட்டருடன்மருவாமையுந்
துதியலாணிந்தைசொல்லலொழித்தலுந்
திதிசெய்கோவிற்பணிபலசெய்தலும். (கூ)

பவத்தினீங்கமுயல்வுறுபான்மையு
மூவக்குஞ்சைவவுயர்மறையோர்களீத்
தவக்கொழுந்தெனத்தாழ்தலுமற்றவுஞ்
சிவப்பிரீதிகரமெனச்செப்புவார். (கo)

(கோச்சகக்கலிப்பா.)

சிவமுனிவீரிணைவகளினுஞ்சிவயோகிபணியதிகங்
குவலயத்துமுன்னுளிற்குலாலர்குலத்திடைப்பிறந்தா
லெவரிதழ்த்தூகைக்கருங்கட்டெடியிடைப்பொற்றொடியின்சொ
லுவமையில்லாப்பேரழகியொருத்தியிருந்தாண்மன்மீனு. (கக)

மடங்காட்டுந்தண்ணுடையமனம்போனவழியேகண்
விடங்காட்டிப்பற்காட்டிவிரித்தபடாந்திறந்துமூலைக்
குடங்காட்டிமேல்விழுந்துகொழுத்திடங்கொண்டெழுமல்குற்
படங்காட்டியெவர்பொருளும்பறித்துவக்கும்பாவியவள். (கஉ)

குடம்வேண்டுவார்க்குமூலைக்குடங்கொடுப்பதல்லான்மட்
கடம்வேறுகொடுத்தறியாள்காமுற்றார்தம்மனந்தன்
னிடமாகச்சுழற்றலலாலேற்றுபசுமண்சுமந்த
திடமாறும்வட்டவாய்த்திகிரிசுழற்றுளென்றும். (கங)

சாதியினுங்குயத்திபெருந்தனத்தாலுங்குயத்தியென
வோதியவோர்பெயருடையாளுற்றபொருளாசையினல்
வேதியர்மூவாயிரசைவீட்டிலுண்மிகச்செருக்கிக்
கோதியல்பொனனியீட்டிக்கொண்டிறையுமவள்பாங்கர். (கச)

பதிகளெருசிவயோகிப்பார்ப்பான்சென்ரூண்மூன்னே
விதிவழியேயவள்புணர்ச்சிவிழைந்துகணியுபசரித்துப்
புதியகலவிகள்காட்டிப்புணர்ந்துதீர்த்தாள்வலிய
மதிதுதலாரணைத்திடுங்கான்மறுத்தகல்வல்லவர்யாரே. (கடு)

ஊழ்வலியாலவள்புணர்ச்சிக்குடம்பட்டவந்தணன்பின்
வாழ்வகைதென்கயிலாயமருவுதற்குவெளிக்கொண்டான்
சூழ்வினைபோலவளும்பின்ரூடர்ந்தாண்மற்றென்செய்வான்
ரூழ்வினையாமென்றுணர்ந்துஞ்சம்மதித்துடந்தனனே. (கசு)

சீகாளத்தியையடைந்துசிவபிரான்சேவைபுரிந்
தாகாயத்தவர்வணங்குமத்தலவாசஞ்செய்தான்
போகாளற்பொடிமவற்குப்பொருந்துபணிவிடைசெய்து
மாகாதற்கொடியுமுடன்வதிந்தனளானெடுங்காலம். (கஎ)

யோகிபணிசெய்தாளென்றும்பர்பிரான்மகிழ்ந்துகல
மாகியமோக்கங்கொடுத்தாளுதலினுல்யோகிபணி
வாகியஉத்தமமாகுமற்றிவற்றுள்யாதேனும்
யூகிகளாய்ப்புரியார்பாலுமைமகிழ்நனுவப்புறுமோ. (கஅ)

முப்பத்தோராவது

சிவப்பிரீதிகரமுரைத்த வத்தியாய மூற்றிற்று.

ஆக அத்தியாயம் நூக-க்குத் திருவிருத்தம் சுஎஉ.

உ

முப்பத்திரண்டாவது

சிலமறையோர்க்குச்சிவபத்தியில்லாமைக்கேது உரைத்த வத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

சாற்றுமறையாகம நன்னெறிதழுவிப் புறநெறிகடவிரதீத்துப், போற்றுதிருவெண்ணீறுங் கண்மணியுமைந்தெழுத்தும் பொருளாக் கொண்ட, வாற்றலுடைமாதவத்தீர் பாசிவப்பிரீதிகரமறைந்தாம்பு விற், ரூற்றியசின் மறையோர்க்குச் சிவபத்தியிலாமைக் கேதுவுஞ் சொல்வாமால். (க)

பம்புமுயிர்க்கருமத்தாலுங்கால்பரிபாகத்தாலுமுன்ன
ரம்புவியின்மழையீராரூண்டின்றிவற்கடமுண்டாயிற்ரூக
வெம்புபசிநனிவருத்தக்கண்சாடிமுகம்புலர்ந்துமேனிவாடி
நம்புமிருபல்லுயிருமுணத்தகாதனவுமுணயந்தவரிலோ. (உ)

அக்காலேச்சிலமறையோர் பகிவருத்தகனிவாடி யாவிசோர்ந்து,
திக்காடை புனேந்தபரன் றிருவடியுள் ளகத்தமைத்த செல்வஞஞி,
முக்காலங்களுமுணருந்தவப்பெருமைக்கௌதமமாமுனிபன்முன்பு,
புக்கார்வத் தொடும்வணங்கிப் பகிவருத்தங்களேத்தெம்மைப் புரத்தி
யென்றூர். (ஈ)

மறையவர்தமெலிவுவிழி வெதும்புறக்கண் டியர்சைவ வாய்மை
பூண்ட, குறைவிறவக்கௌதமனுள் ளஞ்சலீர்வருத்தமெலாங் குமை
ப்பாமென்று, நிறையபயங்கொடித்துயர்த ஞச்சிரமமிருக்குமகனில
நீர்முன்னு, வறைவளங்கள்பலமல்கிச் செழிப்புறத்தன் .றவவலியா
லாக்கிஞனே. (உ)

மைந்தர்மடவார்மற்றோ ரொடுந்தன்பா லடைந்தவந்த மறை
யோருக்குச், சந்தமிகுமேனதனதானிய மாடைமுதற்பலவுந்தழை ப
ல்கி, வந்தபிணிமுதற்பயங்களறப்போக்கிமறையொழுக்கம்வயங்க ப
பூட்டிப், புந்தியிழைத்தனவுளித்திவவாறுபன்னுளுமபுரந்தான்மன்
னே. (ஊ)

மழைபெய்துபின்னுலகஞ்செழித்ததுதத்தமனூர்க்குமருவவெண்
ணித், தழைவெய்துமறையவரோகோ தமனைவிடைகொடுவெனவுந் தா
ராளுகக், குழைவெய்ச்சிகாவதை செய்தாணிவன்றன் கூட்டுறவு
கூடாதென்று, பிழைபெய்தம்மறைபவ ரக்கௌதமற்கோர்நிந்தை
மொழிபிறக்கினுரே. (ரு)

தீயமறையவர்பொய்யேகற்பித்தநிந்தைமொழிசெவியிற்கேட்டுத்
தூயதவத்திருமுனிவன்றிவமற்றிவரென்னசொன்னுரென்று
காயழலிற்கண்சிவப்பநனிவெகுண்டுசெய்தன்றிகழியக்கொன்ற
பாயவினையம்மறையோர்முகநோக்கிக்கொடுஞ்சாபம்பகரலுற்றான்.

பரசிவன்றன்சொரூபத்தமூர்த்தியினும்பத்தியினும்பகர்நாமத்துக்
கரமிகுமெய்ஞ்ஞானத்தமற்றவன்பொன்னுலையநற்றரிசனத்தும
வரமிகுவிபூதியக்கமணிதரிக்குஞ்செல்வத்தும்மற்றுமுள்ள
வுரவுமீருசிவவிடயமெற்றினுநும்பனஞ்செல்லாதொழிந்துபோக.(ரு)

நித்தியநைமித்தியகாமியகருமத்தினுநலமேநிகழுஞ்சார்ந்தி
யொத்தியலுத்தாந்திமுதன்ஞானசாதனங்களினுமொளிரும்வேத
வத்தியயனஞ்செபம்பல்யாகத்தம்மேயாகத்தமவிர்தன்னுல்சொல்
சுத்திமிகுதருமத்துறுங்கள்புதுதிசெல்லாதுதொலைந்துபோக. (ரூ)

சிவர்கள்போற்பிறக்திறக்திகின்றமாயன்முதற்சிறிபதேவர்
பாவமறுத்தன்பரையாள்பரசிவனிடங்கெனப்பற்றிமாயுக்
தாவரியமயக்கநுமக்குண்டாகமாபனமுதற்சாற்றுந்தேவர்
யாவர்களுமவர்த்தொழிக்கேற்பனவுமுமக்கருளாதிரிந்துபோக. (கo)

சக்கரஞ்சங்கங்கதைதாமரைமுதலாமடையாளந்தனுவிற்றரிக்கித்
துக்கமிகவரசிலேபோற்பாதிமதிபோற்சுடருந்தீபமேபோன்
மிக்கநுதலங்கிதங்கொண்டுறவட்டவடிவும்விழைந்திட்டுநீவிர்
தக்கதெறியொழுகாதுதீதெறிச்சென்றளறனைத்துந்தாழ்ந்துசோர்க.

புத்திரரைச்சகோதரரை மனைவியரைச்சுற்றமாய்ப் புணர்த்து
ளோரைப், பத்திமிகுமறைநூலை நறம்புனலைத்தருமத்தைப் பழிசேர்
கள்ளை, சுத்தியறுபுலான்மீனை விற்றுழல்கபாடண்டத் துட்டராகி,
யொத்தியலாப்பாஞ்சராத்திரம் பௌத்தமருகமிவற்றுழல்கஞாளும்.

தூங்கலுடைவங்கிசத்தி லுள்ளயாவருஞ்சினத்தியா னுவன்றவா
றே, பங்கமுறவெண்ணில சொல்லுவதெவன்மெய்ப் பரசிவசம்பந்த
பத்தி, தங்கல்சிறிதேனுநமக் கிலதாகவென்றுரைத்தான் றண்மை
மேய, திங்கண்முடிச்சகரன்ருண் மனத்திருத்துதவத்துயர்ந்தசீர்த்
திமேலோன. (கஉ)

அம்முனிவனுரைத்தபடியம்மறையோரப்பொழுதேயாயினர்கள்
விம்முறுமச்சாபத்தாற்சிவபத்தியில்லாதவீணாளுர் [தே
நம்முளர்தேருமின்வெண்ணீறணிந்திலிங்கபூசைசெய்துண்மதியினு
யெம்முதல்வனடியடைவார்மற்றோர்களென்னடைவாரிணையிலீரே.

மூப்பத்திரண்டாவது

சிலமறையோர்க்குச் சிவபத்தியில்லாமைக் கேதுவுரைத்த

வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் கூஉ-க்குத் திருவிருத்தம் சுஅசு.

ஙூ

முப்பத்துமூன்றாவது

பரசிவநாமவைபவமுரைத்தவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

மூடுகார்மலமாயைகாமியமெனமொழிதருமொருமூன்றும்
வீடுமாறருந்தவம்புரிந்தருள்வலிமேதகக்கொடுநின்றீர்
தேடுமாமறையவர்சிலர்சிவபத்திசெயாதழல்வதற்கியாரு
நாடுகாரணமுரைத்தனம்பரசிவநாமவைபஞ்சொல்வாம். (க)

சிவனுருத்திரன்சந்திரகலாதரன்சிகண்டன்மாதேவன்
பவனுமாபதிசங்கரன்விச்சுவன்பாவநாசகன்சாட்சி
தவமிகுத்தவருரைத்திடுபரஞ்சம்புசத்தியர்பிரமஞ்ஞா
ரவமறுத்தெமைப்புரக்குமீசானனகோரன்சத்தியோசாதன். (உ)

ஈசன்சூலியுக்கிரன்பசுபதியரனீச்சரன்பூதேச
னுசமில்லவன்கபர்த்திசருவக்கியனலமிகுபிரசாந்த
னேசமார்கிரீசன்றிரிபுராந்தகனித்தியானந்தன்னு
காசன்றக்கவெக்கியவிநாசகனந்தகாரிபிரபுதானு. (க)

வாமதேவன்றற்புருடன்பவாரிகாமாரிவிசாலாக்கன்
சோமகற்றிரிநேத்திரன்கபாலிசுகோரன்மகாமாயி
பீமன்மூலகாரணன்வன்னிரேதசுபிஞகியெயிடபாங்க
னேமமேருதரன்மயேச்சுரன்சுராட்டிலகுறுசருவான்மன். (ச)

முத்தன்பூரணனந்தரூபன்பற்கன்முழுச்சருவாதார
னித்தியன்வரப்பிரதனிராமயனிற்குணனவேதாந்தன்
சத்தியன்பரதேவதைவியோமகேசன்முழுப்புனேசன்
சித்தமின்புறுதேவதேவனறகரன்றிகழ்பரமான்மா. (டு)

சருவசாதகன்கிருத்திவசனன்கிராதன்பயிக்கன்சாம்பன்
மருவுறுஞ்சமுசாரவர்ச்சிதன்சமுசாரவைத்தியநாதன்
பொருவிலாமகாவிருடிவிநாயகன்புகழ்கொளப்பிரமேய
னிருமலன்விரூபாக்கன்விரூபன்கணேசனேசருவேசன். (ஞ)

புராதனன்சருவஜ்திபுராணபுருடனசங்கன்சீர்த்தி
விராவுஞானசுகன்சுதந்தரனருண்மிகுசுயம்பிரகாசன்
பராவுசோதிப்பிரகாசன்சுவானுபவன்சகநாதன்னே
பிராணன்விச்சுவரூபனிற்பயன்சபாபதிபெருமூர்த்தேசன். (எ)

காலகாலன்விச்சுவாதிகன்கதிரினுங்கதிரொளிச்சபாகாதன்
மூலவாசிரியன்பவமானன்சீர்மொய்த்தவந்தரியாமி
சாலவேத்திடுதிரியகாயகன்சாற்றதிரியன்னே
கோலமார்தருசதாசிவனிரஞ்சனனகொன்றைமாலிகையானே. (அ)

இனியநாமங்கண்முதற்பஞ்சமங்களுமிடுகுறியளவாயே
நினையுமாதித்தவபரசிவனேயெடுதுணர்த்தாநிற்கும்
புனைமூராரிநாராயணனரிமுதற்புகலுநாமங்கள்
வினையிலந்தணீர்காரணவளவினவ்விமலனேயுணர்த்தும்மே. (கூ)

யோகவாசகநாமங்கண்ஞானத்தையுதவிடாதவைநீத்து
நாகரேத்திடுமிகுறிவாசகநாமகீர்த்தனஞ்செய்யின்
மோகநீங்குறுமுழுச்சிவஞானன்முனிவர்காளுண்டாகு
மேகமார்தருமுத்தியுமெளிதின்வந்தெய்திடுமிஃதுண்மை. (கஎ)

முப்பத்துமூன்றுவது

பரசிவநாமவைபமுரைத்தவத்தியாய முற்றிற்று.

அ அத்தியாயம் கூஉ-க்குத் திருவிருத்தம கூகூ.

உ

முப்பத்துநான்காவது

குருவினிடத்துபதேசங்கேட்குமுறையுரைத்த

வ த் தி யா ய ம.

(கோச்சகக்கலிப்பா.)

அரவன்டால்வெண்ணீற்றனடிக்காளாகியதவத்தீர்
வரவன்பால்சிவநாமவைபவஞ்சொற்முமினிமேற்
பரவன்பால்வழிபடுநற்பண்புடையமாணாக்கன்
குரவன்பாலுபதேசங்கொள்ளுமுறைவிள்ளுவாம். (க)

சத்தியங்கள்ளாமைமுதற்றருமங்களுடையானு
யொத்தியலாக்காமாதியொழிந்தானுய்மேம்பட்ட
பத்திமிகுமாணாக்கன்பளகில்குரவனேயடுத்து
நித்தியம்பூவாதிகளாளிகழ்பூசையினிதாற்றி. (உ)

ஒருமூவாயிரமேனுமோரிரண்டாயிரமேனு
மருவோராயிரமேனும்வாய்த்தவளவையினேனும்
பொருவாதபொற்காசுபொலியவடியுறைவைத்துக்
குருபாதஞ்சிரந்தீண்டக்குலவுபலதரம்வணங்கி. (ங)

முன்னின்றுவணக்கமொடுமுழுதுணர்மெய்க்குருபானே
மின்னின்றபுரிசடையோன்மேதகுசொரூபத்தை
யிங்கின்றநின்னடியேற்கினிதுபதேசஞ்செய்க
வின்னின்றவருளினெனவிண்ணப்பஞ்செயவேண்டும். (ச)

சற்குருவும்புனிதமாய்ச்சனமடரப்படாததாய்
நிற்பயங்கொணபிறர்துங்கழ்தகைத்தாய்க்கோமயத்தாற்
பொற்புறமெழுக்கிட்டுப்பொலிதரவெண்டிசைகளினு
மற்படிபூரணகும்பமாண்புறக்கொண்டெழிர்வதாய். (ஞ)

தோரணம்விதானநறுந்தூபதீபங்கண்முதற்
பேரணவுமலங்காரம்பெற்முளிர்வதாய்ச்சிறந்த
சீரணவுமோரிடத்திற்றன்குருசெப்பியபடியே
வாரணவுதண்டிலத்தான்மண்டலநன்குண்டாக்கி. (சு)

சந்தமலராதிகொடுதந்திரநூன்மந்திரத்தான்
மூந்தநலமண்டலத்தைமுறைமையுறப்பூசித்துச்
சுந்தரவஞ்சலியோடுதொழுமாணாக்கனேமுறையி
னந்தவொளிமண்டலத்தினுவணமர்தரநிறுத்தி. (எ)

மாதேவதியானமுறம்மாணக்கன்றனைநோக்கித்
தீதேகுபரசிவதிபாண்டானும்புரிந்திட்
டோதேசிண்மந்திரதையுபதேசம்பெறுவானேத்
தாதேய்பொற்கடிக்கைமுடித்தாணுவாப்பாவித்து. (அ)

அம்மனுவைத்தானுமினிதகத்தெண்ணித்தன்குரவச்
செம்மலருண்மொழிப்படியேதிருந்தவுபதேசித்துத்
தெம்மருளுங்கொடும்பாசசேதனஞ்செய்திடவேண்டும்
விம்மமகிழ்விவ்வாறுகுரவனருண்மேவியபின். (கூ)

கருமபரிபாகத்திற்கரையுமாணக்கனுக்குத்
தருமவிடையானருளாற்சத்திபதிவுண்டாகு
மொருமையுறுஞ்சத்திபதிவுண்டாயவப்பொழுதே
பெருமலினசஞ்சிதமபோம்பிணையாயாமயக்கோடும். (கo)

மருவாதகாமியமுமருவடலூழ்புரித்தொழியு
மொருவாதவுடலுறுமூவிழாழியுமிடத்திடனழுவுங்
கருவாதைகழிந்தாணுப்க்கற்பகநாடஞ்சலிக்கப்
பொருவாதவின்பமுத்திபுராணனருளாற்புகுமால். (கக)

சத்திபதிவில்லாருஞ்சத்தியமிக்குடையோராய்ப்
பத்திரவற்கியற்றிப்பகர்தருநல்வேதாந்த
வொத்தியலுஞ்சிரவணஞ்செய்துற்றிருக்கிற்கிரமமா
முத்தியடைகுவருணர்வீர்மொழிந்தவிதமந்தணமே. (கஉ)

மூப்பத்துநான்காவது

குருவினிடத்துபதேசங்கேட்குமுறையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ அத்தியாயம் கூசு-க்குத் திருவிருத்தம் எoஅ.

உ

முப்பந்தைந்தாவது

குருபாரம்பரியமுரைத்தவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

ஆடலில்வல்லபெம்மாணடியிணைக்கன்புபூண்டோர்
வாடலில்லாதபத்திவயக்குறுமெய்மாணக்கன்
பாடலினுறுசீராசான்பாலடைந்துபதேசத்தைக்
கோடலின்மரபுசொற்றுங்குருபாரம்பரியஞ்சொல்வாம், (க)

தும்பியுமிஞ்சிறும்வண்டுஞ்சுரும்பருகிறைத்துபாடப்
பம்பியமுகைவாய்விண்டுபெசுரூவெள்ளம்வாக்கும்
வம்பியல்கடுக்கைமாலைமலிசடைப்பெருமானெங்க
ளம்பிகைபாகத்தோனேயாதியாசிரியனுவான். (உ)

அன்னவனடிமாணுக்கனுபிரமணிவாயம்பொற்
பன்னகப்பாயன்மீதுபயோதரம்போலத்துஞ்சு
மின்னகுமணிப்பூண்மாயன்விளம்புமற்றவன்மாணுக்கன்
கன்னலங்குதலைச்சீஞ்சொற்கலைமகணமணுளன்மாதோ. (கூ)

மொழிதருமவன்மாணுக்கன்முக்குறும்பெறிந்துசன்மப்
பழிதபுதுயர்ந்துநினறபடர்புகழ்ச்சனற்குமார
னிழிவறுமவன்மாணுக்கனிந்திரியங்கள்செல்லும்
வழிமனம்போகவெரட்டாமாதவியாதன்மன்னே. (சு)

மற்றவனடிமாணுக்கன்மாதவத்துயர்ந்தஞரீர்யா
னுற்றவென்னுலவேதாந்தவுண்மைநீர்தெரிந்துகொண்டீர்
குற்றமின்றுகமூன்னங்கூறியபடியாசான்பாற்
பொற்றகல லுபதேசத்தைப்பொற்புறப்பெற்றுக்கொண்டோன். (ரு)

பரிந்துதன்குருவின்பாரம்பரியமிவ்வாறேநன்றுத்
தெரிந்தவரவர்க்குப்போற்றல்செய்தனன்வருவாளுகி
விரிந்தழிதருமஞ்ஞானமேற்றமார்ஞானமுண்டாம்
விரிந்திடுமதனுல்வந்துமேவுறுமின்பமுத்தி. (சு)

உயர்குருபரோராமுபதேசஞ்செய்யுமாசான்
பெயர்கொண்மாணுக்கன்பாசம்பெயர்த்திடானரகில்வீழ்வான்
மயரறவுந்துணர்ந்துமறுவுபதேசஞ்செய்வோ
னயரமாணுக்கன்பாசமகற்றுவனையமின்றே. (எ)

தேசிகனென்பான்றன்கோத்திரவிருடியைத்தன்ஞசான்
பேசியகுரவர்தம்மைப்பிறங்குமைங்கரப்புத்தேளே
மாசில்சண்முகப்பிராணமயிலியற்பரையைவாசம்
வீசியமலரோன்மற்றைவிண்ணவர்தமைப்பணிந்து. (அ)

உண்ணுமாணுக்கன்றன்னையொருவருடஞ்சாதித்துப்
பன்னுபாகத்துக்கேற்பப்பாசநாசம்புரிந்து
மின்னுவேதாந்தவித்தையுபதேசஞ்செய்யவேண்டி
மன்னுகல்வியிறறருக்குமருவிடிற்கேடுமேவும். (கூ)

நற்குரவரைப்பிழைத்தோர்நலமிலார்க்குபதேசித்தோ
சொற்குமுறிவர்களும்பியுழல்வர்கோத்திரநன்ஞான
மற்குழல்கடிமணத்திற்கலுகூலமாதல்போலச்
சற்குருமரபுஞானஞ்சாதகமுத்திக்கோர்வீர். (கo)

மூப்பத்தைந்தாவது

குருபாரம்பரியமுரைத்த வத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் கூடு-க்குத் திருவிருத்தம் எகஅ.

உ

முப்பத்தாறாவது

காளத்திமான்மியமுரைத்தவத்தியாயம்.

(கலிநிலைத்துறை.)

விலகிவில்லுமிழ்மணிப்பணிக்கங்கணவிகிர்த
னலகினுமங்களவழுத்துவாஞ்சையினுளமமைந்தீ
ருலகுபோற்றிடுகுருமரபறிதரவுரைத்தா
மிலகுகாளத்திமான்மியஞ்சிறிதெடுத்திசைப்பாம். (க)

அள்ளிக்கொள்ளலாம்பேரொளியழகுறவீசும்
வெள்ளித்தெய்வமால்வரையமர்விமலனேவிமல
யுள்ளிப்போற்றிமுன்னெருதினமுச்சியெவ்வுயிர்க்கும்
புள்ளித்தோல்புனைந்தாய்விரைந்தருடலம்புகறி. (உ)

எனவீரவ லுமெம்பிரானென்றுமெவ்வுயிர்க்கு
மனகமாகநிவிரைந்தருளொருதலமறைவாய்
கனம்விராவியகருங்குழல்வெண்ணகைக்கரும்பே
மனநிலாவுறக்கேண்மதியென்றுவாய்மலரும். (ங)

அறமணுத்துணைசெயினுமேருவிற்பெரிதாக்கு
மூறனினப்பினுங்கேட்பினுமுறுபலனளிக்கு
மறமிகுத்தவரெய்தொணுமான்மியத்தருவா
னறமலர்ப்பொழிற்றென்கயிலாயநற்றலமே. (ச)

அழிவிலத்தலத்தயர்சூலத்துதித்தவரமையா
விழிகுலத்துதித்தவர்மற்றியாவரேயெனினும்
பழிதபப்புகுந்தொருவருடத்துணைபகரிச்
செழிதலத்துறைவாமெனுநியதிசெய்தனராய். (ஞ)

ஆடுசேர்மதிச்சித்திரைநாளணியிடப
நீடுமாமதிவிசாகநாணிறைபுகழ்மிதுனங்
கூடுமாமதிமூலநாள்குறிகொளுங்கடகப்
பாடுசேர்மதியடுத்தபூராடநாள்பாவாய். (சு)

சிங்கமாமதிவருதிருவோணநாள்கன்னித்
துங்கமாமதிகாழிநாலாமதிமுதலுள்
பொங்குதல்விருச்சிகமதிக்கார்த்திகைபொலிகா
டங்குகார்முகத்திருமதிமருவுமான்றலைநாள். (எ)

மகரமாமதிப்பூசநாள்குடமதிமகநா
ணிகரின்மீனமாமதிகழுத்திரடெடுநாள்
புகரிலித்தகுநாள்களிற்பொங்குபொன்முகரிப்
பகருநீரிடைப்பத்தியின்மூழ்கிநீறணிந்து. (அ

ஆங்குவைகுறுநின் னேயுகம்மையுமன்பி
னேங்குபூசனைபுரிந் தறப்பணித்துசூழ்வுற்றுத்
தாங்குதன்பொருளளவைக்குத்தக்கதானமும்பொய்த்
தீங்குதீர்ந்தவர்க்கீத்திராவுண்ணுதல்செய்து. (கூ)

இனையவாறுருவருடமூர்த்தகுவிரதம்
புனையச்செய்துறைவாரெனிற்பாதகப்புகர்தீர்ந்
தினைவிலாமுத்தியெய்துவதுண்மையெனன்றான்
வனையுமெம்பிரானுமையவள்கேட்டுமகிழ்ந்தாள். (கo)

பத்திமாதவத்தீருலகுற்றபல்லுயிரும்
புத்திமுத்தியுமடைதரப்பொலியச்தென்கயிலே
யுத்தமத்திருமான்மியமுளத்துறக்கொண்மின்
முத்தலங்களும்படிப்பதித்தலமுழுச்சீரே. (கக)

முப்பத்தாறுவது
காளத்திமான்மியமுரைத்த வத்தியாயமுற்றிற்று.
ஆ அத்தியாயம் கூசு-க்குத் திருவிருத்தம் எஉகூ.

வ

முப்பத்தேழாவது
உயிர்கண் முத்திபுருவதற் கேதுவுரைத்த
வத்தியாயம்.
(எழசீரடியாசிரியவிருத்தம்.)

காமனுருடலமெரியெழவிழித்தகண்ணனுர்தண்ணருக்கடுக்கைத்
தாமனுருமையாள்வாமனுரடிகடங்கியவுளப்பெருந்தவத்தீர் [தாம்
மாமனுரணமும்போற்றுதென்கயிலைமான்மியமென்னெடுத்துறைத்த
பூமனுருயிர்களெண்ணையின்முத்திபுருவதற்கேதுவுமிசைப்பாம். (க)

முன்னர்நாணயஞ்சால்சயிமினிமுனிவன்முழுதுணர்வியாதனை
யடையா, வுன்னருமுத்தி யெளிதினினடைதற் குற்றகாரணம்
புகலென்ரு, னன்னவன்மகிழ்ந்து மதிமுடிப்பகவ னடியிணைக்கன்பு
சான்முனிவா, பன்னருமிதனைமுன்னர் நான்முகத்தோன்பாங்கர்
யான்வினவுதல்செய்தேன். (உ)

வண்டுபாண்மிழற்றமுறுக்குடைந்தலருமலர்மகளுளத்தினையுற்
றுத், தண்டுழாய்முருந்தன் றிருவடிவணங்கிச் சாற்றெனவினவுதல்
செய்தான், கண்டுதேராத குதலையந்தீஞ்சொற் கமலயின்செய்யவா
யூற, லண்டுதேக்கெறியும் பவளவாய்க்கொண்ட வுளத்திடையோர்ந்
தா-னெழுந்து. (கூ)

வெள்ளிவெண்கயிலைமேவியபெருமான் விரைமலர்த்தாளிணை
பணியா, வுள்ளியவிதனைத் தெரித்தியென்றிரந்தா னும்பர்கடம்பிரா
னுவந்து, கள்ளியநுளபத் தொங்கலாய்க்கேண்மோ கருங்கடல்வளை
ந்தபாரகத்துத், தெள்ளியநமதுதிருத்தலமனேகஞ்சிறப்புறவுள்ளன
வவற்றுள். (சு)

மன்னியதெய்வச்சிதம்பரங்கமஞ்சூன்மழைதவழ்சிகரத்தென்கயிலை
மின்னியவிருத்தாசலஞ்சுரர்காளும்விருப்புறுகோபுரப்பதஞ்சீர்
தன்னியபவனமீகங்காரணியஞ்சோமகாதஞ்செபேச்சுரமே
பொன்னியல்புரிசைசூழ்தருமாதிபுரத்தலம்போற்றுகோகருணம் (ரு)

நறைமலர்ப்பொழிற்பீமேச்சுரம்புனனாறுமணங்கான்மறைக்காடு
நிறைபுகழ்ச்சுரேவதாரணியங்கேதாரெடும்புனற்கங்கைசூழ்காசி
துறைகெழுபொன்னிசூழ்கும்பகோணந்தூமறைமுழங்கிடைமருதூ
ரறைதருமிராமேச்சுரந்திருவாலவாயிவைமுதற்றலங்களினுள். (சு)

எத்தலத்தேனுமம்மடிப்பூசையியற்றிமெய்யன்பினிற்சூழா
வுத்தமபஞ்சாக்கரந்நினம்பன்னீராயிரமுளத்துறச்செபித்துப்
பத்தர்களடியும்போற்றிநன்குறைவார்பரகதியடைவதுதிண்ண
முத்தவெண்மூரற்றிருமகள்களபமுலைபொருமொய்ம்புடைமாலே. எ

கொடியவனெருவன் மிக்கமாமோகக் குழிகியேயாகியபாவி,
கடிமதுநுகர்ந்து தாயையும்புணர்ந்து கரிகிறந்தையையுங்கொன்றெ
ழித்துப், படியிடையுழிதந்தான்முனமன்னன் பாவத்தாற்பிரமராக்
கதஞ்சார்ந், தொடிவறுமுசலங் கொண்டடிப்பதுபோ லுற்றவாதை
கள்பலவியற்ற. (அ)

தரவறுவருத்தம் பொறுக்கிலா னெங்குஞ் சஞ்சரித்தென்செய்
வாமென்று, பூவுறுபிரமன்முதலியோர்போற்றப் பொலிகிருமதுரை
சார்பொழுது, மேவுறுபிரமராக்கதமொழிந்துவிட்டது மகிழ்ச்சிமிக்
கடைந்தான, பாவுறுசீர்த் தலத்திஞைமென்றும் பாங்குறவதிவமென்
றமர்ந்தான். (கூ)

அத்தலவாசஞ்செய்திடுமவனுக்கழிந்ததுபாவமப்பொழுதே [ற்றூ
யுத்தமமறையோனெருவனேந்தெழுத்தாங்குபதேசஞ்செய்திடப்பெ
னித்தமும்பன்னீராயிரஞ்செபித்தானிறைதருபுண்ணியனுகிச்
சித்தமாகிகந்துபடிநீழற்சிவணியின்புற்றனன்மாலே. (கo)

ஆதலானமதுதிருத்தலவாசமமைமெயன்பினிற்செய்தல், கா
தலார்கதியெண்மையினடைதற்குக்காரணமென்றுவாய்மலர்ந்தான்,
வேதநாயகன்மெய்ச்சயிமினி முனிவாமெய்பெறத் தெரிதியென்றி
சைத்தான், போதமார்வியாத னேதமொன்றின்றிப் பொலிதவவ
தணீருணர்மின். (கக)

மூப்பத்தேழாவது

உயிர்கண்முத்திபுகுவதற்கேதுவுரைத்தவத்தியாய மூற்றிற்று.

ஆ அத்தியாயம கூஎ-க்குத் திருவிருத்தம் எசo.

வ

முப்பத்தேட்டாவது

சருவசாதனமும்விளங்கவுரைத்தவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

செக்கர்வானமதிமுடித்ததேவதேவன் றிருவடிக்குப்
பொக்கமகன்றபேரன்புபூண்டுருயிர்களெளிதினருண்
மிக்கவின்பக்கதியடையவிரும்புமூபாயமெடுத்துரைத்தாங்
தக்கதாயசருவசாதனமும்விளங்கச்சாற்றுவாம். (க)

கோதிலாதகுணப்பெரியோன்கொடியகாமாதிகளொழித்தோன்
றீதிலாததவத்துயர்ந்தோன் றிருந்தவினையும்பணிகொண்டோ
ஞதிநாராயணன்கூறேயாயவியாதமாமுனிவன்
சோதியானமாதேவன்றுணைத்தாட்கமலமுளத்திருத்தி. (உ)

பன்னுளரியதவமுஞற்றிப்பகரோர்தினத்துநீறணிந்து
மன்னுதரவிற்கண்மணியும்வயங்கப்பூண்டைந்தெழுத்தோதிப்
பொன்னுர்மலர்நீராதிகொடுபூசைபுரிந்துமதிரூடு
மென்னுயகனேயடியேனுக்கிரங்கவேண்டுமெனத்துதித்தான். (ஙு)

பரதத்துவமாய்த்தத்துவங்களெவைக்கும்பகர்தத்துவமாகி
வரமூற்றிகிற்சத்தியுமாய்மருவுசடசத்தியுமாகி
யுரவுற்றிமச்சத்திகடம்பேதங்களுமாயொளிர்கின்ற
வரவச்சடையோனெவனவனையடியேன்போற்றித்துதிக்கின்றேன்.

மருவுபிரமன்முதலாகவருக்குந்தேவரைவர்களும்
பொருவில்விராட்டுமுதலாகப்புகலுந்தேவரினைவர்களு
மருமையாரெப்பரசொருபமாகிவிளங்குகின்றபரப்
பெருமையாரும்பரசிவனைப்பேணியானுந்துதிக்கின்றேன். (ஙி)

எந்தச்சத்தையதனுலேயெல்லாச்சகத்துமெஞ்ஞான்றுஞ்
சந்தச்சத்துப்போற்றேறன்றுந்தக்கவெவ்வானந்தத்தா
னந்தவெல்லாமானந்தமயமாய்த்தோன்றுதான்மறைசொ
லந்தப்பரமசிவனடியேயானும்போற்றித்துதிக்கின்றேன். (சு)

காலந்தேசந்திக்கொடுதுகவினவபேதமாயிருக்குஞ்
சாலவனந்தமத்துவிதஞ்சம்பூரணமேயேகமெனக்
கோலமறையாகமமெதனைக்கூறுகிற்குங்கொதித்தெழுந்த
வாலதுகர்ந்தவப்பொருளேயானும்போற்றித்துதிக்கின்றேன். (எ)

எந்தப்பொருளேயுணராமலிடமாருலகிற்சிலருடலைப்
பந்தப்பிராணவாயுவினைப்படருமனத்தைப்புத்தியினை
யந்தக்கரணமற்றவற்றையான்மாவென்றேயுழிதருவார்
கந்தக்கடுக்கைமாலிகையப்பொருளைக்கருதித்தொழுகின்றேன். (அ)

பின்னமென்றுமபின்னமென்றும்பின்னுபின்னமேயென்று
முன்னப்படுவதெப்பொருளாலுற்றமனவாக்காதிகளா
லின்னம்பிரமன்மான்முதலோர்க்கெட்டப்படாதபொருளதுவா
லன்னபொருளாகியசிவத்தையன்பிற்போற்றித்துதிக்கின்றேன்.(கூ)

இனையவாறுதுதித்திறைஞ்சுமென்னுசிரியன்முன்னுக
வினையில்பரமன்றிருக்காட்சிகொடுத்தானுகவியாதமுனி
னினையவரியபேருவகைகரம்பப்பலகாற்பணிந்தெழுந்து
தனையொவ்வாதசருவசாதனஞ்சாற்றென்னப்பரன்புகலும். (கo)

(எழுசீரடியாசிரியவிருத்தம்.)

யாவருமிச்சைசெய்திடப்பட்டவியல்புருடார்த்தமென்பதுதான்
மேவருபுத்திமுத்தியேயவற்றுள்விளங்குமுத்தியென்பதுதான்
பாவருமனேகவிதப்படுமேனும்பகர்தருமுத்தமமாகுந்
தாவருஞ்சாயுச்சியமதற்குற்றசாதனமையுணர்ஞானம். (கக)

அத்தகுமுத்திநித்தியசித்தமாயான்மசொரூபமாயிருக்கு
மித்தகுநித்தியப்பிராத்தமதாயிருக்கினும்பிராந்தியினுலே
யுத்தமமுனிவாதோன்றுவதில்லையுண்மைஞானத்தினஞ்ஞானஞ்
செத்திடப்பிராந்திதீருமப்போதுசெம்மையிற்றோன்றிமுணர்தி.கஉ

அந்தமாமுத்திபரசிவசொரூபமன்றுவேறெனிற்பிராப்பியமே
சந்தமாரப்பிராப்பியமேயென்றிரண்டினுளடங்குதறகுமான் [ந்த
முந்தநின்றதுவென்றுரைக்கினப்பிராத்தப்பிராத்தியாமொழியச்சப்ப
நந்தசாத்தியமென்றேனுநித்தியமென்றேனுநன்குரைத்திடவேண்டும்

சாத்தியமெனிற்சாத்தியபாவவத்துத்தாங்கெடல்போலநித்தியமா
நித்தலிலாநித்தியமெனிற்கதியுநித்தியசித்தமதொப்பே
யேத்துமப்பிராத்தப்பிராத்தியபேதமெனிற்பேதநசியாமையாலும்
வாய்த்தவேகத்துவம்பேதமிருக்கமருவாமையானுமன்றபேதம். (கச)

அப்பிராப்பியமென்றுரைக்கினம்முத்திக்கமைந்தசாதனந்தழுவு
தலென், னுப்பவாதலினுலைமக்குவேறன்றுரைக்குநித்தியசித்த
மன்று, தப்பிலாமுத்தியெனிலசேதனஞ் சாத்தியமாயபாவவத்து
களுஞ், செப்புநாசமும் பிராகபாவமும்போற் சேருமஃதநித்தியத்து
வத்தை. (கடு)

ஆதலினுயர்சாயுச்சியமுத்தியமைந்தவேதாந்தவாக்கியநற்
சாதனஞானத்தாற்கிடைத்திமெற்றைச்சாரூபமுதலியமூன்று
மேதகவடையமறைபுகல்கருமஞ்சாதனம்விளம்பிய துண்மை
நீதறவுணர்தியென்றனன்மறைத்தான்சிவபிரானீவிருட்கொண்மின்

மூப்பத்தெட்டாவது
சருவசாதனமும்விளங்கவுரைத்த வத்தியாய மூற்றிற்று.
ஆக அத்தியாயம் ருஅ-க்குத் திருவிருத்தம் எடுசு.

ஊ

முப்பத்தோன்பதாவது

வேதாவிரோதமுரைத்த வத்தியாயம்.

(கலிவிருத்தம்.)

பிறையவிர்சடைமுடிப்பிரானடிக்குமெய்
யுறைதருமன்புசெய்துவக்குமந்தணீர்
கறையறுசருவசாதனங்கரைந்தன
மறையவிரோதமும்வகுப்பங்கேண்மினே. (க)

(அறுசீரடியாசிரியவிருத்தம்.)

அறையாரணஞ்சத்தியமானவத்துவிதநற்பரமென்றும்
பறையாநின்றகற்பிக்கப்பட்டதுவிதபரமென்றுந்
துறையாரிரண்டாந்துவிதபிரபஞ்சங்காணப்படலானுங்
குறையாப்பரத்தாரோபிதமாய்க்குலவலானுங்கற்பிதமே. (உ)

அத்துவிதக்குவேரூரதிட்டானமானவத்துவித
வத்துவில்லாமையினுமயக்கின்வருகற்பிதத்துவித
வத்துவிடத்தத்துவிதத்திற்காரோபிதம்வந்துளதாமென்
றெத்துமொழியக்கூடாமையா லுமுண்மையத்துவிதம். (ங)

அத்துவிதந்தான்சூனியத்திலாரோபிதமாயினதென்னி
லொத்தவச்சூனியந்தானிவ்விதசொரூபமுள்ளதென்று
ஒத்தமுறச்செப்பிடக்கூடாமையினுற்செப்புஞ்சூனியந்தான்
வைத்தவதிட்டானமதாகாததனுற்றகாதவ்வாறுரைத்தல். (ச)

(மேற்படிவேறு.)

ஆதலினுற்சத்தியவத்துவிதபரமாகியவாரணத்தினுக்குங்
காதலில்கற்பிதத்துவிதபரமானமறையினுக்குங்காணுங்காலே
யோதுபிரதீதியினுல்விரோதயேயுளதாகத்தோன்றினுமு
மேதகுநற்பரமார்த்தத்தவிரோதமென்றுணர்வீர்மேன்மைமிக்கீர்(நி)

அத்துவிதங்காட்சிமுனைப்பிரமாணக்கோசரமாதலினுமந்த
வத்துவிதஞானமுக்கியப்பிரயோசனமீதலானுமந்த
வத்துவிதவத்துவிடம்பிரமாணம்பலவுளமுத்தமமாம்வேத
மத்துவிதப்பொரியீர்முக்கியப்பிரமாணமதாகியமருமாலோ. (சு)

துவிதமறையளவையிச்சியாதுதொகுகாட்சிமுதலளவைகட்குத்
தவிர்தலில்கோசரமாய்முகியப்பயனிலாததாய்தழங்கலாலே
யவிர்மறைமுக்கியவளவையன்றுதுவிதத்திற்காயினுமவ்வேதந்
துவிதத்தையனுவாதமுன்செய்துத்துவிதமேசொல்லுமீற்றில். (ஏ)

மிருதிபுராணஞ்சைவாகமந்தருக்கம்பாரதமுன்விளம்புநூல்கள்
கருதுறுமத்துவிதபரமேயுரைக்குஞ்சிலசுருதிகடியஞ்ஞானப்
பெருநிலிர்த்திமூலமாகவும்பேசுசிலசுருதிபிறங்காநிற்கு
மொருவில்லிதிமூலமாகவுமத்துவிதப்பொருளேயுரைக்குமாலோ (அ)

சிலசுருதிசிவர்சிவசொரூபமெனுஞ்சீவத்துவந்தேகிக்கு, நலமரு
வுமியற்கையென்பர்சிலரதுகூடாதியற்கைகலிலிற்றியின், வலமூறு
னிவெப்பம்போலொழியாதுமணிமனுவாதிகளாஞசங், கலவியதுபோ
. ற்றேன்றுமுண்மையன்ருதலினிதனைக்கருத்துட்டேர்மின். (கூ)

